பண்பாடு

PANPĀDU பருவ இதழ்

Journal

மலர் 6 | இதழ் 2 | 1996 மார்கழி

- நீதி, சட்டம், நீதி நிர்வாகம் பற்றிய இந்துமதக் கருத்துக்கள்
- அறிவாராய்ச்சியியல்
- சி. வை. தாமோதரம் பிள்ளை - பதிப்புப் பணி: ஒரு மதிப்பீடு
- சிற் - கைலாசபிள்ளையும் விபுலானந்த அடிகளாரும்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
18 SEP 2003
நூலகம்
கொழும்பு தமிழ்ச்

14 வது இதழ்

வெளியீடு:

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு - 1996 மார்கழி

விலை - ரூபா 25/=

பதின்னான்காவது இதழின் கட்டுரையாசிரியர்கள்

1. திரு. வி. ரி. தமிழ்மாறன்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர். மனித உரிமைகள் சட்டம் நீதி அரசியல் விஞ்ஞானம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை எழுதிவருபவர்.

2. கலாநிதி. நா. ஞானகுமாரன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மெய்யியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சைவசித்தாந்தம், மெய்யியல் தொடர்பான ஆய்வு நூல்களையும், கட்டுரைகளையும் எழுதிவருபவர்.

3. பேராசிரியர். அ. பாண்டுரங்கன

புதுவைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணிபுரிகின்றார். தமிழ் ஆய்வு தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிவருகிறார்.

4. திரு. இரா. வை. கனகரத்தினம்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். சமய, இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருபவர்.

பண்பாடு பருவ இதழில் பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் கட்டுரையாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களேயாகும். இவை இவ்விதழை வெளியிடும் திணைக்களத்தின் கருத்துக்களைப் பிரதிபலிப்பனவாகா.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு

(பதின்னான்காவது இதழ்)

மலர் 6	இதழ் 2	1996	மார்கழி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
18 SEP 2003
நூலகம்

ஆசிரியர்
சாந்தி நாவுக்கரசன்

—★—

உதவி ஆசிரியர்
எஸ். தெய்வநாயகம்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

—★—

வெளியீடு:
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.
இல. 98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

நீதி, சட்டம், நீதி நிர்வாகம் பற்றிய இந்துமதக் கருத்துக்கள் 01

வி. ரி. தமிழ்மாறன்

அறிவாராய்ச்சியியல் 15

நா. ஞானகுமாரன்

சி. வை. தாமோதரம் பிள்ளை - பதிப்புப் பணி: ஒரு மதிப்பீடு 28

அ. பாண்டுரங்கன்

சிற் - [illegible]பிள்ளையும் விபுலானந்த அடிகளாரும் 40

இரா. வை. கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி, சட்டம், நீதி நிர்வாகம் பற்றிய இந்துமதக் கருத்துக்கள்.

- வீ. ரீ. தமிழ்மாறன் -

உலக அமைப்புத் தொடர்பான ஒழுங்கான நிகழ்வுகளுக்கு அத்தி வாரமாக இருப்பது ஒருவித சட்டவிதிகளின் தொகுப்பு என்பதும், அதைப் புரிந்து கொள்வதற்கு முன் நிபந்தனையாகக் கடவுளின் உள்ள மையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதும் இந்து சமயத்தத்துவங்களின் வாயிலாக அறியப்படக் கூடியதாக உள்ளது. உதாரணமாக இதிகாசங்கள் கடவுளர் அவதாரங்கள் பற்றிக் கூறுகையில் - அவர்கள் பூவுலகுக்கு வருமுன்னர் உலக அமைப்பில் நிலவு கின்ற ஒழுங்கீனங்களைக் குறிப்பிட்டு அவற்றைச் சரிசெய்யவே அவதாரம் நிகழ்வதாகக் கூறும். மனிதனுடைய நடத்தை, செயல்கள், மற்றும் நிறுவனங்கள் யாவும் இந்த ஒழுங்கமைப்போடு ஒட்டிய தாகவே பொருள் கொள்ளப்பட வேண்டும். இது இயற்கை நிலை, எங்கும் உள்ள இயல்பான நிலை என்று பொருள்.

இந்து மதத்தில் நீதி என்பது உரியது, முறையானது என்பதாக மட்டுமன்றி விரும்பத்தக்கது, முன்னேற்ற கரமானது அல்லது அறிவுக்குகந்த தாகவும் இருக்க வேண்டும் என்று விளக்கப்படுகின்றது. அதாவது நீதி என்பது ஞானம் என்பதோடு பொருத்தப் படுகின்றது.அறிவு பூர்வமானதும்பரிணாம வளர்ச்சியின்பாற்பட்டதுமான. முடிவே நீதியான முடிவாக அமையும் என்பது இதன்பொருள். இங்கே நீதி என்பது வேதங்கள் கூறும் ரிதம், ஆசாரம், நடை முறை, சட்டம் என்பவற்றோடு தொடர் புடையதாகிறது. சட உலகு பற்றிய பிளேட்டோவின் சிந்தனைகளோடு பொருத்திப் பார்க்கையில் - பரந்துபட்ட இந்த அண்டத்தின் ஒழுங்கமைப்பின் ஒருதுளியாக மனிதனும் ஒழுங்கமைக்கப் படுகிறான் என்ற உண்மையே ரிதம் என்பதன் உள்ளமையை நிரூபிக்கப் போதுமானதாகிறது.

மானிட நாகரிகம் பற்றிய மிகப் பழைய நூல் என்று கூறக்கூடிய இருக்கு வேதத்தில் மேற்சொன்ன விபரங்கள் தரப்படுவதுடன் தாய்க்கடவுளின் முதல் வாரிசுக்கள் என்று கூறப்படும் ஏனைய தெய்வங்களுங்கூட இந்த உயரிய சட்ட மான ரிதம் என்பதால் பிணிக்கப்பட்டு ள்ளனர் என்றுங் கூறப்பட்டுள்ளது.

ரிதம் என்பது எல்லா நிகழ்வு களுக்கும் அவற்றின் விளைவாம் நிகழ்வு களுக்கும் அடிப்படையாக மாற்ற மடையாது மிளிரும் கோட்பாடு என்றும் பௌதீக உலகிலும் அருவ உலகிலும் மனித வாழ்வின் எல்லாச் சம்பவங்களிலும் ரிதத்தின் செல்வாக்கு தவிர்க்க முடியாது என்றும் வரைவிலக்கணப்படுத் தப்பட்டுள்ளது.

உலக ஒழுங்கமைப்பு என்ற உய ரிய ரிதம் என்ற சட்டத்துக்குப் பூமி பணிகின்றமையாலேயேமழை, நீர்ப்பாசனம் நிலவளம், தானிய உற்பத்தி என்பன சாத்தியமாகின்றன. இது பூமித்தாயின் வருடாந்த (சட்ங்குவழி) நடனம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தில் வர்ணிக்கப்படுகின்றது. தன்னுடைய வழமையான பணியைத் தனது இறையான சூரியனை நோக்கிப் பூமித்தாய் இங்ஙனம் நடாத்துகின்றாள். மிக ஒழுங்கான ரீதியில் நிகழ்வதும் பூரணப்படுத்தப்பட்ட படைப்பான கலா வர்ணமும் இந்தப் பூமித்தாய்தான் என்பதை நாம் அதிகம் கவனத்தில் கொள்வதில்லை.

'ஆரம்பத்தில் பிரமன் இருந்தான்' (பிரஜாபத்திர்வேய் ஈடம் ஆஸிற்) என்று வேதங்களில் கூறப்படுகின்றது. அவனுடைய மனைவியே "வாக்கு" இருவரும் இணைந்ததில் பிறந்ததே அண்டம் (UNIVERSE). அண்டத்தின் ஒரு பிள்ளையே பூமி என்ற வாறாகச் சுலோகங்கள் விபரிக்கின்றன. ஆரம்பத்திலே "வார்த்தை" இருந்தது என கிறிஸ்தவ வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் வாசகர்கள் கவனிக்க வேண்டும். பெண் என்பவள் வாக்கு என்ற தாயின் நேரடிப் பிரதிபலிப்பு அல்லது பதிப்பு ஆகும். இவளே மனித குலத்தின் தாயாகிறாள். எனவே தான் சீதா போன்ற இலட்சியப் பெண்கள் இந்து மதத்தில் பூமித்தாய்க்கு உவமை கூறப் படுகின்றார்கள் பொறுமை, கௌரவம் பேணல் தெய்வீகச் சடங்குகளை அனுஷ்டித்தல், நல்வாழ்வு விதிகளைப் பின்பற்றலில் அவள் பூமித்தாயாகிறாள். எப்படிப் பூமித்தாய்க்குப் பருவகாலங்கள் உண்டோ அதுபோலவே பெண்ணுக்கும் பருவகாலங்கள் உள்ளன. இவை சுழற்சியில், ஆனால் ஓர் ஒழுங்கமைப்பில் வந்துபோகும். இன்று இது உயிரியல் விஞ்ஞானத்தின் பாற்பட்ட ஆய்வாக மாறியுள்ளது. பாத்திரப்பங்கிலும் ஆன்மீக ரீதியிலும் பெண் உயர்ந்தவள் (INSTITUTIONALLY AND SPIRITUALLY) என்பதற்கு வேதங்களில் நிறையவே ஆதாரங்கள் உள்ளன.(1)

அவளுக்கு எப்போதுமே சரியான பாதை, ரிதவழி, அண்டவிதிகள் என்பன அகத்திறன் உணர்வாகப் பொறிதட்டுகின்றன. இதனாலேயே வழக்காறுகளைப் பெண்களிடமிருந்து கேட்டறிய வேண்டுமென்று அபஸ்தம்பா தர்ம சூத்திரம் கூறுகின்றது.(2)

ரிதம் என்பதிலிருந்து வருவதே வழக்காறு அல்லது நடைமுறைகள் என்பன. இவை ரிதி என வேதத்தில் சுட்டப் பட்டுள்ளன. இது கூடுதலாக அறவியல் சார்ந்ததாக இருக்கின்றது. இங்கே கவனத்துக்குரியது யாதெனில் முதலில் ரிதம் என்ற சட்ட விதிகள் பற்றிப்பேசுகின்ற வேதம், பின்னர் அறவியல் கலந்த நடைமுறை வழக்காறுகள் பற்றிப் பேசுகின்றமையேயாகும். இது இன்று சட்ட முறைமைகளில் ஏற்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பே.

இந்து மதத்தின் தலையாய தர்ம சாஸ்திரமாகக் கருதப்படும் மனுதர்மத்தில் (சட்ட விதிகளின் தொகுப்பு) இந்த வழக்காறுகளின் உபயோகம் பற்றி ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, புதிதாக ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றும் அந்நியர்கள் அப்பிரதேசத்தின் உள்நாட்டு வழக்காறுகள் அந்தந்த வகுப்பினருக்குரியவாறு செயற்படும் விதத்தைக் கவனத்திற் கொண்டு அதற்கமைய அந்தப் புதிய மக்களை ஆட்சி செய்யத் தொடங்க வேண்டும் என்று மனு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.(3)

ஞாக்ய வல்யரின் ஸ்மிருதியில் இன்னும் ஒருபடி மேலேபோய், வெற்றியாளன் தான் கைப்பற்றிய நாட்டின் வழக்காறுகள், சட்டங்கள், நீதிமுறை நடப்பு, குடும்பப் பழக்கங்கள் என்பவற்றை அப்படியே பேணி வரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்த வழக்காறுகள் வேதங்கள் அல்லது ஸ்மிருதிகளுக்கு மாறு படின் பின்னையவே மேலோங்கும் என்றும் அபஸ்தம்பா தர்மசூத்திரத்தில் அறிவுறுத் தப்படுகின்றது. ஆனால் பிற்காலத்தில், ஸ்மிருதிகளுக்கு மேலாக வேதங்கள், சுருதி களுக்கு அமைவாகவே வழக்காறுகள் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

மனுதர்ம சாஸ்திரத்தை மொழி பெயர்த்த சேர் வில்லியம் ஜோன்ஸ் *'எழுதப்பட்ட சட்டத் தொகுப்பை விட வழக்காறுகளின் எண்பிப்பு மேலோங்கும்'* என்று வரைந்துள்ளார்.(5)

ஐரோப்பிய சட்ட முறைமைகளிலும் இதையொத்த ஏற்பாடுகளைக் காண முடிவது அதிசயமே. உதாரணமாக, இலங்கைக்கு வந்த டச்சுக்காரர் அவ் வேளையிலிருந்தே உள்நாட்டு வழக்காறு களை இயன்றளவு அனுசரித்து நடக்கும் படி தமது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி யிருந்தனர். இதனால் தான் இங்கு தேசவழமை, முஸ்லீம்சட்டம் போன்ற வழக்காற்றுச் சட்டங்கள் எழுத்துருவைப் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டது. பின்னர் வந்த பிரித்தானியர், தமது குடியேற்றக் கொள்கையின் ஓரம்சமாகவே கைப்பற்றப் பட்ட நாட்டின் சட்டங்கள், வழக்காறுகளைத் தொடர்ந்தும் பேணுதல் என்ற நிலைப் பாட்டைக் கண்டு பிடித்தனர். இந்த நிலைப் பாடு 1799 ஆம்ஆண்டு செம்டம்பர் மாத 10 ஆந் தேதிய அவர்களது பிரகடனத்தில் தெளிவாக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் பல முக்கிய வழக்குகளின் மூலம் நீதி முறை அங்கீகாரத்தையும் பெற்றிருந்தது.(6)

நீதியும் இயற்கையும்

மேலேயுள்ள ஒழுங்கில் ரிதம் முதலிடத்தையும் ஸ்மிருதி மூன்றாம் இடத்தையும் இடையில் வழக்காறுகள் என்ற ரிதி இடம்பெறுவதையும் பார்த் தோம். இங்கே ரிதம் (ஒழுங்கமைவு) என்பது இயற்கையோடு மிக இயைந்த தாக இருக்கவேண்டும் - அங்ஙனம் இருக்கும் என்பது வேதங்கள் தரும் பாடம். நவீன உலகிலும், மேலான சட்டங்கள் இயற்கை விதிகளோடு முரண்படக் கூடாது என்பதில் கூடுதல் கவனஞ் செலுத்தப்படுகின்றது. அதாவது, இயற்கைச் சட்டமே உயரியது என்றும் ஏனைய சட்டங்கள் யாவும் அந்த உயரிய சட்டத்துடன் இயைந்ததாகவே இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப் படுகின்றது. GROTIUS போன்ற இயற்கைச் சட்டவாதிகள் முன்வைத்ததையே இந்துமத வேதங்களும் எப்போதோ கூறி யிருந்தன. இந்த உயரிய இயற்கைச் சட்டத்திலிருந்து தான் பின்னாளிலே சர்வதேசச் சட்டமும் மனித உரிமைகள் சட்டங்களும் கிளைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை நிலையுடன் இயைந்ததாகப் பொருள் கொள்ளப்பட்டதே தர்மம் ஆகும். ஐரோப்பிய சிந்தனையில் இயற்கைச் சட்டத்திலிருந்து நீதி கிடைக் கின்றது. இந்து மதத்தில் ரிதத்திலிருந்து தர்மம் கிடைக்கின்றது. ஆக, இயற்கையும் நீதியும் எப்படி முரண்படமாட்டாதோ அங்ஙனமே ரிதமும் தர்மமும் என்பது பெறப்படுகின்றது

ஆனால் தர்மம் என்பது, மிகச் சிக்கலான ஒரு சொல் என்பது குறிப்பிடப்பட வேண்டியது. இந்தியத் தத்துவஞான நூல்கள் யாவற்றிலும் தர்மம் என்பது மிகப் பிரசித்தமானதாகவும் அதேவேளை பல்வேறு பொருள்படவும் பாவிக்கப்பட்டுள்ள தையும் காணலாம். இந்திய இதிகாச, புராணங்கள் கூறும் சில சம்பவங்கள் தர்மத்தின் பாற்பட்டவையா என்ற ஐயமுங்கூட இதன் காரணமாக ஏற்பட்ட விளைவேதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகில் தனிமனித உரிமைகள், குழு உரிமைகள் என்று பார்க்கப்படுவதைட்போல தர்மத்தின் விடயத்திலும் தனிநபர் மூலமாகவும் சமூகத்தின் மூலமாகவும் இது பார்க்கப்பட வேண்டியதாகின்றது. 'SOCIAL JUSTICE' என்ற பதம் அண்மைக் காலங்களில் இந்திய நீதித் துறையினர் மத்தியில் பிரபல்யமாகி வருவதை இங்கே கவனத்திற் கொள்ளலாம். தனிமனிதனைப் பொறுத்தளவில் அவன் சமூகத்தின் ஓர் உறுப்பினன் என்றளவில் தர்மம் என்பது அவனது அறவியற் கடப்பாடுகளையே குறிப்பதாக அமையும் ஏனெனில், இது மனிதனின் மிக அவசியத் தராதரத்தினை வடிவமைக் கின்றது. எனவே மனிதன் பூரணமானவன் என்றால் அது அவனது ஒழுக்க வடிவத்தையே சுட்டுகின்றது. இந்த வடிவத்தை அவன் அறவியற் கடப் பாடுகளை ஆற்றுதலினால் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் தர்மம் என்பதை ஒரு சமூகத்தின் அளவில் விளங்கிக் கொள் வதாயின் அது சமூகக்கட்டொருமைப்பாடு என்று பொருள்படும் (DHARMA IS SOCIAL SOLIDARITY) இங்கே அது சமூகத்தின் தராதரத்தினை வடிவமைக்கின்றது. அதே தர்மம் என்பதை மதஅடிப்படையில் விளங்கிக் கொள்வதாயின் சுயதிருப்தி அல்லது பேரின்பம் என்று பொருள்படும். ஆயின் தர்மம் என்பதைச் சட்டம், அரசியல் என்பவற்றின் அடிப்படையில் பொருள் கொள்வதாயின் மட்டுமே அது நீதி என்று கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இங்கும் சட்டத்தினதும் அரசிய லினதும் தராதரத்தை வடிவமைப்பது எதுவோ அதுவே தர்மம் ஆகின்றது. இந்த இரண்டையும் வடிவமைப்பது நீதி என்பதால் அதுவே தர்மம் ஆகின்றது.

தர்மம் என்பது அதன் உண்மைப் பொருளில் எங்களது ஆத்மாவை நாங்கள்பின்பற்றுதலே என்றுங் கூறலாம். நாங்கள் யாவரும் ஏக நாயகனின் பிள்ளைகள் என்றளவில் நாங்கள் எப்போது எங்களின் சிறந்த நிலையில் உள்ளோமோ, அப்போது தான் நாங்கள் நாங்களாக இருக்கின்றோம் என்று கூறலாம். எனவே நீதி என்பது மானிடன் அவனது சிறந்த நிலையில் இருக்கும் போது புரியப்பட வேண்டியது என்றாகும். இங்ஙனமாக தர்மம் என்பது இந்துமத நூல்களில் நீதி அல்லது சமூக நீதி என்பதுடன் சமமாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இந்தியாவில், அரசறி வியலைஒழுக்கவியல் சார்ந்ததாக அல்லது நீதி சாஸ்திரமாகப் பார்க்கின் றார்கள். அதிசிறந்த அரசறிவியல் என்பது சமூகநீதி அறிவியல் என்று அறியப்பட்டது மேற்கு நாட்டு அறிஞர்கள் அரசறி வியலுக்கு அடிப்படை சமூக ஒழுக்க வியற் கூட்டு என்கிறார்கள். இது இந்துமத தத்துவத்தைத் தழுவியதே என்பதைப் புரிந்து கொள்வது சிரம மற்றதே.

இந்துமதக் கருத்தில், உலகம் முற்றிலும் பூரணமானதுமல்ல முற்றிலும் குறைபாடுடையது மல்ல (NEITHER ABSOLUTELY PERFECT - NOR ABSOLUTELY IMPERFECT) பூரணத்துவத்திலிருந்து தோன்றிய ஆனால் பூரணமற்றநிலை என்றே உலகைக் கொள்ளவேண்டும். எல்லா மனிதர்களும் ஒரேயளவில் ஞானம் பெற்றவர்களல்ல. எனவே இவர்கள் தர்மம் என்பதைத் தத்தமது ஞான அறிவுக்கேற்பவே விளங்கிக் கொள்கிறார்கள். முற்றிலும் ஞானம் பெற்ற ஆத்மாவானது தர்மமின்றி வாழ முடியாது. அதன் வாழ்வு தர்மத் திலேயே தங்கியிருக்கும் ஆக, இயற்கைச் சட்டத்தில் பரிணாமத்தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டென்பதை ஞானத்தின் அளவுக் கேற்ப என்று அன்று இந்து மதம் கூறியிருந்ததை இன்று மேற்குலகச் சட்ட அறிஞர்கள் ஏற்றுள்ளனர். (7)

எல்லோருமே ஞானம் பெற்றவர் களாக தர்மத்தைப் பின்பற்றுபவர்களாக இருப்பின் மானிடச் சட்டங்களுக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ அவசிய மிருக்காது. பூமி எப்படி ரிதத்தோடு செயற்படுகின்றதோ அப்படி எல்லா ஜீவராசிகளும் செயற்படின் அது கிருத யுகம் எனப்படும். ஆனால் அப்படிச் செயற்படத்தவறும் பட்சத்திலேதான் ஒவ் வொரு தனிநபரதும் தேவைகள், தகுதிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக் கேற்ப தர்மம் நிலை நாட்டப்படவேண்டிய தாகின்றது. இது அரசாங்கம் என்ற மனித முகவரின் மூலமாக நிறைவேற்றப் படுகின்றது. இதை வடிவமைத்துத் தருவதே ஸ்மிருதிகள் (அல்லது தர்ம சாஸ்திரங்களாகும். இவற்றுள் மிகவும் செல்வாக்கு மிக்கவை மனுஸ்மிருதி) அல்லது மானவதர்ம சாஸ்திரம் என்பதை சமய நூல்வல்லார் அறிவர்.

தர்மத்தின் தோற்றங்கள்

இந்து மதச் சிந்தனையாளர்கள் கருத்தில் தர்மம் என்பது ஒரு தழுவியற் சொல்லாகும் (DHARAMA IS A RELATIVE TERM) காலம், இடம், சூழ்நிலைகள், பால், வயது, அறிவு, தொழில் என்ப வற்றுக்கேற்ப தர்மம் என்பதன் பொருள் மாறுபடக்கூடும், ஏன் தழுவியற் சொல் லாகிறது என்றால்- பரிணாமச்செயற் பாட்டின் சட்டங்கள் திட்டவட்டமான வையல்ல. இவை ஏற்கனவே வரைய றுக்கப் பட்டவையாயின் உலகம் பூரண மானதாகிவிடும். அறவியல், ஒழுக்கஞ்சார் விதிகள்,முயற்சிகள் என்பவற்றுக்கு இடமற்றுப்போய்விடும். இயைபாக்கம், ஒத்திசை தெரிவுமுறை, வகை மாற்றம் என்பவற்றைக் கொண்டு புதிய விழுமி யங்கள் கண்டறியப்படவேண்டும். இதுவே பரிணாம வளர்ச்சி யாகும். எப்போதும் மாறும் சூழ்நிலைகளிலிருந்து தர்மம் என்பதைக் கண்டறிய வேண்டி ஏற்படு கின்றது.

மனு கூறுகின்ற வர்ணாச்சிரம தர்மம் என்பது மேற்குறித்த தர்மத்தை அல்லது நீதியை நிலைநாட்டுவதற்கான சமூக அமைப்பு முறையைக் கூறுகின்றது. இதற்கு இணையாகப் பிற்காலத்தில் தோன்றிய ஒரேயொரு சிறந்த ஏற்பா டாகக் கூறக்கூடியது பிளேட்டோவின் RE-PUBLIC என்பதாகும். ஆனால், பின்னயது வெறுமனே எதிர்வு கூறல் அல்லது ஆருடம் கூறல் என்பதைப் போல அமைந்த ஆக்கமாகும். எனவே வர்ணாச் சிரம தர்மத்தின் ஆட்சிவலு பிளேட் டோவின் மனுவின் நூலில் கிடையாது என்று கூறுகிறார்கள். மனுவின் நூலில் சமூகத்தின் சுய கட்டுப்பாடும் தனியார் முயற்சிகளிற்கான உற்சாகமளிப்பும் போற்றப்படுகிறது. மாறாக, பிளேட்டாவின் "குடியரசில்" மேலிருந்து அல்லது வெளியிலிருந்து விதிக்கப்படும் கட்டுப் பாடும் பொதுத்துறை முயற்சிகளுமே ஊக்குவிக்கப்படுகின்றன.

மனுவினுடைய வர்ணாச்சிரம தர்மம் பற்றி ஏராளமாக எழுதப்பட்டுள்ளது. கூடுதலான கண்டனங்களும் வெளியாகி யுள்ளன இதிலுள்ள சமூக வகுப்பாக்கமே கண்டனக் கணைகளுக்கு இலக்காகி யுள்ளது ஆனால் பிளேட்டோவும் இத்தகைய வகுப்பாக்கத்தை "குடியரசில்" புறிப்பிட்டுள்ளார் என்பதை மேற்குலக அறிஞர்கள் மறைத்து விட்டார்கள். மனு தர்மத்தின்படி இந்த வகுப்பாக்கம் இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நடைமுறையில் பரீட்சிக்கப்பட்டதாகும். ஆனால் "குடியரசு வெறுமனே குறிக்கோளாகக் கூறுகின்ற வகுப்பாக்கம் வரவேற்கப்பட்டு மனுவினுடையது கண்டிக்கப்படுவது வேடிக்கையானது.

மனுவினுடைய நூலின் கருப்பொருள் சமூக நீதியே என்பதும் பிளேட்டோவின் "குடியரசு" சமூகநீதி பற்றிக் குறிப்பிட முன்னர் மனுதர்ம சாஸ்திரம் எழுதப்பட்டு விட்ட தென்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும். "குடியரசின்" கருப்பொருள் நீதி என்றும் அரசியற் சமூகத்தின் POLITY அதிசிறந்த பிரிவை மதித்தல் என்பது இந்த நீதியை அடைவதற்கான வழிவகையே என்றும் GROTE என்ற அறிஞர் கூறியுள்ளார்.(8)

மனித நாகரிகத்தின் வரலாறு என்பது சவால்களினதும் அவற்றுக்கான பதில்களினதும் வரலாறேயாகும். இந்திய ஞானிகள் இந்த வழியில் யோகம் என்பதைத் தனி மனிதனுக்கான நிவாரணமாகவும் வர்ணாச்சிரம தர்மம் என்பதை சமூகத்துக்கான நிவாரண மாகவும் கண்டுபிடித்து வளர்த்திருந்தமையை இங்கே நினைவு கூறல் வேண்டும்.

மேற்கூறிய இரண்டு ஆக்கங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இன்னும் பல சிறப்புக்களை இந்து மதத் தத்துவம் முன் வைப்பதைக் காண முடியும். உதாரணமாக, குடும்ப உறுப்பினர்களிடையே வகுப்பாக்கஞ் செய்யும்மனு, அதனை உளவியல் ரீதி யாகவே செய்கின்றனர். அத்துடன் சாதாரணமாகச் சமூகத்தில் உள்ள வயது அடிப்படையிலான வகுப்பாக்கம் போலவே இதுவும் அமைவதைக் காணலாம். ஒருவன் அவனது வாழ்வின் முற்பகுதியில் மாணவனாக இருக்கின்றான். அடுத்த பகுதியில், குடும்பகாரனாக மாறுகின்றான். மூன்றாம் கட்டத்தில், ஓய்வு பெற்ற மனிதனாக வந்துவிடுகிறான். நான்காவது பகுதியில் (மிக விதிவிலக்கானவர்களைப் பொறுத்தளவில்) துறவியாகி இரந்துண்ணும் நிலைக்கு வருகின்றான். இவை அவனது இருப்பின் நான்கு கட்டங்கள் அல்லது ஆச்சிரமங்கள் எனப்படும்.(9)

இதற்கு ஒப்பவே சமூகத்திலும் நான்கு பிரிவுகளை மனு பிரித்துள்ளார். இவை வருணங்கள் எனப்படுகின்றன. வயது அடிப்படையிலான பிரிவுகள் ஒன்றோடொன்று கலப்பது எப்படிக் குழறுபடியாகிவிடுமோ அது போலவே நான்கு வருணங்களும் தன்னோடொன்று கலப்பது குழப்பத்தை ஏற்படுத்தும் என்பது மனுவின் வாதம். இந்தக் கலப்புகள் நடப்பின் சமூக அறம் குன்றிவிடும். நெறிபிறழ்வுகள் ஏற்படும். இதனால் தான் முற்காலத்தில் ஆச்சிரம நிலையில் நிற்காத திருமணமாகாத நபர் (குறிப்பிட்ட வயதைத் தாண்டின்) அல்லது பிரிந்து வாழ்வோரால் சமூகத்துக்கு அபாயம் என்று கூறப்பட்டு வந்தது.

ஆச்சிரம தர்மமும் வர்ணாச்சிரம தர்மமும் இணைந்து செயற்படுவது பிளேட்டோவை விட மனுவை உயர் நிலையில் வைத்து விடுகின்றது. பிளேட்டோவைப் போலன்றி மனு சுயமாக இந்த ஏற்பாடுகளைக் கண்டுபிடித்துத் தந்துள்ளமை மனுவுக்கு மேலும் மதிப்பளிப்பதாக உள்ளது.

(வர்ணாச்சிரம தர்மம் பற்றிய இந்துமத ஏற்பாடுகளையும் அது எங்ஙனம் பின்னாட்களில் பிறழ்வுப் பொருள் விளக்கம் கொள்ளப் பட்டுச் சமூக நடை முறையாயிற்று என்பதையும் இக்கட்டுரையில் சுருக்கமாகவேனும் விவரித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமில்லை. ஆதலின் அது பற்றிய விவாதத்தை அறிய விரும்புவோர் பேரா. சீயர் கிருஸ்ண விரசுண்ண முக்கர்ஜீ எழுதிய THE STATE என்ற நூலைப் பார்க்கவும்.)(10)

இருப்பினும் வர்ணாச்சிரம தர்மத்தின் அடிப்படையை இங்கு குறிப்பிடுதல் அவசியமாகின்றது. எந்த ஓர் சமூகத் தத்துவமும் அதனை ஈட்டுவதற்கான வழி வகை ஒன்றையும் குறிப்பிடுவதாகவே இருக்கும். எனவே தத்துவ மாணவன் இந்த வழிவகை (SCHEME) பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் சமூகத்தத்துவத்திலேயே கவனத்தைச் செலுத்துவான். பொறிமுறையோடு நின்று விடுபவன் தத்துவத்தின் உந்துசக்தியை அல்லது உள்ளுணர்வை (SPIRIT) இழந்து விடுகின்றான். மிகச்சிறந்த உதாரணம்: பிரித்தானிய அரசியலமைப்புக் கோட்பாடு பற்றிப் படிக்கும் மாணவன் அதன் பின்னாலுள்ள SPIRIT என்ன என்பதை அறிய முற்படுவானே தவிர அந்த அமைப்பு முறையிலுள்ள முடி, பிரபுக்கள் சபை என்ற பொறிமுறையைப்பார்த்து விட்டுப் பிரித்தானியா ஜனநாயக விரோத நாடு என்ற முடிவுக்கு வரமாட்டான். இந்துமதத்தில் வர்ணாச்சிர தர்ம ஏற்பாட்டைக் குறை கூறுவோர் ஜன நாயக ஏற்பாட்டில் எப்படி மன்னனுக்கும் பிரபுக்களுக்கும் இடமளிக்க முடியும்?

இந்துமதத்தில் சட்டம், சட்ட மாக்குதல், நீதி நிர்வாகம் என்பவற்றை விளங்கிக் கொள்ள வர்ணாச்சிரம தர்ம ஏற்பாட்டின் சுயத்துவமும்" விளங்கிக் கொள்ளப்பட்டேயாகவேண்டும். இங்கே அரசியல், அறிவியல் என்பன ஏற்கனவே கண்டறியப்பட்டு தர்ம சூத்திரங்களிலும் தர்ம சாஸ்திரங்களிலும் வரையறுக்கப் பட்டிருந்தன. இவை வேதத்தின் தராதரத்தின் படிக்கும் ஆன்மீக உயர்குழுவின் நடைமுறைகளிலிருந்தும் (சடாட்சர என்று பொருள்) பெறப்பட்டவையாக இருந்தன. எனவே சட்டங்கள் என்பன வேதங்கள், ஸ்மிருதி,சடாட்சர என்பவற்றைத் தழுவிய தாகவும் அவற்றுக்கும் மேலாக, மனசாட்சியைத் திருப்தி செய்வனவாகவும் இருக்க வேண்டும். இந்த நான்கு தேவைப்பாடுகளும் நீதியின் அல்லது தர்மத்தின் சுட்டிகள் என்று மனு குறிப் பிட்டுள்ளார்.(11)

இந்து மதத்தில் அரசியலமைப்புச் சட்டமெது?

சமூகத்தின் மனசாட்சியினால் தீர்மானிக்கப்பட்டவாறாகவே வர்ணாச்சிரம தர்மமுறை நீதியான சமூகத்தின் அடிப் படைக்கட்டமைவாக அமைகின்றதெனக் கொள்ளப்படவேண்டும். இங்கேயும் நாமோர் உதாரணத்தைக் கையாளலாம். மேற்குலகிலிருந்து "ஜனநாயகம்" என்பது அறிமுகமானதாகக் கொள்கின்றார்கள். ஜனநாயகத்துக்கு எனச் சில ஆகக் குறைந்த அடிப்படைகள் (கோட்பாடுகள்) இருக்கும். அவற்றில் தலையிடுதல் ஜனநாயகத்தையே உருமாற்றி விடும் என்பதால் இந்த அடிப்படை ஏற்பாடுகளில் தலையீடு அனுமதிக்கப் படுவதில்லை. சட்டத்தின் ஆட்சி, ஒருவருக்கு ஒரு வாக்கு, தனிநபர் சுதந்திரம் என்பன இத்தகைய அடிப்படை ஏற்பாடுகளாக ஜனநாயகத்தில் விளங்குகின்றன. அங்ஙனமே, இந்து மதத்தத்துவத்திலும் வர்ணாச்சிரம தர்ம ஏற்பாடு என்பது மிகப்பழையதாகவும் அடிப்படையான தாகவும் அமைந்துவிட்டது. நமது முன்னோரும் இந்தக் கோட்பாடு பற்றி வினாவேதும் எழுப்பாமல் சமூக நீதியை மேலும் பயனுள்ளதாக்குவதிலேயே கவனத்தைச் செலுத்தினர்.(12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணாச்சிரம தர்மத்தின் அடிப் படையில் அரசியல் கொள்கைகளையும் அமைப்புக்களையும் கருத்து வழிப்படுத்து தலில் எமது மூதாதையர் பெரிதும் முயன் றுள்ளனர். இங்ஙனஞ் செய்யும் போது உள்ளதை உள்ளபடியே நிலைநிறுத்து வதான விளைவே ஏற்படும் (STATUS QUO). இதன் பக்க விளைவாக அரசியலமைப்புச் சட்டத்தின் வளர்ச்சி தடைப்படுவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இது டைசியின் கோட்பாடுகளினால் ஏற்பட்ட செல்வாக் கின் மீதெழுந்த பாதிப்பைக் காட்டி நிற்கின்றது. அரசிலமைப்புச் சட்டத்தின் இயல்பு பற்றி டைசி எழுதியதை விட (13) JELLINEK என்ற ஜேர்மன் சட்ட அறிஞர் எழுதிய பொதுச் சட்டத்தின் இயல்பு என்ற நூலே (14) தற்காலத்துக்கு மிகப் பொருத்த மான தென இந்திய அறிஞர்கள் கருதுவ தாகத் தெரிகிறது. சேர் ஐவர் ஜென்னிங்ஸ் கூட டைசியை விட JELLINEK இன் ஆக்கத்தினாலேயே கூடுதலாகக் கவரப் பட்டிருந்தாரெனவும் அறியமுடிகின்றது.(15)

அரசியலமைப்புச் சட்டத்தின் இயல்பு பற்றி JELLINEK கூறுகையில் இதன் விதிகள் அகவயமானவையாக (SUBJECTIVE) இருக்க வேண்டும் என்றும் இறுதியில் அவ்விதிகள் தேசம் ஒன்றின் கூட்டுக் கலாச்சாரச் செல்நெறிகளினால் நிச்சயிக்கப்படுகின்றன என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே ஒரு விடயம் அரசிய லமைப்புக்கு இயைபானதா இல்லையா என்பது அந்நாட்டின் சமூகச் சக்திகளி னால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது இவரது கருத்து. உண்மையில் அரசு ஒன்றின் தோற்றம் என்பது,சட்டத்தின் எல்லைகளுக்குப் புறம்பானது என்ப தையும் கவனிக்க வேண்டும்.(16)

அதாவது அரசியலமைப்புச் சட்டம் என்பது நீதிமன்றத்தின் தத்துவங்களுக்கு உட்படாததுடன் அவை வெறுமனே தேசத்தின் வழக்காறுகள், நடைமுறை களை ஒட்டியெழுந்த உளவியல் விடயங்கள் என்பது பெறப்படுகின்றது. இவை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருவதனால் சமூகவிதிகளாக அல்லது அரசியல் தத்துவமாக இவை மாற்றம் பெற்று விடுகின்றன. இந்த ஜேர்மனிய அறிஞரின் கருத்தோடு இந்து மதத் தத்துவத்தின்படியான ஆட்சி விதிகளையும் ஒப்பிட்டு நோக்க முடியும்.

எதேச்சாதிகார ஆட்சியாளர் களுக்கு எதிராக தர்மநீதி வழங்கும் உத்தரவாதங்கள் தர்ம சூத்திர, தர்ம சாஸ்திர வடிவில் அமைந்துள்ளன. இவை போதாத உத்தர வாதங்கள் எனின் அதற்குக் காரணம் இவை நல்ல சட்டங்களே அல்ல என்றாயின் எந்த நாட்டிலும், எந்த அரசியலமைப்பிலும் நல்ல உத்தரவாதங்கள் என்று எதுவுமே இருக்க முடியாது. மக்களின் சமூகச் சித்தாந்தத்தைப் பரதிபலிக்காத அல்லது முறையான சட்டம் (Law Proper) என்று கூறத்தக்கதான அரசியலமைப்பு என்று எதனையும் உலகில் காண முடியாது.

'CONSTITUTIONAL LAW' என்ற வாக்கியமே பிறழ்வுப் பொருள் தருவதாக உள்ளது. 'CONSTITUTION' என்பது நாடொன்றில் மக்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் வகையிலமையும் அரசியல், சமூக நடைமுறை களையும் வழக்காறு களையும் கொண்டுள்ளது. 'LAW' என்பது இந்த நடைமுறைகள், வழக்காறுகளைப் போற்றிப்பேண மக்கள் காட்டும் விருப்பைக் குறித்துநிற்கின்றது. உண்மையில் அந்த விருப்பே ஆணையாக, சட்டமாக மாறு கிறது. இங்கு முறையான சட்டமென்ற பேச்சுக்கே இடமில்லை. சட்டவியலிலும் GRUND NORM என்பதற்கு பிறப்பிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது என்பது ஒப்புக்கொள்ளப் பட்டதே.

உதாரணமாக இங்கிலாந்தில் பாராளுமன்ற முறைமையிலான அரசாங்கமே இருக்க வேண்டும் எனக் கூறும் நியதிச்சட்டம் எதுவுமே கிடையாது. ஆனால், அங்ஙனம் நிலவுவதற்குக் காரணம் அந்த மக்கள் அதுவே சிறந்த வடிவிலான அரசாங்கம் என்று கருதி அதனைத் தமது " சமூகச் சிந்தாந்தமாக" மாற்றியிருப்பதனாலேயாகும். இங்கே RULE OF LAW என்று அவர்கள் விரும்புவது 'RULE OF RULES OF SOCIAL ETHNICS' என்று பொருள்கொள்ளப்பட வேண்டும். அந்த மக்களின் அரசியலமைப்பு மரபுகளை (CONVENTIONS) இந்து மதம் கூறும் "சடாட்சர" விதிகளோடு ஒப்பிடலாம். சட்டரீதியிலான அரசியலமைப்பு விதிகள் என்று எதுவுமே கிடையாது. அவற்றை அரசு ஆக்கவும் முடியாது. அப்படி ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளைப் பாதுகாக்க மட்டுமே அரசினால் முடியும். இந்துமதத் தத்துவத்திலும் அரசு இதனையே செய்கின்றது. வர்ணாச்சிரம தர்மம் இந்தப் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டதேயாகும்.அரசியலமைப்பின்படி இறைமை மீதான கட்டுப்பாடென்பது சட்டத்தினாலன்றி சட்டத்துக்குப் புறம்பான அபிப்பிராயங்கள், சமூகச் செல்வாக்குகள், அறிஞர்களது கருத்துக்களினாலேயே சுமத்தப்படுகின்றது. புராதன இந்தியாவிலும் அரசு மீதான செல்வாக்கு கட்டுப்பாடென்பது இங்ஙனமே இருந்து வந்துள்ளது.

சட்டத்தின் ஊற்று எது?

இந்தியாவில் முற்காலத்தில் சட்டத்திற்கான மதிப்பு என்பது அது தெய்வீக மூலத்தைக் கொண்டது என்பதனாலேயே வழங்கப்பட்டுவந்தது.எனவே அச்சட்டத்தை விட உயரியதாக எதுவும் இருப்பதற்கு வாய்ப்பும் இருந்திருக்கவில்லை. தர்மம் "பரம்நாஸ்தி" என்று உபநிடதங்கள் விளம்புகின்றன. சட்டத்தைவிட உயரியது எதுவுமில்லை என்று பொருள். வருணங்கள், ஆச்சிரமங்கள் தொடர்புடையது போலவே புனிதமான சட்டங்கள் வேதங்களிலிருந்து பெறப்பட்டு வரையப்பட்டுள்ளன. இதில் மன்னர் அல்லது ஆட்சியாளர் கூடத் தலையிட முடியாது. இவை தற்கால அரசியலமைப்பு விதிகளை ஒத்தவை எனலாம். இதற்கு அடுத்தபடியாக நாடுகளின், சாதிகளின், குடும்பங்களின், உயர் தொழில்சார் அமைப்புக்களின் வழக்காறுகள் சட்டவிதிகளாக மதிக்கப்பட்டன. ஆனால், இவ்வழக்காறுகள் வேதங்களுக்கு முரண்படக் கூடாதென்பதுடன் மன்னர்களையும் கட்டுப்படுத்துவதாகவே இருக்கும்.

ஆட்சியாளனது சட்டவாக்கற் பணியானது மிகக்குறுகியதாக வெறுமனே நிருவாகஒழுங்குவிதிகளை(அனுசாசனங்கள்) ஆக்குவதாகவும், நீதி நிருவாகத்தில் நடபடிமுறை விதிகளைக் (வ்யவஹார) கடைப்பிடிப்பதாகவுமே இருந்துள்ளது. சட்டவாக்கத்துறையில் பெருமளவு இடத்தை வழக்காறுகளும் நடைமுறைகளும் ஆக்கிரமித்து விட உண்மையான சட்டவாக்கப்பணியென்பது சட்ட அமைச்சரிடம் விடப்பட்டிருந்தது. குலகுருவான சுக்கிராச்சாரியார் இந்த அமைச்சர் பதவிக்கு இட்ட பெயரே"பண்டிதர்" என்பதாகும். மன்னர் சட்டத்தை ஆக்கும் போது பின்பற்ற வேண்டியதான கொள்கையினைப் பண்டிதர் விதித்துரைக்க வேண்டியது! கடமையாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்காறுகளும், நடைமுறைகளும் காலங்கழிந்தவையாக மாறிவிடப் புதிய மரபுகள் அந்த இடத்தை நிரப்பவேண்டியிருந்தன. மாறிவருஞ் சமூகத் தேவைகளுக்கு ஏற்பச் சட்டமும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமல்லவா. இதற்காகச் சட்ட அமைச்சர் காலத்துக் காலம் மதிப்பீடுகளைச் செய்து சீர்திருத்தத்துக்கான சிபார்சுகளைச் செய்ய வேண்டியவராகிறார். எவை புராதனமானவை? எவை புதியவை? எவைதர்மசாஸ்திரங்களுடன்இசைந்துள்ளன? எவை (அதிகாரம்பெற்றிருப்பினும்) தற்போது செல்லுபடியற்ற நிலைக்கு வந்துள்ளன? தர்மசாஸ்திரம் அல்லது பொதுவான வழக்குநெறிக்குஒவ்வாதவை எவை? இவற்றை அளவிட்டுச் செயற்படுவதே அந்த அமைச்சரின் பணியாகிறது. இதனால் அவர் எல்லாத் துறைகளிலும் ஓரளவு அறிவு பெற்றவராகவே இருக்கவேண்டும்(7) பிரிட்டனில் காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் ROYAL COMMISSION சட்ட சீர்த்திருத்தம் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்கிறது.

அன்றைய இந்தியச் சட்டங்கள் பேச்சுக்களை போன்ற பாராளுமன்ற விவாதங்களின் பின்போ அல்லது சர்வாதிகாரியின் முரட்டுக் காரியங்களினூடாகவோ வந்தவையல்ல. உரியதும், தெளிவுமிக்கதுமான சமூக விருப்பின் பேரில் வந்த சட்டங்களே அவை. மன்னர் நியமித்த சட்டவாளர்களின் ஆலோசனையின் பேரிலும் அவ்வத்தொழில்சார் அமைப்புகளின் பிரதிநிதிகளின் ஆலோசனையின் பேரிலுமே அவை ஆக்கப்பட்டன. ஆனால் இந்த ஆலோசகர்கள் கூடத் தமது மனம் போன போக்கில் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க முடியாது. வேதங்கள் உயர்குடியின் நடைமுறைகள், அந்தந்தப் பிரதேசத்திற்குரிய பழக்கங்கள், சில குடும்பங்களின் விசேட நடைமுறைகள், தொழில்சார் குழுக்களின்மரபுகள் என்பவற்றை மனதிருத்தி ஆராய்ந்தே ஆலோசனை கூறமுடியும்.

சட்டத்தினுடைய நோக்கமும் இலக்கும் இருந்துவரும் சட்டத்தை அதாவது ரிதத்தைப் பேணலும் பின்பற்றுதலுமாகும். இறைவனின் விருப்பு தர்மம் அல்லது நீதி என்றளவில் வழக்காறுகளும் நாளாந்த வாழ்வில் தெய்வீக வழிகாட்டலாகவே கருதப்பட்டது. இவை மன்னனின் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுப் பின்பே சட்டவடிவம் பெற்றதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆக, தெய்வீக விருப்பும் மக்கள் ஒப்புதலுடனேயே சட்டமாகியது எனலாம்.

இந்தியாவில் சட்டமாக்கும் முறையானது அன்றைய கிரேக்கத்திலிருந்த சட்டமாக்கும் முறையிலிருந்து பெரிதாக வேறுபட்டிருக்க வில்லையெனக் காட்ட முடியும். இரண்டு முறைமைகளிலுமே (அ) சட்டமானது தெய்வீக விருப்பை முன்னெடுப்பதாக அல்லது நியாயத்தின் (அறிவின்) வெளிப்பாடாக நீதிபுரிவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது:(ஆ) சட்டவாக்க மூலமானது மக்கட் பேரவையில் நிறைவேற்றப்பட முன்னர் அது வேறொரு அமைப்பின் ஒப்புதலைப் பெற வேண்டியிருந்தது. இந்தியாவில் அதற்கு மன்னரின் சட்ட ஆலோசகர் சபை ஒப்புதல் அளித்தது. ஏதென்ஸில் 500 பேர் கொண்ட பேரவை இவ்வொப்புதலை வழங்கியது: (இ) இங்ஙனம் ஆக்கப்படுஞ் சட்டங்கள் இருந்து வரும். அத்துடன் நன்குஸ்தாபிதமான பழக்கங்களுடன் அல்லது அடிப்படை விதிகளுக்கு முரண்படின் (வர்ணாச்சிரம தர்ம விதிகள் அல்லது ஏதென்ஸில் அரசியலமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிகள்) அந்தளவுக்கு அவை செல்லுபடியற்றவையாகும். இந்தியா விலேயோ அல்லது கிரேக்கத்திலேயோ இன்றிருப்பது போன்ற பாராளுமன்ற நடைமுறைகள் இருந்திருக்கவில்லை.

நீதி நிர்வாகத்திலும் தனித்துவம்

சட்டத்தை ஆக்குவதில் செலுத்தப்பட்ட கவனத்தைவிடச் சட்டத்தை நிருவகிப்பதில் தான் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டதாகப் பண்டைய இந்திய மரபு சான்றுபகர்கின்றது. தற்கால 'FAIRTRIAL' என்ற மனித உரிமையின் முக்கியத்துவம் அன்றே எங்ஙனம் உணரப்பட்டிருந்தது என்பது ஆச்சரியத் துக்குரியதே. நீதி நிருவாகத்துக்கெனப் பிரத்தியேகமாக விதிகளும் ஒழுங்கு விதிகளும் இருந்ததாகத் தெரிகின்றது.

வேதங்களில் எவ்விடத்திலேனும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட நீதித் துறையிருந்ததாகக் கூறப்பட்டிருக்க வில்லை.என்றாலும் இதனைப் பெருங் குறைபாடாகக் கொள்ளவும் முடியாது ஏனெனில் ஐரோப்பாவிலும் 10ஆம் நூற்றாண்டின் பின்னரே பாரபட்சமற் றதும்,நடுவுநிலைமையானதுமான நீதித் துறை அறிமுகமானதாகத் தெரிகின்றது.

பண்டைய கிரேக்கத்தில், ஏதென்ஸ் நீதிமன்றங்களை நாம் உதாரணமாகக் கொள்வதானால் நீதித்துறை மிக மோச மானமுறையில் அமைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க மறக்கக்கூடாது. இந்த நீதி முறைமையின் கீழ்தான் தத்து வஞானி சோக்கிரட்டீஸ் படிப்பறிவற்ற 2,000 பேர் கொண்ட கும்பலினால் மரண தண்டனை விதிக்கப்பட்டார். இத்தோடு ஒப்பிட்டால் இந்தியாவில் கி.மு.500 ஆம் ஆண்டளவிலேயே நன்கு ஒழுங்கமைக் கப்பட்ட நீதித்துறை இருந்ததைக் காணலாம். அரசனுடைய முக்கிய பணிகளில் ஒன்றாக நீதி வழங்குதலும் குற்றவாளிகளைத் தண்டித்தலும் இருந்து வந்துள்ளது. தன்னுடைய நீதித்துறை அதிகாரத்தை மன்னன் "தர்மத்யக்ஸா" என்ற பிரதம நீதியரசரிடம் ஒப்படைக்கவும் முடியும். தலைநகரத்திலுள்ள மக்களின் குறைகளை மன்னன் நேரடியாகவே கேட்பதுண்டு. அதிகாரிகளிடம் அப் பணியை விட்டுவைப்பதில்லை.

சட்டத்தை அமுல்படுத்தும் விதம் பற்றிய சிந்தனை இந்திய ஞானி களிடையே தொன்றுதொட்டு இருந்து வந்ததாயினும் காலப்போக்கில் இந்நட படிமுறை மாற்றங்களை உள்வாங்கியும் கொண்டது.(18) அபஸ்தம்பா தர்ம சூத்திரத்தின்படி (கி.மு600 - 300) வ்யவஹார எனபது "நடந்தேறும் விடயங்கள்" என்பதாகும். சுக்கிர நீதி சாஸ்திரத்தின் படியும் (கி.மு.400 - கி.மு.100) ஸ்மிருதிகளின் படியும் (கி.மு.200 - கி.பி.100) இது சட்டத்தின் கீழான வழக்கு நடபடிகளைக் குறிப்பதாயிற்று. கி.பி1000 த்தின் பின்னர் இது நீதிமுறை நடபடிகள் என்ற நாமத்தைப் பெற்றது. இப்பதம் சட்டப் பிணக்குகளிலும் நீதிமுறை நடபடிகளிலும் உபயோகமாவது என்றே இன்றும் விளங்கிக் கொள்ளப்படுகின்றது.

புராதன இந்தியாவில் சட்ட வழக்கு களை நடாத்திய விதமும் நீதிநிர்வாக நடபடிமுறைகளின் ஒழுங்கும் சுக்கிரநீதி சாஸ்திரத்தில் (அத்தியாயம்IV) விரிவாகக் கூறப்பட்டுள்ளது எனலாம்.

அரசனின் முக்கிய கடமைகளில் ஒன்று தவறாளியைத் தண்டித்தல் என்று பார்த்தோம். ஆனால் இத்தண்டனை மனம்போன போக்கிலதனதாக இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. சட்டத்தின் படியானதாகவே இருக்கவேண்டும். இன்று உலகில் உள்ள எல்லா நாடுகளது அரசியலமைப்புக்களும் இந்த அடிப்படை உத்தரவாதத்தை வழங்குவதை அவதானிக்கவேண்டும். வழக்குகளைத் தீர்க்கையில் மன்னன் கோபம், பேராசை என்பவற்றிலிருந்து விடுபட்டவனாகவும் தர்மசாஸ்திரத்தின் நெறிகளினால் உந்தப் பட்டவனாகவும் நீதி நிர்வாகத்துக்கெனத் தேவைப்படுத்தப்பட்ட பத்துத் தேவைப் பாடுகளினது உதவியுடன் முறையான நீதிமுறை நடபடிகளைப் பின் பற்று பவனாகவும் இருக்க வேண்டும் என்கிறது சுக்கிரநீதி சாஸ்திரம்.(19) மன்னரில்லாத வேளைகளில் அவரால் நியமிக்கப்படும் பிராமணர்களினால் பிணக்குகள் தீர்க்கப்படலாம். இவர்கள் உயர்குலத்து உதித்தவர்களாகவும், சுய கட்டுப்பாடுடையவர்களாகவும் பாரபட்சமற்றும் சாந்தமாகவும், கோபமற்றும் வேதமுணர்ந்தவர்களாகவும் மறுபிறப்புப்பற்றிய அச்சம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்கின்றது சுக்கிர நீதி சாஸ்திரம்.(20)

தீர்ப்பாளர்கள் முறைப்படி அமைக் கப்பட்ட நீதிமன்றத்தில் அமர்ந்தாலன்றி வழக்கு எதிலும் தீர்ப்பு வழங்கப்படக் கூடாது எனச் சுக்கிலாச்சாரியார் வலியுறுத்தி யிருப்பதைக் கவனிப்பது அவசியம். இன்றும் அரசியலமைப்புச் சட்ட வழக்குகளில் முதல் கவனஞ் செலுத்தப்படும் விடயமும் இதுவாகவே உள்ளது. நீதிமன்றம் அமைக்கப் பட்டவிதம் ஒழுங்கானதா? அந்நீதி மன்றத்துக்கு குறிப்பிட்ட வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் உள்ளதா போன்ற வினாக்கள் ஆரம்பத்திலேயே எழுப்பப்படுவதுண்டு. ஒருவரை மட்டும் நீதிபதியாகக் கொண்ட நீதிமன்றம் அமைக்கப்படக்கூடாது. மன்னராயினுங் கூடத் தனியே அமர்தல் சட்டப் பிணக் குகளில் விரும்பத்தக்கதல்ல என்கிறது சுக்கிரநீதி சாஸ்திரம்.(21)

மன்னனும் அவனது ஆலோசகர்களும் (அல்லது நீதிபதிகளும்) ஒன்றாக அமர்ந்து நீதி வழங்குவர். இங்ஙனம் இவர்கள் கூட்டாக அமரும் இடத்துக்கே சபா என்ற பெயர் இருந்து வந்தது. இது பின்னர் சபை என மருவிற்று. விசாரணையும் தண்டனைத் தீர்ப்பும் பகிரங்கமானதாக இருக்க வேண்டும். விருப்புகள், பயம், எரிச்சல், பேராசை போன்றவற்றால் இரகசிய விசாரணைகளில் அநீதி விளையலாம் என்கிறது சுக்கிரநீதி.(22) இங்ஙனம் பேராசை,மயக்கம், துணிவின்மை காரணமாக நீதிபிறழும் நீதிபதிகளுக்கு மோசமான தண்டனையைச் சுக்கிரநீதி விதந்துரைக்கின்றது.(23)

இங்ஙனம் நீதிநிருவாகஞ் செய்யும் போது சட்டத்திற்கிணங்க என்பது மட்டுமன்றி வழக்காறுகளும் குழுக்களது மரபுகளும் புறக்கணிக்கப்படாது கவனத் திற்கொள்ளப்பட வேண்டும். நீண்ட காலமாக நிலவிவரும் வழக்காற்றைக் கண்டிக்க முடியாது என்கிறது சுக்கிரநீதி. தென்னாபிரிக்காவிலும் இலங்கையிலும் உரோமன் டச்சுச் சட்டம் உச்சக்கட்ட உபயோகத்திலிருந்த காலப் பகுதிகளில் வழக்காறு மிகுந்த முக்கியத்துவம் பெற் றிருந்தமையைக் காணலாம். இன்றுஞ் சட்டத்தின் தோற்றுவாய்களில் ஒன்றென்ற ளவில் வழக்காறின் முக்கியத்துவம் முன்னரங்கிலேயே உள்ளது எனலாம்.

கிடைக்குந் தரவுகளின்படி பார்ப்பின், அரசனும் அவனது உயரதிகாரிகளும் எல்லாவகை (குடியியல் / குற்றவியல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குகளையும் விசாரிக்கும் தகுதி பெற்றிருந்தனர். இதனை KING BENCH DIVISION என அழைக்கலாம்.அது மேன்முறையீட்டு நீதிமன்றமாகவே இருந்திருக்க வேண்டும். தன்னையொத்தவர்களாலேயே விசாரிக்கப்படுதல் (TRIAL BY PEERS) பிணக்குகளை இணக்குவதில் முக்கிய மார்க்கமாக இருந்தது.(24) முதனிலை நீதிமன்றங்களை (COURTS OF FIRST INSTANCE) குலம், சமூகம் (SRENI) பூர்வீகக் குடிகளது குழுக்கள் என்பவற்றின் பொறுப்புணர்ந்து ஸ்தாபிக்க வேண்டியிருந்தது. இவை திருப்தியான தீர்வைத் தராததபோதிலேயே மன்னரின் நீதிமன்றம் தலையிட வேண்டி யிருந்தது. தண்டமும் உடல்ரீதியான தண்டணைகளும் மன்னரால் மட்டுமே விதிக்கப்பட முடிந்தது.

மன்னனுக்கு ஆலோசனை வழங்கும் நீதிபதிகள் யார்? இவர்கள் சபாவில் மன்னனோடு அமர முடிகின்றது. உயரதிகாரி எப்போதும் பிரதம நீதியரசர் இடத்தைப் பெற்றுவிடுவார். இது அவரவர் துறை நிபுணத்துவத்தைப் பொறுத்த தாகும். உதாரணமாகக் காணி வழக்குகளில் வருமானத் துறை அதிகாரியும் (அமாத்யா), வெளிநாட்டார் சம்பந்தப்படும் வழக்குகளில் அமைச்சர் ஒருவரும் ஆலோசகர்களாக அமர அழைக்கப்படுவதுண்டு. இவர்கள் வருமான மதிப்பீட்டாளர்களாகவே கருதப்படுவதாகத் தெரிகிறது மேலதிகமாக, "சபா" என்பது நிரந்தரமாக இயங்குவதுமுண்டு. சட்ட நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பொன்று, அல்லது தீர்மானமானது எழுத்திலான ஆவணமாக இருப்பதுடன் பின்வருவனவற்றை ஆதாரமாகக் கொண்டதாகவும் அமையவேண்டும் (அ) ஆதாரம் (ஆ) நியாயம் அல்லது தர்க்கரீதியான அழுத்தம்.(இ)பழக்கவழக்கங்கள்,(ஈ) சத்தியப்பிரமாணங்கள் (உ) வாதியினால் ஒப்புக் கொள்ளப்படும் நிகழ்வுகள், (ஊ) அரசனுடைய விசேட கட்டளை, தீர்ப்பினால் திருப்திப்படாதோர் தண்டப் பணத்தின் இருமடங்கைச் செலுத்தி வழக்கைத் திரும்பவும் விசாரிக்கச் செய்யலாம். அல்லது மேன்முறையீடு செய்யலாம். விசாரணையின் போது நீதிபதிகள் பத்து மடங்கு தண்டப்பணஞ் செலுத்தவேண்டியும் வரும், அதாவது இவர்கள் தர்மத்துக்கு மாறாகத் தீர்ப்பளிப்பின் மட்டுமே இந்தக் கெடுபிடியாகும்.(25)

தற்காலச் சர்வதேச மனித உரிமைகள் சட்ட விதிகளும், அவை தொடர்பான சமவாயங்களும் ஆதாரங்காட்டப்படுவது போல தெய்வத்தின் கூற்றுக்களும், கடாட்சங்களும் சான்றாகக் கொள்ளப்பட முடிந்தது என்கிறார் சுக்கிராச்சாரியார். குறிப்பிட்டவகைப் பிணக்குகள் தீர்க்கப்படுவதில் சான்றுகளும் ஆவணங்களும் அனுமதிக்கப்பட்டன.

இங்ஙனமாக, இந்திய சட்ட நீதி, நீதிநிர்வாக முறைமைகள் மேற்குலகச் சட்டங்களோடு இணையாக அல்லது அவற்றிற்கு ஒருபடி மேலாகக் கவனத்திற் கொள்ளப்படக்கூடியதாக இருந்து வந்துள்ளன. ஒரு காலத்தில் ஐரோப்பியர் உலகின் ஏனைய பகுதிகள் யாவற்றையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்கள் திரும்பிச்செல்கையில் இந்தியா போன்ற நாடுகள் தமது பழைய சட்ட, ஆட்சி முறைமைக்குத் திரும்பியிருக்கலாம். ஆனாலும் நடைமுறை வசதிகள் கருதியே பிரிட்டிஷ் இந்தியா போலச் சுதந்திர இந்தியாவும் ஐரோப்பிய முறைமைகளைத் தழுவலாயிற்று. ஆனால் அதற்காக இந்திய மரபின் தொன்மையினையும் மேன்மையினையும் உதாசீனப்படுத்தி விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Foot Notes

1. Sri Sri Chandi XI 6
2. Apastamba Dharma Sutra II 14-15
3. Manu VIII 41
4. Yajnavalkya Smriti - 1 , 343
5. See for cases in **Moor's Indian Appeals**, XII, p. 436
6. Campbell V. Hall (1774) Crown Rep. 204.
7. See W. Friendman, **Legal Theory,** London, 1994.p. 128
8. George Grote, **Plato and the Other Companions of Socrates**, London, 1888 Vol.IV, p. 96
9. Vide Manusmrti, Iv, 1, Vi, 1-8; 33
10. Mukerji K.P. , **The State, Madras**, 1952, pp 332 - 346
11. Manu 11.6.12
12. பிரித்தானியாவில் முடியின் கீழ் ஜனநாயகம் தழைக்கின்றது என்றால், ஐக்கிய அமெரிக்காவில் குடியரசு முறையில் ஜனநாயகம் தழைக்க முடியுமென்றால் வர்ணாச்சிரம தர்மம் ஏன் முடியாட்சியிலும் குடியரசு ஆட்சியிலும் பின்பற்றப்பட முடியாது என்ற வினா எழுகின்றது.
13. Dicey A.V. , **Law of the Constitution**, Mac Millan, 8th Edition, 1938
14. Jellinek G. **Nature of Public Law**, 1914.
15. See Jennings Ivor, **Cabinet Government**, 1969, pp. 1-13.
16. Supra n-14, qt.p.342
17. Attekar.A.S., **State & Government in Ancient India**, p.57
18. Apastamba Dharmasutra - 11 7, 16, 17; 1.6,20-11;1.6 20.16.
19. பத்துத் தேவைப்பாடுகளானவை அரசன் உயர் அதிகாரிகள், ஆலோசகர்கள ஸ்மிருதி சாஸ்திரங்கள், கணக்காளர்எழுதுவினைஞர் தங்கம், தீ நீர், மற்றும் சம்பந்தப்பட்டோரின் உறவினர்கள்.
20. Shukraniti, Chapter - IV,Sec V, lines 23-26
21. Ibid Chapter - II, 197-199
22. Ibid Ch.IV, Sec V. 12-15
23. Shukraniti, Ch. IV. Sec. V. 179-181

24 சட்ட ஆட்சிக் கோட்பாடு நீதித்துறைச் சுதந்தரம் மனித உரிமைகள் என்பவற்றை ஜனநாயகத்தின் பிரிபடா அங்கங்கள் எனச் சித்தரித்து ஏராளமான உடன்படிக்கைகள் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளன.

25 நீதி நிர்வாகம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு See Mukerji K.P. Administration of Justice According to the Sukranitisana in University of Ceylon, Vol. VIII, No.1 1950, p-26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாராய்ச்சியியல்

நா. ஞானகுமாரன்.

தத்துவம், தரிசனம் எனும் சொல்லாட்சிகள் மெய்யியலைக் குறித்து நிற்கும். இவை உண்மை, உண்மைப்பொருள் அறிவு, நேர் காட்சி எனவாகப் பலபொருள் சுட்டிநிற்கும். ஆங்கிலத்தில் மெய்யியலானது 'Philosophy' எனும் சொல்லால் சுட்டப்பெறும் 1. இச் சொல் ஞானநேயம் அல்லது அறிவு பற்றிய ஆராய்ச்சி எனும் கருத்திற் சுட்டுவதாகக் கொள்ளப்படும். எனவே பொதுவில் மெய்யியல், தத்துவம், தரிசனம் ஆகிய சொல்லாட்சிகள் அறிவு பற்றிய விசாரத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துள்ள தன்மை இந்திய தத்துவப்பரப்பில் குறிப்பிடத்தக்கதாகும்.

அறிவு பற்றிய விசாரமானது சிந்தனை முறையாகும். ஒவ்வொரு மனிதனிலும் இயற்கையாகவே ஆராயும் தன்மை உள்ளது. இவ்வாராய்ச்சி முறைமைப்படுத்தப்பட்ட வகையிலேயே அடிப்படையான உண்மையை உறுதியாகத் தெரிந்து கொள்ளுதல் சாத்தியமாகும். செம்மையான சிந்தனைக்கு அளவையியல் (Logic) சார்ந்த அறிவு, பெரிதும் உதவுகின்றன. இவ்வாறான அளவையியல் முறைமைக்குட்பட்ட சிந்தனை வழி அடிப்படையான உண்மையைப் பெறுதல் சாத்தியமென்பதனை அறிவாராய்ச் சியியல் (Epistemology) எடுத்துக் காட்டும். அறிவு வாழ்வின் இலக்கினையும் தத்துவத்தின் செழுமையினையும் பறைசாற்றுவதாகும். இவ்வகையில் இந்திய தத்துவச் சிந்தனை யானது வாழ்க்கை நெறிச் சிந்தனை எனும் வகையில் வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். இங்கு சிந்தனையின் போக்கு வாழவேண்டும் எனும் நோக்கில் வளர்ந்துள்ளமையை இந்தியத் தத்துவங்கள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. வாழ்க்கையைச் சிறந்த வகையில் அமைக்கத் தத்துவச் சிந்தனைகள் பெரிதும் பயன்பட்டன என்பது பெரும்பாலான தரிசனங்களுக்கும் பொருத்தமானதாகும்.

வேதம் எனும் சொல் அறிவைச் சுட்டுகிறது. வேதம் 'வித்' எனும் அடிச் சொல்லிருந்து எழுந்தாகும் 'வித்' அறிவை குறிக்கின்றது.இதன் வழியே வித்யா (vidya) எனும் பதம் அமைந்ததும் குறிப்பிடத்தக்கது. 2. எனவே சுருக்கமாகக் கூறின், வேதம் என்பது அறிவு அல்லது அறிவு பற்றியதாகின்றது. வேதத்தை அடி நூலாகக் கொண்டமைந்த தத்துவச் சிந்தனைகளும் அறிவைப் பற்றிய ஆய்வைக் கொண்டனவாக அமைந்துள்ளன. இந்நிலையில் இந்திய தத்துவஞானம் எனும் சொல்லாட்சிகூட உண்மைத்துவம் பற்றிய அறிவாகவே (the Knowledge of reality) கொள்ளப் படத்தக்கது. இதே கருத்தையே வேதத்தின் தத்துவச் சிந்தனைகளைச் சுட்டி நிற்கும் பகுதியான உபநிடதங்கள் கூட அடிப்படையாகக் கொண்டுள்ளமை புலனாகும்.3

அறிவானது இந்திய தத்துவப் பரப்பில் பல்வேறு பதங்களால் சுட்டப்படுதல் காணலாம். வித்யா (Vidya) ஞானம் (Jnana) புத்தி (Buddhi) உபலப்த்தி (Upalabdhi) பிரக்ஞான (Prajnan) பிரத்யாய (Pratyaya)என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்க சில பதங்களாகும்.4 வேதாந்தம், பௌத்தம், மீமாஞ்சை, நியாயம், சாங்கியம் போன்ற தத்துவக் குழுக்களினைக் குறிக்கும் சொற்களின் சொல்லிலக்கண ஆய்வும் இக்குழுக்கள் அறிவுக்கு அளிக்கும் முதன்மையைப் புலப்படுத்துவனவாகும். 5 அறிவானது நான்கு பகுதிகளை உள்ளடக்கியுள்ளதாகக் கொள்ளப்படுகின் றது. அவை பின்வருமாறு அமைகின்றன.

1. மூன்று வேதங்களைச் சுட்டும் அறிவு (Trayi Vidya)
2. பௌதீக அதீத அறிவும், அளவைமி யலும். (Anviksiki)
3. அரசியல் ஞானம் (Danda -niti)
4. வர்த்தக, பொருளாதார மருத்துவம் முதலிய அறிவு (Vartta)

இவற்றைவிட ஆத்மஞானம், மந்திர, தந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் போன்றனவும் அறிவினுள் அடங்குவனவாகும். அறிவானது பதினான்கு என்றும், 7 பதினெட்டு என்றும் 8 குறிப்பிடுவர். சிலர் இப்பிரிவை விரித்து முப்பத்திமூன்று என்றும் அறுபத்திநான்கு என்றும் பலவாறாகக் குறிப்பிடுதலுமுண்டு. இந்திய தத்துவத்தில் அறிவானது பூரணமானதொரு நிலைக்குரிய அறிவினைச் சுட்டுவதாகவும் கொள்ளக்கிடக்கின்றது.

வேதமானது அறிவை உயர்ந்த அறிவு, தாழ்ந்த அறிவென இரண்டாகப் பாகுபடுத்தி நோக்குகின்றது. இதனை பரஞானம், அபரஞானம் எனவும் அழைப்பர். ஐம்புலன்கள் ஊடாக நாம் பெறுகின்ற புறவுலக அனுபவங்கள் அனைத்தும் அபரஞானம் எனச் சுட்டப்படுகின்றது. எல்லா வகையான விஞ்ஞானங்கள், கலைகள், வியாகரணம் (இலக்கணம்) நிருத்தம், (வேதநிகண்டு) கற்பம், (சடங்கு) சோதிடம், சந்தோவிசிதி (சந்தம்) என்பனவும் அபரஞானத்துள் அடங்குவதாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. இருக்கு வேதம், யசூர் வேதம், சாம வேதம், அதர்வணம் எனும் நான்கு வேதங்கள் கூட அபரஞானத்திற் குரியதாக முண்டக உபநிடதம் குறிப்பிடுகின்றது. 9 சுருங்கக்கூறின் அறிவு பற்றி முற்படக் கூறிய நான்கு பகுப்புக்குரியனவும் அபர ஞானத்திற் குரியனவே.

வேதமுட்பட பலவும் குறைந்த நிலையான அபர ஞானத்திற்குரியன எனின் பரஞானம் எது எனும் கேள்வி எழுகின்றது. கதோ உபநிடதம் பிரமம் பற்றிய அறிவே பரஞானம் என்றும் இதனை வெறும் நியாயப்படுத்தல் அல்லது வாதங்கள்வழி அறியப்பட முடியாது என்றும் குறிப்பிடுகின்றது. 10 பரஞானமென்பது பிரம ஞானமே என முண்டக உபநிடதம் கூறுகின்றது. அதி உயர்ந்த ஞானமான பரஞானமே அழியா, நிலையான உண்மைப்பொருளை அழிவுக்குரியதும் மாற்றத்திற்குரியதுமான புறவுலகினின்று வேறுபடுத்தி உணர்ந்து கொள்ள வழிவகுக்கிறது.

இவ்வகையில் அறிவானது உண்மைப்பொருளை அறிதல், உலக அனுபவப்பொருளை அறிதல் " என இரு வகைக்குரியதாகின்றது. 'நூலறிவு', அனுபவ அறிவு' என அறிவை இரண்டாகப் பகுத்தலும் இச்சாயலை உணர்த்தி நிற்கின்றது. நூல்கள் மூலம் பெறப்படுகின்ற அறிவானது வேதம் சுட்டும் அபரஞானப் பகுப்புக்குரியதென்றும் அனுபவ அறிவானது பரஞான நிலைக்குரிய தென்றும் சுட்டலாம். சிவஞான சுவாமிகள் அனுபவ அறிவென்பதனை அழுந்தியறித லாகுமெனக் கருதினார். அழுந்தியறிதலென் பது அகவுணர்வில் வைத்தறிதலாகும். 'பொருளிலுயர் பாரிபூரணந்தனை யறிவிலழுந்துதல்' நிலை ஆவாகனம் எனவும் 'அலையாதழுந்த நிலை' தாபனம் எனவும் சுட்டப்படுதல் இங்கு நோக்குதற்குரியதாகும். அழுந்தியறியும் அனுபவ அறிவு சைவ சித்தாந்தம் சுட்டும் சிவஞானம் அல்லது மெய்யுணர்வென்றால் மிகையாகாது.

சைவசித்தாந்திகள் ஞானத்தை நான்காக விளக்கி 'நிற்பர்'. அருணந்தி சிவாசாரியார் சிவஞான சித்தியாரில்,

'கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்'

எனக் குறிப்பிடுதல் காணலாம். 12 இதே கருத்தினையே இரேவணசித்தர்.

'ஞானமு நாலாகுங் கேட்டல்
சிந்தித்தல் தெளிதலுயர் நிட்டையென்றே'

எனக் குறிப்பிடுதல் நோக்கலாம். 13 வாக்கினைக் கேட்டறிதல் கேட்டலிலும், கேட்டவிடத்து மனனஞ் செய்தாராய்தல் சிந்தித்தலிலும் சிந்தித்த விடத்து எழும் துணிவு தெளிதலிலும் முப்பொருளுண்மை அமைவுறும். கேட்டு, சிந்தித்து, தெளிந்த வழிப்பெற்ற துணிந்த பொருளுடன் வேறுபாடின்றி நிற்றல் நிட்டையாகும். இந் நான்கு நிலையினுள் நிட்டையே உயர்நிலை ஞானமாகக் கருதப்படுகின்றது. இதனாற்றான் அருணந்தி சிவாசாரியார்,

'அருளினா லாகமத்தே யறியலா மளவினாலும்
தெருவிலாஞ் சிவனை ஞானச் செய்தியாற்
சிந்தையுள்ளே மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சுட்டுகின்றார். 14 இதன்வழி ஆகமத்தின் உதவியுடன் அறிதலும் அளவையியல் பிரமாணங்கள் வழி தெளிவடைதலும் மயக்கம் அற்றவகையில் கேட்டறிந்து நிட்டை கூடலும் சாத்தியமென்பது பெறப்படுகின்றது. கேட்டு, சிந்தித்து தெளிவதற்கு சிவாகமங்கள் உதவுகின்றன. இவை அபரஞான நிலைக்குட்பட்டன. திருவருள் பரஞான நிலைக்குரியது. இவ்விரு நிலைகளின் மூலம் சிவஞானம் பெறலாமென்பது தெளிவாகும். இக்கருத்தின் சாயலைப் பிரதிபலிக்கும் வகையில்,

மெய்யான நிட்டையினை மேவினர்
கட்கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்பும் போம்'

எனத் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுவது காணலாம். 15 இக் கருத்திலேயே 'வீட்டையடைந்திடுவர் நிட்டை மேவினோர்கள்' என அருணந்தி சிவாசாரியார் சுட்டுவதும். 16 உணர்வரிய மெய்ஞ்ஞானம்' எனச் சேக்கிழார் பெருமான் சுட்டுவதும் 17 காணத்தக்கதாகும். இதனின்று நிட்டைவழி சுட்டம்பெறும் ஞானம் வேதம் சுட்டிநிற்கும் பரஞானத்திற்கு ஒப்பானதென்பது பெறப்படும். 18

அறிவு பற்றி வரையறுக்க முற்பட்ட வள்ளுவப் பெருந்தகை 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' எனத் திட்டவட்டமாக வரையறுத்து விளக்குகின்றார். 19 இங்கு வள்ளுவர் எப்பொருளை மெய்ப் பொருளாகக் கொள்கிறார் என்பதனை நோக்கினஇ

"பிறப்பெனும் பேதமை நீங்கச் சிறப்பெனும் செம்பொருள் காண்பதறிவு"

எனும் முகத்தால் விடையளிக்கின்றமை காணலாம். மேலும் சைவசித்தாந்தம் விளக்கிய கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை எனுந் தன்மையின் சாயல் வள்ளுவரின் குறள்களிலும் மிளிர்தல் நயத்தற்குரியதாகும். 'கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார், எனக் கேட்டலினையும் 21 ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்' எனும் வழி மெய்ப்பொருளை உள்ளம் தர்க்க முறையால் பொருந்துமாறு சிந்தித்தலையும் 22 'பேதமை நீங்க என்புழி தெளிதலையும், 23 'சார்புணர்ந்து சார்பு கெட' என்பதன் வழி நிட்டையினையும் 24 விளக்கி நிற்றல் காணலாம். திருவள்ளுவர் பொய்ப்பொருள் அல்லாதனவற்றைப் பிரித்து மெய்ப்பொருளைக் காண்பது அறிவெனும் போது சீத்தலைச் சாத்தனார்,

'உள்பொருளிது என உணர்தல் ஞானமாம்'
என எடுத்தாளுதல் அறியலாம். 25

சமகால இந்திய மெய்யிலறிஞராகக் கருதப்பெறும் இராதா கிருஷ்ணன் அறிவை மூன்று வகையாக வகுத்து விளக்குகின்றார். அவை.

1. புலன் வழிப்பெறும் அறிவு அல்லது காட்சி வழிப்பெறும் அறிவு
(Sensory of perceptual Knowledge)

2. தர்க்க அறிவு அல்லது விவேக அறிவு
(Logical or Intellectual Knowledge)

3. உள்ளுணர்வான அறிவு
(Intutive Knowledge)

ஆகும். 26 புலன் அறிவிலும் பார்க்க விவேக அறிவானது உயர்ந்ததாகவும் விவேக அறிவிலும் பார்க்க உள்ளுணர்வான அறிவானது உயர்வானதாகவும் இராதாகிருஷ்ணனால் கருதப்பட்டது. இப்பகுப்பில் உட்படும் முதல் இரண்டும் அபரஞானம் எனும் வகைக்குள் உள்ளடக்கத்தக்கவையாகும். உள்ளுணர்வான அறிவு பரஞானத்திற்கு இட்டு செல்வதாயும் எடுத்தாளலாம்.

அறிவானது என்றுமுள்ளதும் எல்லையற்றதும் எனக் கொள்ளப்படுகின்றது. ஞானாமிர்தம் அறிவு பற்றிக் குறிப்பிடுகையில் முரண்பாடற்ற நிலைக்குரியதென்றும் குறைபாடற்ற நிலைக்குரியதென்றும் குறிப்பிடுதல் நோக்கலாம். 27 இறையுண்மையினைக் காட்டவல்ல பரஞானமே ஞானமாகு மென்ற கருத்து சைவசித்தாந்திகளாலும் வலியுறுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது.

அருணந்தி சிவாசாரியார்,

***"ஈனத்தார் ஞானங்க ளெல்லா ஞான
மிறைவனடி ஞானமென்பர்"***

எனச் சிவஞான சித்தியாரில் குறிப்பிடுதல் இக்கருத்தினைத் தெளிவுபடுத்துகின்றது. 28 பரஞானம் என ஐதரேய உபநிடதம் கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும். மகா வாக்கியங்களுள் ஒன்றென ஏற்கப்படும் 'பிரக்ஞானம் பிரமம்' என்பது ஞானவடிவமாக இருப்பதே பிரமம் எனும் பொருளைச் சுட்டி நிற்கின்றது. 29 பிரமம் அறிவு மயமானதென்பதும் அறிவே பிரமம் என்பதும் பரஸ்பரம் கொண்டாடும் உண்மையாகின்றது. இதனையே,

***"ப்ரக் ஞான நீயாகிற் பரம்மமெனல் வேறில்லை
ப்ரம் ஞான மாகா ப்ரம்மல ப்ரக்ஞானம்"***

"தன்னதறிவே வடிவாகி" என ஞானவாசிட்டமும் 31 குறிப்பது காணலாம்.

'பிரமம் அறிவே வடிவானவனாய் இருக்கின்றான்' எனும் உபநிடதக் கூற்றுக்களைச் சைவ சித்தாந்தமும் ஏற்று நிற்கின்றன. 32 இறைவன் அறிவே வடிவானவன் என்பதனைச் சைவ சித்தாந்திகள் கீழ்வருமாறு எடுத்தாளுதல் நோக்கத்தக்க தாகும்.

***"பொய்யாயின எல்லாம்
போய் அகல வந்தருளி
மெய்ஞ் ஞானமாகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே"***

என மாணிக்கவாசகரும், 33

***"..............அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து"***

என உமாபதி சிவாசாரியாரும், 34

***"தூய அறிவு ஆன சுகரூப ஜோதிதன் பால்
தீயில் இரும்பு என்னத் திகழ்நாள் எந்நாளோ"*** 35

எனத் தாயுமான சுவாமிகளும் குறிப்பிடுவது இறைவனை அறிவாக நோக்கிய தன்மையைத் தெளிவாக்கி நிற்கின்றன.

பிரம ஞானமே ஞானமெனக் கொள்ளும் வளை கைவல்ய நவநீதம்.

"பிரமமாந்தனை மறந்த பேதைமையே அஞ்ஞானம்"

எனச் சுட்டுகின்றது 36 அஞ்ஞானம், அவித்தை, அறியாமை, அவிச்சை, மாயை என்பன ஒரு பொருள் குறிக்கும் சொற்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. 37 அஞ்ஞானம் ஞானத்தை அறியவொட்டாது செய்கின்றது. ஞானம் அஞ்ஞானத்தை அகற்றி இறையுண்மையை வெளிக் கொணருகின்றது.

"அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே"

எனும் மணிவாசகப் பெருமானின் அடிகளும் இக்கருத்தை அரண் செய்கிறது. 38 அஞ்ஞானமே அனைத்துத் துன்பத்திற்கும் காரணமென்பது பௌத்தம் உட்பட்ட பல தரிசனங்களுக்கு இசைந்த தொன்றாகும். அறியாமை அகன்றவிடத்தே தத்துவங்கள் காட்டி நிற்கும் மேலான பூரணமான நிலையை அடைதல் சாத்தியமாகின்றது.

'பிரமத்தை அறிபவன் பிரமமாகின்றான்' என முண்டக உபநிடதம் குறிப்பிடுவது போல 39 அறிவு மயமான இறைவனுடன் இரண்டற இணையும் நிலை நோக்கித் தாயுமானவர் அங்கலாய்ப்பது நோக்குதற்குரியது.

"மெய்ஞ்ஞானத்தோடு அத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ"

என கேட்கும் நிலை 40 சித்தாந்தத்தின் சுத்தாத்வைதவுண்மைக்குச் சான்றாகின்றது.

அஞ்ஞானம் அகன்றதும் நான் வேறல்ல: பிரமம் வேறல்ல என்பது வேதாந்த ஞானமாகும். நீயே அது எனும் இரண்டற்ற நிலைக்குரியதாய் பூரணமாம் அத்துவிதான ந்தத்தைப் போற்றுதற்குரியதாகும். இங்கு

***"நீயே சராசரமு நீயே சக பரமும்
நீயே சதசத்து நீயாகும் - மாயாத்
சச்சிதா நந்த மெலாந் தானென்பது நீயே***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச் சமதி னியே மிசை"

எனச் சச்சிதானந்த சுவாமிகள் எடுத்தாளுதல் காணலாம் 41

இந்நிலையின் சாயலைக் காரைக்காலம் மையாரின்,

"அறிவானுந் தானே அறிவிப்பான்தானே அறிவா யறிகின்றான் தானே - அறிகின்ற மெய்ப் பொருளுந் தானே- விரிசுடர் பரகாயப் அப்பொருளுந் தானே அவன்."

எனும் பாடல் பிரதிபலிக்கின்றது. 42 இதே கருத்தைத் திருமூலநாயனார்,

"தன்னை யறிந்து சிவனுடன் றானாக மன்னு மலங்குண மாளும் பிறப்பு"

என்கிறார் 43 இங்கு சைவசித்தாந்த அத்துவித சிந்தனையின் ஆழநிலை தெளிவுறுதல் காணலாம். இவ்வத்துவிதச் சிந்தனையின் அடிப்படையில் நோக்குகையில்.

"அதுவே நீ யாமென்றருமறைகள் சொல்லு மெதிர் சிவனே நீ யாக வென்று முதுசைவம் வேறா வேறேன்றோ சொல் வேதியனே......"

என எழுப்பும் சிந்தனை வெண்பாவும் சிந்திக்கத் தூண்டுவதாகின்றது.44 'அறிவு நீ ஐயனே' எனவும் 'சொல்லாடும் நான் பிரமம்' எனவும்45 சிற்றம்பலநாடிகள் கூறுவதும் இங்கு நயக்கத்தக்கதாகும். இதனடிப்படையில் மெய்கண்டதேவர் சுட்டும் ' அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறை பணிநிற்க.....' என்பது இன்னும் விரிந்ததொரு பொருள் நிலைக்கு இட்டுச் செல்லவல்லதாகின்றது. 46

அறிவும் இறைவனும் ஒன்றென அண்மித்து வருகின்ற வேளை அறிவினை அறிதல் இறைவனை அறிதலுக்கு ஒப்பானதாகின்றது. அறிவை அறிதலில் இந்திய தத்துவக் குழுக்கள் தம்தம் தத்துவங்களுக்கு ஏற்ப காட்சி, அனுமானம், வாக்கு, ஒப்புவமை, அருத்தாப்த்தி, அனுபலப்த்தி, சம்பவம் ஐதீகம், சுபாவம், பரிசேஷடம் எனும் பத்துக் பிரமாணங்களுள் சிலவற்றை ஏற்றுக் கொள்வர். இவை பெரிதும் புறவுலகவுண் மையை தருவனவேயன்றி மெய்ப்பொருளின் உண்மைகள் இப் பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டவை என்பது சித்தாந்திகளின் கருத்தாகும். இதனையே,

'சொல்லாலும் பொருளாலும் அளவையாலும் தொடர ஒண்ணா அருள்நெறியை....'
எனத் தாயுமானவ சுவாமிகளும் ,47

'மறையினாலயனான் மாலான் மனத்தினால் வாக்கான் மற்றுங் குறைவிலா வளவினாலுங் கூறொணாதாகி.......'
என அருணந்தி சிவாசாரியாரும்,48

'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா.... ..'

எனத் திருஞான சம்பந்தரும் 49 எடுத்தாளுதல் காண்க. இறையுண்மையை நிறுவுவதில் அறிவுப் பிரமாணங்களுக்குள்ள குறைவான தன்மை இதனால் புலப்படுகின்றது. இவையே அளவைகளைக் கூட அபரஞானமாக வேதம் சுட்டியன போலும். எனினும் அபரஞானமும் பரஞானத்திற்கு உந்துதலாக மங்கிய சுடரொளியாக அமைவதும் மறுப்பதற் கில்லை.

ஐம்பொறிகளின் மூலம் பெறப்படுகின்ற அறிவானது புறவுலகுண்மையைக் காட்டி நிற்கின்றது. இவ்வாறானஅறிவை அறிவோ எனும் ஆசங்கை கொண்டு ஆன்மாவில் ஏற்றி உமாபதி சிவாசாரியார்,

' பொறியின்றி ஒன்றும் உணராத புந்திக்கு அறிவென்ற பெயர் நன்றுஅற'.
என ஏளனமாகவும் 50

"ஐம்புலனாற் றாங் கண்டகன்றாவது வொழிய ஐம்புலனார் தாமா ரதற்கு"
என்றும் 51 குறிப்பிடுதல் காணலாம்.

இதனைத் தெளிவாக்கும் வகையில் புறவுலக அறிவை பெரிதும் தருகின்ற ஐம்பொறிகளின் ஒரான கட்புலனை ஊனக்கண் என மெய்கண்டார் எடுத்தாளுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஊனக் கண் உணராப் பதியை
ஞானக் கண்ணிற் சிந்தை நாடி...

என ஞானமே இறைவனை உணர்த்துவதற்கு அடிப்படையாயிற்று என்பது தெளிவாகும் 52. இதே கருத்தினை அருணந்தி சிவாசாரியாரும்,

'ஞானத்தால் வீடென்றோ நான் மறைகள்
புராணம் நல் ஆகமங்கள் சொல்ல.....'

என வலியுறுத்துகின்றார். 53 மனம் வாக்குக்கு அதீதமான இறைவனை பௌதீகத்திற்கு அப்பால் செல்ல முடியாத புலன்களினால் முழுதாக அறிதலென்பது சாத்தியமில்லை, இறையுண்மையை நேரில் உணர்ந்த ஞானிகள், முனிவர்களின் அனுபவங்களைக் கொண்ட வாக்கானது இறையுண்மையைக் காட்டி நிற்பதற்கு வல்லதென்பது பொதுப்படையில் ஏற்கத்தக்கதாயினும் 54 முழுமையாகக் காட்ட வல்லமையற்றதே. உபநிடதமும் பிரமனைப் புறப்பொருளை விளக்கி நிற்குமாப்போல் பிரமனை விளக்க முடியாதென்றும் சுட்டி நிற்றல் அறியலாம்.55 வாக்கின் வழி பூரணத்தை அறிதல் சாத்தியமில்லை என்பது பெறப்படினும் அவ்வறிவின் துணைகொண்டு அறிவே வடிவாம் இறைவனை உணர்தல் சாத்தியமாகும். பிரமம் உணர்வுயமான தெனும் கருத்தும் சைவசித்தாந்திகளின் கருத்துக்கு இசைவான தொன்றாகும்.56

ஞானமார்க்கத்தை ஏனைய பல தரிசனங்கள் முத்திக்குரிய வழியாக ஏற்பது போல சைவசித்தாந்திகளும் முத்திக்குரிய முடிவான மார்க்கமாக ஞானத்தை ஏற்பர். ஈசாவாசியோபநிடதம் 'எவன் ஞானத்தையும் கன்மத்தையும் அவ்விரண்டையும் ஒன்றாய்ச் செய்ய வேண்டுமென்று அறிகின்றானோ அவ் கன்மத்தினாற் சம்சாரத்திற்குரிய கலியைத் தாண்டி, ஞானத்தினாற் சிவத்தை அடைகின்றான்' 57 எனச் சுட்டுவதாகக் காசி வாசி செந்திநாதையர் குறிப்பிடுகின் றார். 57 ஞானத்தின் இயல்பைச் சுட்ட முற்பட்ட அருணந்தி சிவாசாரியாரும்,

'...... பரமசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
நேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்
பெருமையுடையோர்சிவனைப் பெறுவர்காணே'

என உயர்தன்மையைப் புலப்படுத்துதல் காண்க. 58

இறைவன் அறிவே சொரூபமானவன் என எடுத்தியம்பும் சித்தாந்தம் அவ்வறிவை அறியும் தெளிந்த ஞானம் ஆன்மாவென எடுத்தாளும். 'அறியுமறிவு நீ யன்றோ' எனத் துகளறுபோதம் சுட்டி நிற்பதும் இதனையேயாகும். 59 ஆன்மா உண்மையை உணர்ந்து இயல்பினின்று நீங்கி, மெய்ப்பொருளைத் தன் உணர்வின்கண் விளங்கக் காண்பதே பிறவிப் பயனின் தலையாய செயலாகும். இவ்வகையில் உயிர்க்கு விளங்கும் உணர்வு விளக்கங்களை பாசஞானம், பசுஞானம், பதிஞானம் எனும் மூன்று படி நிலைகளில் வைத்துச் சைவசித்தாந்திகள் விளக்கி நிற்பர். உயிர் சடத்துவநிலை நின்று புலன்கள் வழி உலகப் பொருட்களைத் தனித்தனிச்சுட்டி அறியும் உணர்வானது பாசஞானம் எனப்படுகி ன்றது. மறுவார்த்தையில் கூறின் புறவுலக அறிவிலிருந்து தன்னுணர்வறிவாக மாறுகின்ற போது பாசஞானம் எனப்படுகிறது. உண்மைப் பொருளை அறிய முயல்பவன் தான் யார்? என உணரத்தலைப் படுகின்றான். இந்நிலையில் அவன்,

'உன்னறிவை நீவே யுணர்வையே யாமாகி
வின்னெடுநாட் பாசத் தியையாயே - உன்னறிவை
நீங்கா வறிவாகி நீரு மிரதமும் போ
லாங்கா ணரனா ரருள்'

எனத் துகளறு போதம் சுட்டும் உண்மையை உணருபவனாகின்றான். 60 இந்நிலையில் திருவருளின் உண்மையைப் பொதுவாக உணருவானாயினும் தனக்கு எச் செயலும் செய்தல் இயலும் எனக்கருதும் உணர்தல் கூடும். இது முதல்வனோடு தன்னைச் சமம் என உணர்வாக அமைவதால் சிவசம உணர்வு எனப்படும். இவ்வுணர்வும் மெய்யுணர் வாவதில்லை என்பர். 64 'யான்' எனது எனும் செருக்கு உள்ள நிலையில் உணரப்படும் ஞானம் பசுஞானம் எனப்படும். பசு ஞானத்தில் பாசப்பற்று இல்லாதிருப்பினும் செருக்கு அகங்கார நிலைப் பாடு முற்றும் நீங்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விரு நிலைகளிலும் சிவனை உணர்தல் சாத்தியமில்லை.

"பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் ஈசனை உணர வொண்ணாது..."

எனச் சிவப்பிரகாசம் சுட்டுவதும் 62

"இருவகை ஞானமு நீங்க அருளால் ஆவி ஈசனடி கூடவிறை ஞானமாமே"

எனச் சிவஞானதீபமும் சுட்டுவதும் 63 மேற்கூறிய கருத்தைத் தெளிவாக்குகின்றன.

தன்னுணர்வு அடங்கி அவனுணர்வில் கலக்க உதவும் ஞானம் பதி ஞானம் ஆகும். இந்நிலையில் பசு ஞானம் விட்டகன்று விடும். திருவருளின் உண்மையினை உணரும் உணர்வே பதி ஞானமாகும். இதனையே சேக்கிழாரும்,

'பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்'

எனக் குறிப்பிட்டுள்ளார். உமாபதி சிவாசாரியாரும் 'நன்னலம் பெற நிறைந்த ஞானமே ஞானம்' எனச் சிறப்பித்துக் கூறுதல் காணலாம்.64

சிவம் பாச ஞானத்தாலும், 65 பசு ஞானத்தாலும், 66 அறியப்படுமென்பதனை அருணந்தி சிவாசாரியார் தெளிவுற விளக்குவார்.

***"அறிபொருள் அசித்தாய் வேறாமறிவுறாப் பொருள் சத்தென்னின்
அறிபவனறியா னாகி லதுவின்று பயனுமில்லை
அறிபவனருளி னாலே யநந்நிய மாகக் காண்பான்
அறிபொரு ளறிவாய் வேறா யறிவரு ளுருவாய் நிற்கும்67***

என எடுத்தாளுவதன் வழி ஆன்மா பதி ஞானத்தைத் துணைக் கொண்டு சிவத்தைத் தன்னின்று வேறற்ற வகையில் அத்துவிதமாய் காண்பான் என்பது பெறப்படும்.

***அறிவொன்றை நின்று அறிவார்
அறிவில் பிறிவொன்றறநின்ற பிரான்***

எனக் கூறும் அநுபூதிநிலை புலனாகின்றது. மேலும் 'அறிவுதனை யருளினா னறியாதே யறிந்து கொள்ளும்' பக்குவமும் வந்தமைகின்றது.68

பாச ஞானம் நீங்கிப் பசு ஞானமும் பின்னர் பசு ஞானம் நீங்கிப் பதி ஞானமும் அமையும் தகைமையில் தசகாரியம் அல்லது உண்மை ஞானம் எனும் பத்து நிலைப்படிகளில் அறிதல் சாத்தியமெனச் சைவ சித்தாந்தம் மொழிதல் காணலாம். இப்பத்து படிமுறைச் செயல்களும் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப்படும்.

ஆன்மா, ஐம்பொறி முதலியவற்றின் செயலைத் தன்செயலாகக் கண்டுணரும் உணர்வே பாச ஞானமெனக் கண்டோம். பொருளுணர்வைத் தோற்றுவிக்கும் முப்பத்தாறு தத்துவங்களின் தொழில் களையும், குணங்களையும் ஆன்மா தனக்கு வேறாக உள்ளதென அறியும் நிலையே தத்துவ ரூபமாகும். இம் முப்பத்தாறு தத்துவங்களும் சுத்த மாயை, அசுத்த மாயை ஆகிய காரியமென்றும் அவை சடமானதென்றும் ஆன்மா அறிதலே தத்துவ தரிசனமாகும். முப்பத்தாறு தத்துவங்களும் தன்னிலிந்து வேறானவை என்பதனை அறிந்ததோடு அவற்றினின்று நீங்கி நிற்றல் தத்துவ சுத்தியாகும்.

இதனையே

***"மண்முதற் சிவமதீறாம் வடிவு பதுவேரூபம்
மண்முதற் சிவமதீறாம் மலம்சடம் என்றல் காட்சி
மண்முதற் சிவமதீறாம் வகைதனில் தான்றி லாது
கண்ணுதல் வருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதுமன்றே"***

திருவருள் துணையால் ஆன்மாக்களின் மலவாசனை குன்றும். மலத்தின் வலி குன்ற ஆன்மா இதுவரைஅறிந்த கருவிகள் சடமென்றும் தன்னியல்பினின்று அவை வேறுபட்டவை என்றும் பிரித்துணரும் தன்மையை அடைகின்றது. இதனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைநெறி விளக்கம்,

பாயிருள் நீங்கி ஞானந் தனைக் காண்டல் ஆன்ம ரூபம் '

என விளக்கி நிற்றல் தெளிவிற்குரியதாகும் 70.

'அந்த மலமா மறியாமை கண்டாயே

அந்த வறிவுநீ யையனே தொந்தவிருள் போனதே உன்னைவிட்டுப் போக்கித் திரோதையரு ளானதே கண்டாயறி'

எனச் சிற்றம்பல நாடிகள் உரைப்பதும் மேற்கூறிய கருத்தையே அரண் செய்கின்றது. 71. இதனை ஆத்ம ஞானம் எனக் கூறினும் பொருந்தும்.

முப்பத்தாறு தத்துவங்களும் தானல்ல என்பதை அறிந்தவுடன் திருவருள்வழி தன்னிலை உணர்ந்து கூடி நிற்றல் ஆன்ம தரிசனமாகும்.
இதனையே

நீயும் நின் செயலொன்றின்றி நிற்றலே தெரிசனந்தான்'

என அழகுற எடுத்துரைத்தல் காணலாம்.72 மல இருள் நீங்கிய 'கண் போல் நீயும் சடப்பொருளோ? காட்டியதுங் கண்டறிந்த வொண் போத நீ யென்றுணர்' எனச் சிற்றம்பல நாடிகள் உரைப்பதும் ஆன்ம தரிசனத்தை விளக்குவதாகிறது. 73 தன்னிலை உணர்ந்து அவனருளே தானாகித் தற்போதமும் கெட்டு நிற்கும் நிலை ஆன்ம சுத்தி எனப்படும். இங்கு சிவப்பேறு பெற்றோம் எனும் தகைமையில் தான் எனும் மலபந்தமற்றுப் பரமானந்தப் பொருளோடு அதுவாய் நிற்றல் அமைவுறுகின்றது.

ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம் என்பன பசு ஞான நிலைக்குரியனவாகும். சிவ ரூபம் சிவதரிசனம் ஆகிய உணர்வுகளால் பசுத்துவ வாதனையானது முழுமையாக அகன்று விடும்.

ஆன்மாக்களின் மலவாசனையை போசிப்பதற்காக பல்வேறு வடிவங்களெல்லாம் தனது வடிவமாகின்ற பரை வடிவினைக் கொண்டு உயிர்களுக்கு உயிராக நின்று திருவடி ஞானத்தை அளிப்பன். ஆன்மாவானது குருவருளால் திருவருளை உணர்ந்து இறைவன் திருவடிகளின்று பிரிவின்றி அணைந்திருக்கும். சிவன் குருவடிவாய் திருவருளை உணர்த்தி நிற்பான். இவ்வகையில் திருவருளையே இடமாகக் கொண்டு காணுதல் சிவரூபமாகும். உண்மை நெறிவிளக்கம் இதனை 'எவ்வடிவுகளும் தானாம் எழிற் பரைவடிவதாகி....' ஒருவனென்றே செவ்வையே உயிருட்காண்டல் சிவரூபமாகும் என விளக்கி நிற்றல் காணலாம். 74 சிவ ரூபம் ஆன்மாக்களுக்கு ஞான தரிசனமாகின்றது. இச்சா, ஞானா, கிரியா சக்திகள் தோன்றுதற்கு இடனாகிய பரா சக்தியானது ஆன்மாக்கள் உண்மை ஞானத்தைப் பெற்றுய்யுமாறு ஆன்மாக்களுக்கு உணர்த்தும் வகையில் சிவதரிசனம் அமைகின்றது. அத்தன்மையால் வரும் சிறப்பைத் துகளறு போதம்,

***விண்ணிற் கதிரோன் விளக்கி விரிந்தது போல்
கண்ணிற் கதிரோன் கலந்தது போல் - நண்ணி
பரைநிறைவில் நீயும் பதிவையே யாகி
லுரையிறந்திட் டொன்றாவை யுற்று'***

என எடுத்தாளுவது காணலாம்.75

அனைத்துமான சிவத்தினைக் கண்டுணர்ந்து ஆன்மாவானது தன் செயலின்றி சிவத்தோடு ஒன்றித்து அத்துவிதமாய் இரண்டற்றுக் கலத்தலே சிவ யோக நிலையதாகும். சிவனை விடுத்து வேறொன்றுமில்லை என்பதனை கண்டு அகமும் புறமும் சிவத்தோடு கூடிநிற்றலே சிவ யோகமென ஆன்றோர் வாக்குகள் எடுத்தாளும். அதனை துகளறுபோதம் 'நீருறங் குந்தன்மைபோல' நிற்றலே சிவயோகமென விளக்கி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அந்நிலையில் அதுவுந் தெரியாது நிற்றல் போகமென மேலும் சுட்டி நிற்கின்றது. சிவ போகத்தை விளக்க முற்பட்ட உண்மை நெறிவிளக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...... தனக்கென ஓர் செயலற்றுந் தான் அதுவாய்
நிற்கில்
நாதன் இவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து
நானாபோ கங்களையுந் தானாகச்
செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசநெறி இதுவே"

என விளக்கி நிற்கின்றது.76 இவனுடன் இவனுயிருமாய் சிவன் நின்று நானாவித விடய போகங்களையும் ஆற்றிப் பேதமற நிற்பன் என்பது தெளிவாகும். இங்கு தன்னறிவு சிவனறிவாய் மாறப் பெற்று விளங்குவர். இந் நிலைக்கும் மேலாய்ப் பேரின்ப நிலைக்குரித்தாய் விளங்கும் நிலை சிவ போகமாகின்றது. இதுவே சாயுச்சிய முத்தி நிலை என அழைக்கலாம்.

இறைவனை உணர்வதற்கான உந்துதல் நிலையில் பாச ஞான பசு ஞான படிநிலை வளர்ச்சியானது ஆன்ம உணர்வு முனைப்பாக(Self consciousness force) ஆன்ம சிற்சக்தியாக விளக்கப்படுகின்றது. இவ்வான்ம சிற்சத்தியே பதி ஞான வளர்ச்சியில் சிவ சிற் சக்தியாக வளர்கின்றது என எடுத்தாளலாம். ஆன்ம சிற்சக்தியானது சித்தாந்தத்தில் நான்காவது பிரமாணமாக முருகேசு முதலியார் போன்றோரால் எடுத்தாளப்பட்டிருப்பினும் அதுஅத்துணை தூரம் பொருத்தமான தொன்றல்ல. அளவைப் பிரமாணங்களான காட்சி, அனுமானம், வாக்கு ஆகியவற்றின் வழி பெறப்படுகின்ற அறிவு வளர்ச்சியானது பௌதீக அதீத உண்மைப் பொருளை உணர்த்துவதற்குரிய படிநிலையில் ஆன்மசிற்சக்தி என்பனவற்றை எடுத்தாளப்படலாம் என்பதே பொருத்தமானதாகும். பாச ஞானம், பசு ஞானம் எனும் படிநிலையில் சித்தாந்த ஞானநிலை அமைவதனையே மேற்கூறிய நிலையும் ஒக்குமெனலாம். முத்திநிலையில் ஆணவ மலமானது பாசஞானத்தில், பசுஞானத்தில் ஆன்ம சிற்சக்தியும் வலிகுன்றுமென்பதும் பதிஞானத்தில் சிவசிற்சக்தி பற்றிய செயல்தத்துவம் உயிரோட்டம் பெறுமென்பதும் நுண்ணியதான ஆய்வுக்குரிய பொருள் விடயங்களாகலாம்.

பதி ஞானமடையப் பெறுமொருவன் தனக்கென ஒரு செயலற்றுத்தான் அதுவாய் நிற்கும் பேரின்ப நிலையாம் சாயுச்சிய முத்திப்பதம் பெறுவான் எனச் சைவ சித்தாந்தம் சுட்டிநிற்றல் குறிப்பிடத்தக்கது.

சைவசித்தாந்திகள் சிவனை அறிதலிலும் பார்க்க உணர்தற்குரியதென்பது பெரிதும் பொருத்தமான தெனக் கருதுவர். பிரமம் உணர்வு மயமானவன். சச்சிதானந்தம் எனும் சொல்லாட்சியும் இவ்வுண்மை நிலையினை அடிநிலையாகக் கொண்டு விளக்கவல்ல தாகும். பிரமம் உணர்தற்குரியதெனின் பிரமத்தை ஞானம் என்று சொல்லுவது எத்துணை தூரம் பொருத்தமானது எனும் ஆசங்கையும் எழுகிறது. சுந்தரராமையா பிரமத்தினை ஞானமென்று சொல்லால் வர்ணிப்பதும் பொருத்தமானதல்ல என எடுத்துக் காட்டுகின்றார்.77 ஞானம் என்பதும் ஒரு சொல்லாக இருப்பதனால் அது புத்தியின் குணத்தினை அல்லது மாறுநிலையினைச் சுட்டுவதாக அமையும் என்கிறார். எனினும் ஞானம் என்ற சொல் பிரமத்தை நேரடியாக விளக்குவதாக அமையாவிடினும் உள்ளுணர்த்தி நிற்க வல.' லதென ' பது । தெளிவாகும்.'உன்னறிவுக்குள்ளேயுணர் வாய்......' எனும் கூற்றும் இத்தன்மையைப்]லப்படுத்துகிறது.

அஞ்ஞானத்தினின்று பரிபூரணமான பிரமானுபவம் அடைதலே இறுதியிலக்காக அமைவதால்,

" ஆருமறியாவகண்ட பரிபூரணமாய்ப்
பேரறிவாய் நிற்கும் பெற"

எனச் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் எடுத்தாளுவது காணலாம். 79 இதுவே பட்டினத்தாரும் 'மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே' எனச் சுட்டுகின்ற அறிவு பூர்வமான பேரின்பப் பெரு வாழ்வாகின்றது. இதனையே கண்ணனும் 'எல்லாச் செயலும் தெய்வீக ஞானத்தில் முடிகின்றது' எனப் பார்த்திபனுக்குச் சொல்லுவது நயக்கத்தக்கதாகும்.80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புக்கள்

1. Philosophy என்ற சொல்லானது Philosophia எனும் கிரேக்க சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். கிரேக்க சொல்லான sophia என்பது ஞானம் எனப் பொருள் குறித்து நிற்கும். Philo விழைவு அல்லது விருப்பு எனப்படும். இது ஞானத்தில் விருப்புஅல்லது ஞானநேயம் (love of wisdom) எனப் பொருள் தருவதாகும்.
see Passmore. John 1972 'Philo sophy' Encyceopedia of Philosophy Ed Paul Edwards Collier macmillan Publishers London Vol 5P.216

2. வித்-அறிவு - வித்யா அறிவிலிருந்து பிறந்தது வித்தை. வித்தியாலயம் என்பனவும் இதனிலிருந்தே எழுந்தது. வேதம் எனில் மிகச் சிறந்த அறிவு எனப்பொருள் படுவதாக பேராசிரியர் சிவசாமி தனது நூலில் குறிப்பிடுதல் காண்க. சிவசாமி. வி.1989 சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் நியூஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் யாழ்ப்பாணம்.

3. Margaret and james stutley. A Dictionary of Hinduism. United King dom P.312

4. Prasad jwals. 1987. History of I dian Epistemology Munohiram manaharlal Publishers, New Delhi P.138

5. Gnanakumaran.N. 1989 Indian Philosphy and Knowledge's The Evelyn Ratnam Institute's Seminar Papers 1989 University Lane. Jaffna PP.2 -3

6. Margaret and James stutley. Op.Cit P.332

7. இப்பதினான்கு வகையில் நான்குவேதம் ஆறுவேதாங்கங்கள் புராணங்கள் மீமாஞ்சை, நியாயம் தர்மம் என்பன அடங்குமென்பர்.

8. மேலே சுட்டப்பட்ட பதின்னான்கு பிரிவினுள் அடங்குவனவற்றுடன் நான்கு உபவேதங்களும் உள்ளடங்குமென்பர்.

9. Mundaka Upanisad I-i-iv

10. katha Upanisad I-ii-23

11. Mundaka Upanisad I-i-vi

12. சிவஞானசித்தியார் சுபக்கம் செய்யுள் 276

13 பேரளம் சிரேவணம் சித்தரின் சிவஞானதீபம்- செய்யுள் 62

14 சிவஞான சித்தியார் - சுபக்கம், அவையடக்கம் செய்யுள் 60

15. "கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலாமெய் தெளிலால் வாட்டமுறா வுற்பல நோய் மாறுமோ-நாட்டமுற்று மெய்யான நிட்டையினை மேவினர்கட்கின்றோதான்பொய்யாம் பிறப்பிறப்போம்" தாயுமானசுவாமிகள் பாடல்கள்.ஸ்ரீராம கிருஷ்ணதபோவனம், திருச்சி1980 உடற்பொய்யுறவு - செய்யுள் - 8 ப241

16. சிவஞானசித்தியார், சுபக்கம் - செய்யுள் 276
17 "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம் உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் தவமுதல்வர் சம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமுணர்தாரந் நிலையில்" சேக்கிழார் பெரியபுராணம், 1950 திருத்தொண்டர் புராணம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட வெளியீடு, திருச்சிராபபள்ளி ப.309

8. மெய்ஞ்ஞானம், உண்மைஞானம் சிவஞானம், துகளறுபோதம் அருள் ஞானம், பரஞானம் என்பன ஒரு பொருள் சுட்டுவன.

19. "எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" - குறள் 355 மெய்யுணர்தல். "எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" - குறள் 423 - அறிவு உடைமை

20. திருக்குறள், மெய்யுணர்தல் குறள் 358

21. மேற்குறிப்பிட்டது. குறள் 356 குறள், 358

22. மேற்குறிப்பிட்டது. குறள் 357

23. குறள் 358

24. மேற்குறிப்பிட்டது. குறள் 359

25. சீவகசிந்தாமணி - முத்தி இலம்பகம் 2845

26. Sreenivasa RaoG.S.S. The concept of being in Radhakri shnan and Tillich, Indian Philosophical Annual. Vol XII Madres University madras P 96

27. துரைசுவாமிப்பிள்ளை (பதிப்பு) 1954 வாசகரின் ஞானாமிர்தம், அண்ணா மலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.ப.87

28. சிவஞான சித்தியார், சுபக்கம் செய்யுள் 279

29. Aitareya Upanisad III.i.3

30. சச்சிதானந்த சுவாமிகள், 1899, திருக்குத்திரிசிய விவேகம், திருத்துருதி இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகள் ஆதீன தருமபரிபாலன சபை, சென்னை.ப.77

31. அருணாசலம் (பதிப்பு) ஆளவந்தாரின் ஞானவாசிட்டம் - 1937 சென்னை ப.298

32. see Taittriya Upanisad Brhaddaran yaka Upanisad III, ix,28;ii.iv. 12 Aitareya Upanised V.3 etc.

33. திருவாசகம் - சிவபுராணம் - செய்யுள்வரி 35

34. திருவருட்பயன், பதிமுதுநிலை,-செய்யுள்1

35. தாயுமான சுவாமிகள் பாடல்கள், எந்நாள் கண்ணி 14 - 7

36. பொன்னம்பல சுவாமிகள் (உரை) 1922, கைவல்ய நவநீதம், சென்னை அமெரிக்கன் டைமண்ட்பிரஸ், சென்னை ப. 100

37. அறிவு - அறிவின்மையைச் சுட்ட வித்தை - அவித்தை எனும் பதங்கள் வேதாந்தம் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தரிசனங்களாலும் எடுத் தாளப்படுகின்றன. ஈசுவாசிய உபநிடதம் 9 - 10 - 15 பிருகதாரணிய உபநிடதம் 4 - 3 - 20 : 4-4-3 கதோ உபநிடதம் 2, 4, 5

38. சுவேதாஸ்வர உபநிடதம் 5.1

39. திருவாசகம் - சிவபுராணம் செய்யுள்வரி 40

40. தாயுமான சுவாமிகள் பாடல்கள், எந்நாள் கண்ணி 14-28

41. முற்குறிப்பிட்டது, சச்சிதானந்த சுவாமிகள் ப 215

42. காரைக்காலம்மையார், அற்புதத்திரு வந்தாதி, செய்யுள் 20

43 திருமூலர் திருமந்திரம் 2318 ம் பாடல்

44. ஆரணி குப்புசாமி முதலியார்,1924 சிந்தனை வெண்பா கைவல்ய நவநீத வசனம் ஆனந்தபோதினி சென்னை ப.94

45. ஈசானசிவன் (உரை) 1950 துகளறு போதம், கலாநிதியந்திர சாலை, பருத்தித் துறை, இலங்கை செய்யுள்கள் 30ம் 37ம்

46. சிவஞானபோதம் - பத்தாம் சூத்திரம்

47. தாயுமான சுவாமிகள் பாடல்கள், ஆசை எனும் செய்யுள் 24

48. சிவஞானசித்தியார் - சுபக்கம் செய்யுள் 5

49. திருஞானசம்பந்தர் தேவாரம் - 3312 -5

50. திருவருட்பயன் - உயிரவைநிலை குறள் 5

51. திருவருட்பயன் - உயிர்விளக்கம் குறள் 9

52. சிவஞான போதம் - ஒன்பதாம் சூத்திரம்

53. சிவஞானசித்தியார் சுபக்கம் செய்யுள் 279

54. பிரம சூத்திர பாஷ்யம் 1-1-3

55. Kena upanisad i 3, Katha Upanisad I ii 9

56. Aitareya Upanisad iii i 3

57. காசிவாசி செந்திநாதையர், 1917, தேவாரம் வேதசாரம் சைசித்தாந்த மகா சமாஜம், சென்னை ப.45
58. சிவஞானசித்தியார், சுபக்கம் செய்யுள் 274

59. துகளறுபோதம், செய்யுள் 34

60. மேற்குறிப்பிட்டது, செய்யுள் 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. வச்சிரவேல் முதலியார் க 1977, சிவஞான பாடியத்திறவு சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை ப 132

62. சிவப்பிரகாசம் - செய்யுள் 85

63. சிவஞானதீபம் - செய்யுள் 154

64. சிவப்பிரகாசம் - செய்யுள் 69

65. சிவஞானசித்தியார் - சுபக்கம், 246ம் பாடல்

66. சிவஞானசித்தியார் - சுபக்கம், 247ம் பாடல்

67. சிவஞானசித்தியார் - சுபக்கம், 245ம் பாடல்

68. சிவஞானசித்தியார் - சுபக்கம், 282ம் பாடல்

69. உண்மைநெறி விளக்கம் பாடல் 1

70. மேற்குறிப்பிட்டது பாடல் 21

71. துகளறு போதம் பாடல் 30

72. உண்மைநெறி விளக்கம் பாடல் 2

73. துகளறு போதம் பாடல் 32

74. உண்மைநெறி விளக்கம் பாடல் 3

75. துகளறு போதம் பாடல் 45

76. உண்மைநெறி விளக்கம் பாடல் 8

77. Sundara Ramaiah, S, 1988 language Sentences and Brahman Advaita Vedanta. The Voice of Sankara, Madras Feb., May 1988 PP 117-124

78. துகளறு போதம் பாடல் 40

79. மேற்குறிப்பிட்டது பாடல் 42

80. Sarvam karmakhilam pratha Jnana parissmapyata. Bhagavad Gita -33.

நன்றி :- சைவசித்தாந்தத்தெளிவு
முதற்பதிப்பு - 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. வை. தாமோதரம் பிள்ளை - பதிப்புப் பணி: ஒரு மதிப்பீடு

அ. பாண்டுரங்கன்

0. தமிழ் மொழி ஆராய்ச்சி வரலாற்றில் சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901) இருண்ட வானில் ஒரு விடிவெள்ளி. தமிழ் மக்களின் பண்டை வரலாற்றை - பெருமையை - புகழை - நிலைநிறுத்துவதற்குத் தேவையாக இருந்த ஆவணங்களைக் கறையான்களின் வாயிலிருந்து மீட்டெடுத்துக் கொடுத்த தனி மனிதன் சி.வை. தாமோதிரம்பிள்ளை (சி.வை.தா). யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த, அப்போதுதான் தொடங்கப்பட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தில் (1857) முதல் பட்டதாரியான சி.வை.தா. சென்னை அரசாங்க வரவு-செலவுக் கணக்கு அலுவலகத்தில் ஓர் அலுவலராக நுழைந்து, அத்துறையின் தலைவராகவும் உயர்ந்தார். ஒய்வு பெற்ற பிறகு புதுக்கோட்டை அரசின் நீதிபதிகளுள் ஒருவராகவும் அவர் மூன்று ஆண்டுகாலம் பணியாற்றினார். புதுக் கோட்டை அரசின் மிக உயர்ந்த பதவியாகிய திவான் பதவியை அரசர் அவருக்கு விரும்பி அளித்தபோதிலும், தம் தமிழ்ப்பணிக்கு அது இடையூறாக அமையும் என்ற கருதி அதனை ஏற்கமறுத்துப் பதிப்புப் பணியில் ஈடுபட்ட தமிழ்த்தொண்டர் சி.வை.தா. இந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் சி.வை.தா.வின் பதிப்புப் பணி - சிறப்பாக இலக்கியப் பதிப்புப் பணி-மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சி.வை.தா.வின் பெருமையை விளக்கும் வகையில் அவருடைய பணி உ.வே.சாமிநாதையருடைய (உ.வே.சா) பணியோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றது. அவ்விருவரிடையை நிலவிய உறவு சி.வை.தா., உ.வே.சா.வுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து தெளிவாகின்றது.

0.1. சி.வை.தா.வின் பதிப்புப் பணியின் முக்கியத்துவம் அவர் வாழ்ந்த காலச் சூழலை அறிந்து கொண்டால், தெளிவாக விளங்கும். அவர் வாழ்ந்த காலம் இருண்ட காலம் அன்று. அவருடைய சம காலத்தில் மரபு வழியாகத் தமிழ்ப் புலமை பெற்றவர்களும் மேனாட்டுக் கல்வியும் தமிழ்ப் புலமையும் நிரம்பிய பலர் இருந்தனர். சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ் நூல்கள் பதிப்புப் பணியில் முன்னோடியாகத் திகழ்ந்த ஆறுமுக நாவலர் சைவசமய நூல்களோடு திருக்குறள், வில்லி பாரதம் என்னும் இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிட்டார். சைவ சமயத்தின் வழி தமிழைக் காப்பதே நாவலர் பெருமானுடைய குறிக்கோளாக இருந்தது. சென்னைக் கல்விச் சங்கத்தின் தலைமைப் புலவராக விளங்கிய தாண்டவராய முதலியார் திவாகர நிகண்டைப் பதிப்பித்ததோடு நின்றுவிட்டு, பள்ளி மாணவர்களுக்குத் தமிழ்ப் பாட நூல்களை எழுதுவதில் தம் முழுக்கவனத்தையும் செலுத்தினார். மழவை மகாலிங்க ஐயர் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்து வெளியிட்டார். களத்தூர் வேதகிரி முதலியார், திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர், திருவேங்கட முதலியார், இராசகோபாலப் பிள்ளை போன்ற பெரும் புலவர்கள் இடைக்கால நூல்களில் ஒன்று அல்லது இரண்டைப் பதிப்பித்து வெளியிட்டார்களே அல்லாமல், சங்க இலக்கிய இலக்கணங்களைப் பதிப்பித்து வெளியிட்டார் அல்லர். உ.வே.சா. சங்க இலக்கியங்களில் எதனையும் பதிப்பிப்பதற்கு முன்பே, சி.வை.தா. 1868 இல் தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் உரையைப் பதிப்பித்து வெளியிட்டார். அடுத்தடுத்து வீரசோழியம் (1881), இறையனார் அகப்பொருள் உரை (1883), தொல்காப்பியம் - பொருளதிகாரம்- நச்சினார்க்கினியம் பேராசிரியம் (1885) ஆகியவற்றை வெளியிட்ட பின், 1887 இல் சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையை நச்சினார்க்கினியருடைய உரையோடு முதன் முதலாக வெளியிட்டார். நமக்கு தெரிந்த வரையில், வேறு யாரும் சங்க இலக்கியங்களில் எதனையும் சி.வை.தா.வுக்கு முன்னர் வெளியிட்டார் அலலர். கலித்தொகை வெளியீடு இந்த ஆண்டில் (1996) நூற்றாண்டைக் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. சி.வை.தா. அவர்கள் கலித்தொகையை வெளியிட்ட அதே ஆண்டில் தான் (1887) உ. வே. சா. முதன் முதலாகச் சீவக சிந்தாமணியை வெளியிடுகின்றார். என்பதனையும் இத்துடன் சேர்த்து எண்ணிப் பார்க்க வேண்டும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான பத்துப்பாட்டை ஐயர் அவர்கள் சேர்த்து எண்ணிப் பார்க்க வேண்டும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான பத்துப் பாட்டை ஐயர் அவர்கள் 1889 ஆம் ஆண்டில் தான் சி.வை.தா.வின் கலித்தொகைப் பதிப்பு வெளியான இரண்டு ஆண்டுகள் கழித்துத் தான் - வெளியிட்டார் என்பதனையும் எண்ணும் போது, சங்க இலக்கணப் பதிப்புகளின் முன்னோடி சி.வை.தா. தான் என்று தெளிவாக உணர முடிகின்றது.

உ.வே.சா. உடன் ஒப்பிடும்போது சி.வை. தா. மரபுவழியான தமிழ்ப்புலமை வாய்ந்தவரா என்ற ஐயம் சிலர்க்கு எழுவது இயல்பே ஆகும். சி.வை.தா.வின் கல்வி பற்றி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறியிருப்பது இங்கு எண்ணத் தக்கது.

தாமோதரம்பிள்ளை பிரசித்தி பெற்ற சுன்னாகம் முத்துக்குமார கவிராயரிடந் தமிழும் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் ஆங்கிலமும் படித்தவர். 1852 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தாமோதிரம்பிள்ளை தமது இருபதாம் வயதில் வட்டுக்கோட்டைக் கல்லூரியிற் படிக்கத் தக்கவையாயிருந்த ... எல்லாப் பாடங்களிலும் முதல்வராகத் தேறி வெளியேறினார் (இலக்கிய வழி 1981; 129)

சி.வை.தா.வின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய த.இராஜரத்தினம் பிள்ளையின் நூலிலிருந்து சி.வை.தா. சுன்னாகம் முத்துக்தமாரக் கவியராயரிடம் கந்த புராணம் முதலிய நூல்களைக் கற்றார் என்று மனோன் மணி சண்முகதாஸ் குறிப்பிடுவதும் (1983:9) இங்கு இணைத்து நோக்கத் தக்கது. எனவே உ.வே.சா. அவர்களைப் போன்றே சி.வை.தா. அவர்களும் தமிழ் இலக்கண இலக்கியங்களை வரன்முறையாகக் கற்றிருந்தார் எனத் தெரிகின்றது. இக்கல்வி ஐயருக்கு வாய்த்தது போன்று ஆசிரியர்-மாணவர்(குரு -சிஷ்யர்) பரம்பரையாக அவருக்கு வாய்க்கவில்லை என்றாலும், பண்டைத் தமிழ் நூல்களைப் பதிப்பிடுவதற்குத் தேவையான அளவு அவரிடம் தமிழ்ப் புலமை நிரம்பிக் கனிந்திருந்தது என்பது அவருடைய பதிப்புரைகளிலிருந்தே தெளிவாகின்றது.

1. சி.வை.தா. அவர்கள் 1854 முதல் 1892 ஆம் ஆண்டு முடிய 11 நூல்களைப் பதிப்பித்துள்ளார் அவற்றுள், 4 தொல்காப்பிய உரைப்பதிப்புகள் 1 கலித்தொகை 1 முற்கால இலக்கணமான இறையனார் அகப்பொருள்; இடைக்காலக் காப்பியமான சூளாமணி1; இடைக்கால இலக்கண நூலான வீரசோழியம் உரை1; பிற்காலப் புராண இலக்கியமான தணிகைப் புராணம்1; பிற்கால இலக்கண நூலான இலக்கண விளக்கம்1; குமரகுருபரரின் நீதி நெறி விளக்கம் 1 அடங்கியுள்ளன. 38 ஆண்டுக் காலத்தில் இவ்வெண்ணிக்கை குறைவாகத் தோன்றலாம். ஆனால் முதல் முதலாக ஏட்டுச் சுவடியில் உள்ள நூலைப் பதிப்பிடுவதில் உள்ள தொல்லைகளையும் வழக்கில் இல்லாமல் இருந்த பழம்பெரும் நூல்களைப் பதிப்பி டுவது குறித்துப் புலவர்களிடம் இருந்த மனப்பான்மையையும் அறியும் போது, சி.வை. தா.வின் பணி ஓர் அருஞ்சாதனை என்றே சொல்ல வேண்டும். தாம் பதிப்பித்த நூல்களில் ஏட்டுச் சுவடிகள் பற்றி சி.வை.தா. குறிப்பிடுவது காணத்தக்கது.

மூன்று விரலைக் காட்டிக் கட்டிலிற் கால் போல் பஞ்ச பாண்டவரையும் ஆறு கோணத்தில் நிறுத்துக என்பான் தொகை விபரீதத்தோடு விரலை வாலென்றும் கட்டிலைக் கடாலென்றும் பஞ்ச பாண்ட வரைப் பிஞ்சுப் பாகற்காய் என்றும் மாற்றி எழுதி வைத்தால் அம்மொழியைச் சரிப் படுத்தல் இலேசாகுமா? அதுபோலவே 'விலாசம் பரிசர்ப்பம் விதூதம் சமம்நர்பம் நமதூதி பிரகமம் நிரோதம் பரியுபாசனம் வச்சிரம் புட்பம் உபநியாசம் வருணசங் காரம் இவை பயிர் முகத்தில் அங்கம் பதின் மூன்று' என்பது 'பிரவாகம் விருத்தியமம் விவாசம் தாவனம் சயதூரகம் மரிசோதம் பரியாணம் பாவைச்சிரம் செல்வம் வருண சங்கரம் இவை பிரதிமுகத்திலங்கும் பதின்மூன்று' எனக் கிடந்த ஏட்டுப் பிரதிக ளோடு பட்ட பிரயாசைக்குப் பிரயாசை யென்னுஞ் சொல் போதுமா? முதலினின்று முடிவு வைரக்கும் ஒரொருவரி ஒரொரு நொடியாகவே கொண்டு வாழ்ந்தோம் கலித்தொகைப் பதிப்புரை, 1887: 26-7 தம் காலத்தில் இருந்த ஏடுகளின் நிலை குறித்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கலித்தொகைப் பதிப்புரையில் கண்ணீரால் எழுதுகின்றார்: என் சிறுபராயத்தில் எனது தந்தையார் எனக்கு கற்பித்த சில நூல்கள் இப்போது தமிழ் நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களுங் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த்தாலன்றோ தெரிய வரும்! ஏடு எடுக்கும் போது ஓரஞ் சொரிகின்றது: கட்டு அவிழ்க்கும் போது இதழ் முறிகின்றது: ஒன்றைப் புரட்டும்போது துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக ளோவென்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது. (மேலது:46)

பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியம் இல்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பாரக்கின்றாளில்லை திருவுடையீர்! இந்நாட்டவரினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்து மென்? காலத்தின் வாய்ப்பட்ட ஏடு களைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராச முந்தான் மீரும். அரைக்காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது....... எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கினும் மனந் தளம்புகின்றதே! தமிழ் மாது நுந்தாயல்லவா! இவள் அழிய நமக்கென் னென்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் இவையில்லாதார் பெருமையும் பெருமையா! இதனை தயைக் கூர்ந்து சிந்திப்பீர்களாக. (கலித்தொகைப் பதிப்புரை, 1887:68-9)

சி.வை.தா.தம் தாய்மொழி மீது கொண்டிருந்த எல்லையற்ற அன்பே அவரைப் பழந்தமிழ்ப் பதிப்பு முயற்சிகளில் ஈடுபடுத்தியது என்பதற்கு இஃது ஓர் நல்ல சான்றாக அமைகின்றது.

1.1 சி.வை.தா.வின் பதிப்புப் பணிகளை நோக்கும் முன்பு, பதிப்புப் பணி பற்றிச் சுருக்கமாகக் காண்போம். பதிப்பாசிரியப் பணிகளில், பதிப்பின் நோக்கம் முக்கியமானதாகும். யாருக்காக, என்ன நோக்கத்தோடு நூல் பதிப்பிக்கப்படுகின்றது என்பதனை ஒட்டிப் பதிப்புகள் அமையும். பண்டைத் தமிழ் நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதே சி.வை.தா.வின் முக்கிய நோக்கமாக இருந்தது. சுவடிகளைப் பிரதி செய்வது, திருத்தமான பாடத்தை முடிவு செய்வது, நூலின் அமைப்பைத் திட்டமிடுவது, முதல் பக்கம் எவ்வாறு அமைய வேண்டும் என முடிவு செய்வது, உள்ளுறை, பக்க எண், பிழையும் திருத்தமும் கொடுத்து நூலை மேலும் விளக்க முயல்வது, நிறுத்தக் குறியீடுகளைப் பயில்பவர் நலனுக்காக ஏற்ற இடங்களில் அமைப்பது, பொருளடைவுகளை அமைப்பது போன்ற பல நெறிகள் ஒரு பதிப்பில் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

நூல்களைப் பதிப்பித்து வெளியிடுபவர் பதிப்பாசிரியர். இவர் பதிப்புப் பணிகள் அனைத்துக்கும் பொறுப்பு ஏற்பவர். தம் கலித்தொகைப் பதிப்புரையில் சி.வை.தா. "பதிப்பாசிரியர்" என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். மேலும், நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் பரிசோதனாசிரியர், என்னும் நால்வரின் பணியை விடவும் நான்காவதாகக் கூறப்படும் பரிசோதனாசிரியரின் பணியான பதிப்புப் பணி சிரமம் உடையது என்று அவ்வுரையில் கூறுகின்றார் (மேலது:-26-7). தமிழ் நூல்களின் பதிப்புப் பணியில் முன்னோடியாக விளங்கிய ஆறுமுக நாவலர் அவர்களின் தொடர்பு காரணமாகவே சி.வை.தா. பதிப்புப் பணியில் ஈடுபட்டார் என்று தெரிகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் நாவலர் விட்டுச் சென்ற பதிப்புப் பணியை சி.வை. தொடர்கிறார் எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி நாவலர் பதிப்புப் பணியின் காலம் என்றால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி சி.வை.தா.வின் காலம் எனலாம். உ.வே.சா.வின் பதிப்புப் பணி அடுத்த காலக் கட்டத்தில் தான் - 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான்- தொடங் கின்றது. 20 ஆம் நூற்றாண்டு தொடங்கிய முதல் நாளே ஜனவரி மாதம் முதல் நாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.வை.தா. மறைந்துவிட்டார் எனனும் போது, இக்கால வகைப்பாடு தெளிவாக மூன்று நிலைகளில் அமைவதைக் காண முடிகின்றது.

1.2 சி.வை.தா. ஒரு சிறந்த பதிப்பாசிரியர் என்பதற்கு அவர் பதிப்பித்த நூல்களே சான்றுகளாக உள்ளன. அவர் 11 நூல்களைப் பதிப்பித்திருந்தாலும், தெளிவு கருதி கலித்தொகைப் பதிப்பை அடிப் படையாகக் கொண்டு அவருடைய பதிப்பு நெறிமுறைகள் இங்கே எடுத்துக் கூறப் படுகின்றன. அவர் கலித்தொகையைப் பதிப்பிப்பதற்கு முன்பே 6 நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டிருந்ததால் அவரு டைய அனுபவ முதிர்ச்சி கலித்தொகைப் பதிப்பில் தெளிவாகப் புலப்படுகின்றது. ஒரு நூலை ஏட்டுச் சுவடியிலிருந்து நூல் வடிவில் பதிப்பிப்பதால் நெறி முறைகளைச் சுவடிகளைப் பெயர்த்து எழுதுவதற்கு முன்னர், சுவடி பெயர்த்து எழுதியதற்குப் பின்னர் என இரு நிலைகளில் விளக்கலாம்.

ஒரு நூலைப் பதிப்பிக்க வேண்டுமானால் அந்த நூலில் மூலச் சுவடிகளை எல்லாம் பதிப்பாசிரியர் தொகுக்க வேண்டும். ஏடுகள் பல்வேறு இடங்களில் பரவி இருக்கலாம். பதிப்பாசிரியர் நேரடியாகவோ, பிறர் வாயிலாகவோ ஏடுகளைக் கண்டுபிடித்துத் தொகுக்க வேண்டும்.

இத்துடன், அக்காலத்தில் வாழ்நத தமிழறிஞர்களின் மனப்பான்மையும் பழந்தமிழ் நூல்களின் பதிப்புகள் வெளி வருவதற்குத் தடையாக இருந்தது. உ.வே.சா. அவர்கள் சீவக சிந்தாமணி சென்னையில் அச்சாகிக் கொண்டிருந்த காலத்தில், அச்சு வேலையை மேற்பார்வையிடுவதற்காக சென்னை சென்றிருந்தார். ஓய்வுநேரங்களில் புலவர்களைக் கண்டு உரையாடும் பழக்கம் உள்ள உ.வே.சா, அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த புரசப்பாக்கம் (புரசவாக்கம்) அஷ்டாவதானம் சபாபதி முதலியாரைப் பார்க்கச் சென்றார். சீவக சிந்தாமணியை உரையுடன் பதிப்பிப்பதற்காகத் தாம் சென்னை வந்திருப்பதாக உ.வே. சா. கூறியவுடன் சபாபதி முதலியார் திடுக் கிட்டார்.

என்ன ஐயா? சிந்தாமணி உரையையாவது நீங்கள் பதிப்பிக்கிறதாவது? அது சுலபமான காரியமா? நீங்கள் பால்யர். சிந்தாமணி நூலுக்கும் உரைக்கும் உள்ள பெருமை என்ன? அதை முடிப்பது மிகவும் கஷ்டமாக இருக்குமே! அந்த முயற்சியை நிறுத்திக் கொள்ளுதல் மிகவும் நல்லது. ஆழந்தெரியாமல் காலை விடக்கூடாது (என் சரித்திரம் 1990:583)

என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் உ.வே. சா. அந்த நூலை வெளியிடுவதில் தமக்குள்ள உறுதியை எடுத்துக் கூறியும், நாவலர் அதனை ஏற்றுக் கொள்ளாமல் அவரை விரிவாக மறுத்துவிட்டு, இறுதியில்

நான் சொல்லுவதைச் சொல்லிவிட்டேன். அப்பால் உங்கள் பிரியம் (மேலது:584)

என்று வேண்டா வெறுப்போடு பேச்சை முடித்துக் கொண்டார். இம்மனப்பான்மை நமக்கு எதனைக் காட்டுகின்றது? அக்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெரும் புலவர்கள் பலருக்குப் பண்டைய நூல்களைப் பதிப்பிப்பதில் இருந்த அச்சத்தையும் கவனக் குறைவையும் அந்நிகழ்ச்சி காட்டுவதோடு, புலவர்களின் ஆதிக்க மனப்பான்மையையும் சுட்டிக் காட்டுகின்றது. பழந்தமிழ் நூல்களுக்கெல்லாம் தாமே ஏக போக அதிகாரிகள்:மற்றவர்கள் எவருக்கும் அவற்றைப் பதிப்பிப்பதற்கு உரிமை இல்லை என்ற அவர்களின் மனப்பாங்கும் சபாபதி நாவலரின் கூற்றில் தொனிக்கின்றது. சி.வை.தா. அவர்களுக்கும் இத்தகைய அனுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அவர் அவற்றை உ.வே.சா. வைப் போன்று பதிவு செய்யவில்லை. என்றாலும், தமிழ் அறிஞர்கள் அவர் மீது பொறாமை கொண்டு அவர்தம் பதிப்புப் பணிக்கு இடையூறு செய்தார்கள் என்று எஸ். வையாபுரி பிள்ளை அவர்கள் பிற்காலத்தில் சி.வை.தா.வுக்கு ஏற்பட்ட நெருக்குதல்களைத் தொட்டுக் காட்டுகின்றார்:

ஆங்கிலங் கற்ற விற்பன்னர்கள் உதாசீனமாயிருந்தார்கள். தமிழ் கற்ற பண்டிதர்களில் சிலர் பொறாமை மிக்குப் பகை காட்டினார்கள். ஒரு சில அறிஞர்கள் தமிழ் நூல்களை வெளியிடுவதற்குத் தங்களுக்குத் தான் தனியுரிமையுண்டென்று கருதினார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தமிழ்ச்சுடர் மணிகள், 1968:235)

இத்தகையோர்களின் மனப்பான்மை பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதில் ஊக்கக் குறைவைத் தான் ஏற்படுத்தும்!. ஆனால் சி.வை.தா. தம் மீது வீசப்பட்ட கண்டனங்களையும் பழிச்சொற்களையும் வசவுரைகளையும் பொருட்படுத்தாமல், தம் கருமமே கண்ணாக இருந்ததால் தான் அவர் இவ்வளவு பெரும் பணியைத் தன்னந்தனிமனிதராகச் செய்து முடிக்க முடிந்தது.

இன்னொன்றும் இங்கு நினைக்கத் தக்கது. சி.வை.தா.தம் காலத்திலிருந்த தாண்டவ ராய முதலியார், மழவை மகாலிங்கய்யர், சபாபதி நாவலர், உ.வே.சா. போன்று, முழுநேரத் தமிழ்ப் புலவர் அல்லர். மேலே குறித்தவர்களும் அவர்களைப் போன்ற பிறரும் ஆசிரியர்களாகப் பாடஞ் சொல்லியும் பிறருக்குத் தமிழ் கற்பித்தும் அதனையே தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள். குறிப்பாக, உ.வே.சா. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர், ஆசிரிய மாணவப் பரம்பரையில் வந்தவர்; திருவாவடுதுறை ஆதீன வித்துவான். அப்பதவியின் காரணமாக மடத்தில் பலருக்கும் தமிழ் கற்பித்து வந்தவர். பின்னர், அரசுக் கல்லூரிப் பணியில் சேர்ந்து முழுநேரமும் தமிழாசிரியராய் விளங்கியவர். இவர்களைப் போலல்லாமல் தமிழோடு தொடர்பு எதுவும் இல்லாத பொறுப்பான அரசுப் பணிக் கடமைகளுக்கிடையில், தமிழ் மேல் தாம் கொண்டிருந்த காதலால், தம் உடல் நலத்தையும், பொருள் முட்டுப்பாட்டையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் சி.வை.தா. தமிழ்ப் பணி ஆற்றினார், கலித்தொகைப் பதிப்புரையில் அவர் மனம் திறந்து பேசுகின்றார்:

சி.வை.தா.தாம் கலித்தொகை ஏடுகளைப் பெறுவதற்காகப் பட்ட பாட்டைக் கலித்தொகைப் பதிப்புரையில் கூறுகின்றார். புதுவை, திருவாவதுறை, தருமபுரம் ஆகிய இடங்களிலிருந்தும் மல்லாகம் வி.கனகசபைப் பிள்ளை திருமணம் கேசவ சுப்பராய முதலியார், மயிலை இராமலிங்கம் பிள்ளை ஆகியோரிடமிருந்தும் சுவடிகள் பெற்றார். இவற்றுள், திருவாவடுதுறை ஆதீனச் சுவடி தவிர ஏனையவை அரை குறையாக முல்லைக் கலியோடு முடிந்திருந்தன. இச்சுவடிகளைக் கொண்டே பதிப்புப் பணியைத் தொடங்கியிருந்த சி.வை.தா. தம்மிடம் இருந்த முழுமையான சுவடி ஒன்றை மாத்திரம் வைத்துப் பதிப்பை முடிக்கவில்லை. மீண்டும் ஏடுகள் தேடும் முயற்சியில் ஈடுபட்டார். புதுவையில் வாழ்ந்த சொக்கலிங்கம் பிள்ளையின் குடும்பத்தாரிடமிருந்து நெய்தற்கலி கிடைத்தது. சென்னைச் சுவடிக் காப்பகத்திலிருந்தும் நெய்தற்கலி கிடைத்தது. தனக்குத் கிடைத்த 10 சுவடிகளை அடிப்படையாகக் கொண்டே சி.வை.தா. கலித்தொகையைப் பதிப்பித்துள்ளார். சிலர் கருதுவது போன்று அவர் ஒரே ஒரு சுவடியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு எந்த நூலையும் பதிப்பிக்கவில்லை.

1.2 இவ்வாறு சுவடிகளைத் தொகுத்த பிறகு அவற்றுள் ஒன்றை அடிப்படைச் சுவடியாக வைத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் பிற சுவடிகளை ஒப்பிட்டுக் காணும் போது மூல பாடத்தை ஒருவாறு முடிவு செய்ய இயலும். மூலபாடத் திறனாய்வு எனப்படும். ஒரு நூலைப் பதிப்பிக்கப் பல சுவடிகள் வேண்டியிருந்தாலும் பதிப்புக்கு அடிப்படையாக ஒரே ஒரு சுவடியைத் தேர்ந்தெடுப்பதுதான் பதிப்பு நெறிகளில் முக்கியமானது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப் படும் சுவடி எவ்வளவு பழமையாக இருக்கின் றதோ அந்த அளவுக்கு அது மூல நூல் ஆசிரியனின் பிரதியோடு நெருங்கிய தொடர்புடையதாக இருக்கும். “பிரதி எத்தனை பழையதோ, அத்துணை அதன் மாறுபாடு குறைவு” என சி.வை.தா. கூறுகின்றார். திருவாவடுதுறை ஆதீனச் சுவடியை அடிப்படைச் சுவடியாகக் கொண்டு சி.வை.தா. கலித்தொகையைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

1.3 பழைய நூல் ஒன்றைச் சுவடிலிருந்து அச்சுக்கு கொண்டு வரும்போது பதிப்பாசிரியருக்குப் பல ஐயங்கள் அவ்வப்போது எழுவது இயல்பே ஆகும். சி.வை.தா.வும் இதற்கு விதி விலக்கு அல்லர். கலித்தொகைச் சுவடியைப் பெயர்த்து எழுதும்போது தனக்கு ஏற்பட்ட ஐயங்களைக் கடிதங்கள் வாயிலாகவும் அறிஞர்களை நேரில் சென்று கண்டு சந்தித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடியும் தம் ஐயங்களைப் போக்கிக் கொள்ள அவர் முயன்றுள்ளார். இவ்வாறு அவரால் தொடர்பு கொள்ளப்பட்டவர்களுள் முக்கியமானவர் உ.வே.சா.வும் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் நில்லாமல், கலித்தொகை அச்சுப்படிகள் முழுவதையும் மெய்ப்புப் பார்த்துத் தருமாறும் உ.வே.சா. வை அவர் வேண்டினார். அதேகாலக் கட்டத்தில் உ.வே. சா. தம் சிந்தாமணிப் பதிப்பில் முழுமையாக ஈடுபட்டிருந்த காரணத்தால், அவரால் சி.வை.தா.வுக்கு உதவ முடியவில்லை. அவர் தொடர்ந்து உ.வே.சா. வுக்கு அச்சப்படிகளை அனுப்பிக்கொண்டிருந்ததால் "தளர்ச்சி இல்லாமல் அவர் செய்த முயற்சிகளால் நான் ஈடுபட்டு அவ்வப்போது சில பகுதிகளை மட்டும் பார்த்து எனக்குத் தோன்றிய திருத்தங்களை எழுதியனுப்புனேன்" (1990:605) என்று உ.வே.சா. "என் சரித்திரத்தில்" பதிவு செய்துள்ளார். தாம் திருத்துவதுடன் தக்க அறிஞர் பிறரும் திருத்தினால், தமக்குத் தோன்றாத பிழைகள் பிறருக்குத் தோன்றலாம். அதன்மூலம் பதிப்பு திருத்தமான பதிப்பாக அமையும் என சி.வை.தா. எண்ணியிருந்ததை இது காட்டுகின்றது.

1.4 ஒரு நூலைப் பதிப்பிக்கும் போது, அந்நூலின் மூலத்தை மாற்றுவதற்குப் பதிப்பாசிரியர் உள்ளிட்ட யாருக்கும் உரிமை இல்லை. பதிப்பு நெறிகளில் இத் தலையாய நெறியாகும். இந்நெறியினைப் போற்றா விட்டால் பதிப்பாசிரியர் தன் விருப்பப்படி மூலத்தைத் திருத்திவிட இயலும். அவ்வாறு மூல பாடத்தைத் திருத்த வேண்டுமாயின் ஏட்டுப் பிரதிகளின் சான்றுகளைக் கொண்டே திருத்த வேண்டும். கலித்தொகைக்கு முந்திய பதிப்புகளில் அப்பதிப்பு நெறியைக் கடைப்பிடித்து வந்த சி.வை.தா. கலித்தொகைப் பதிப்பிலும் சூளாமணிப் பதிப்பிலும் மூல பாடத்தைத் திருத்தியுள்ளார். ஆயினும் ஏன் அவை தம்மால் திருத்திக் கொள்ளப்பட்டன என்பதனையும் தெளிவாகவே அவர் விளக்குகின்றார்:

முன்னோர் மொழி பொருளேயன்றியவர் மொழியும் பொன்னே போற் போற்றுதல் அவரினின்று வேறாக வழிநூல் சார்பு நூல் செய்தோர்க்குங் கடனாகவே, அவர் நூலையே அச்சொரூபமாக எடுத்துப் பதிப்பிப்போர் ஒரு அக்ஷரமாவது மாற்றுதல் பெருந்தவறென்பது யார்க்கும் உடன்பாடே. ஆயினும் இந்நூல் துரைத்தன வித்தியாசாலைகளிலும் பிற கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் பயிலல் வேண்டுமென்னும் அவாவினாலே தற்காலம் அவையிற்றுக்கு இணங்காததோர் இழிசொல்லும் மகளிர் சிறப்பவயத்தின் இடக்கர்ப் பெயருமாகிய குஃறொடர்ந்த அன்மொழி இந்நூல் முழுகிலும் பதினோரிடத்திற் பிரயோகிக்கப்பட்டதை ஒழித்துஞ் செய்யுள் ஊனமுறாதிருத்தற் பொருட்டு அதற்குப் பதிலாக அவ்வவ்விடத்திற்கு இசைந்த பிற அவயவத்தின் பெயரைச் சந்தத்திற்கு வேண்டிய அளவு விசேஷணத் தோடு புணர்த்தியும் இருக்கின்றேன். அவ்வாறு சொருகியது இன்ன இன்ன மொழி இன்ன பாட்டில் இன்ன இன்ன அடியிலென்பதை யாவரொருவராயினும் அறிய விரும்பின் அவற்றை ஈண்டு காண்க (கலித்தொகை, 1887:61-62)

இடக்கர் அடக்கல் என்றும் பெண்பால் உறுப்பு என்றும் 11 சொற்களை மாற்றிப் பதிப்பித்த சி.வை.தா. நெய்தல் கலி 29 ஆம் பாடலில் எழுதுவோரால் ஏற்பட்ட பிழைகளைத் திருத்தி விடலாம் என்று அறிஞர்களில் சிலர் எடுத்துக் கூறியதை ஏற்றுக்கொள்ளாமல், மூலத்தில் இருந்தபடியே பதிப்பித்துள்ளார். தாம் அவர்கள் கருத்தை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனையும் அவரே விளக்குகின்றார்:

அடியேன் சிற்றறிவுக்கேற்ற மட்டும் பரிசோதனை செய்து அச்சிட்டு அடியோடழிந்து போகும் பழைய நூல்களை நிலைநிறுத்துவான் புகுந்தேனாதலின் நூலைத் திருத்துவதும் பொருள் இசையச் செய்வதும் என் கடமை யன்று. இயன்றளவும் பூர்வருபம் பெறச் செய்வதும் இயலாத இடத்து இருந்தபடி உலகிற்கொப்பிப்பதுமே யான் தலையிட்ட தொழிலென்பதை இன்னும் ஒருகால் உலகத்தார் முன் விண்ணப்பம் செய்து கொள்கின்றேன் (மேலது:60).

கலித்தொகைப் பதிப்பில் இத்தகைய அறிக்கையை வெளியிட்டுள்ள சி.வை.தா.சூளாமணிப் பதிப்பில் இந்நெறிக்கு மாறாக மூல பாடத்தைத் திருத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடிகள் அனைத்துமே பிழையாக இருந்திராது என்றும் சமணப் பெரியோர்களின் துணையுடன் மூல பாடத்தில் தான் திருத்தங்கள் செய்வதாகவும் கூறியுள்ளார். அழிவிலிருந்து சூளாமணி யைக் காப்பாற்றுவதற்காகவே தாம் இத்தகைய திருத்தங்களைச் செய்ததாயும் அவர் நேர்மையுடன் ஒப்புக்கொண்டுள்ளார். (ப. ரேணுகாம்பாள், 1991:150) திருத்தங்களைப் பட்டியலிட்டும் கொடுத்துள்ளார். திருத்துவது தவறு என்று தாம் உணர்ந்திருந்தாலும், அத்திருத்தங்களைப் பிறர் ஏற்காவிட்டாலும் தம்மை மன்னித்தருளும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்திருப்பது பதிப்பு நெறிகளை அவர் எவ்வளவு நேர்மையுடன் பின்பற்றினார்? எவ்வளவு வெளிப்படையாக இருந்தார்? என்பதைக் காட்டுகின்றது.

1.5 சுவடிகளைப் பெயர்த்து எழுதிய பிறகு பின்பற்றப்பட வேண்டிய பதிப்பு நெறிமுறைகளையும் சி.வை.தா. செம்மை யாகப் பின்பற்றியுள்ளார். சி.வை.தா.வின் பதிப்புகளில் பெரும்பாலும் தலைப்புப் பக்கம், நூற்சிறப்பு, பதிப்புரை, அனுபந்தம், பெயரகராதி, மூலம் பக்க அமைப்பு, கட்டமைப்பு என்னும் நிலைகளில் அமைந்துள்ள கலித்தொகைப் பதிப்பில் நல்லந்துவனார் கலித்தொகை மதுரை - பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரை யோடும் ஸ்ரீ தொண்டைமான் புதுக்கோட்டை மகாராசாவின் மந்திரியும் பிரதிகாவலரு மாகிய கௌரவ அ.சேஷைய சாஸ்திரிகள் சி.எஸ். ஐ. காருண்யோபகார திரவியத்தைக் கொண்டும் சி.வை.தாமோதரப் பிள்ளையால் பல தேசப் பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளது. பதிப்பு ஆண்டு (1887) ஆங்கில ஆண்டிலும் தமிழ் ஆண்டிலும் கொடுக்கப்பட்டுள்ளது. தலைப்புப் பக்கத்தை அடுத்து நச்சினார்க்கினியர் பற்றிய சிறப்புப் பாயிரமும் கலித்தொகை பற்றிய சிறப்புப்பாயிரமும் அமைக்கப்பட்டுள்ளன. கலித்தொகையில் பாயிரப் பகுதியை அடுத்து முதற்குறிப்பு அகராதி கொடுக்கப் பட்டுள்ளது; இது அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. பாடலின் முதல் இரு சொற்கள் முதற்குறிப்பாகக் கொடுக் கப்பட்டு, அது எந்தத் திணைக்குரிய கலி என்றும், எத்தனையாவது செய்யுள் என்றும் அது எந்தப் பக்கத்தில் உள்ளது என்றும் தெரிவிக்கும் இம்முதற்குறிப்பகராதி கலித்தொகை முழுவதற்கும் அமைந்துள்ளது. பதிப்புரை அதனை அடுத்து இடம் பெறுகின்றது.

சி.வை.தா.வின் பதிப்புரைகள் அனைத்தும் ஆராய்ச்சிக்கண் கொண்டு எழுதப்பட்டுள்ளன. கலித்தொகைப் பதிப்புரை 35 பக்க அளவில் நீண்டு, பல செய்திகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பதிப்புரையில் சி.வை.தா. தமிழின் தொன்மை, தனித்தன்மை, பற்றி ஆராய்ந்து கூறியிருப்பதோடு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பெயர் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளார். பதிப்போடு தொடர்புடைய செய்திகள் அனைத்தும் நிரலே கூறப்படுகின்றன; தம்முடைய ஆசிரியரான சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயருக்குத் தம்முடைய பதிப்புகளில் எல்லாம் வாழ்த்துக் கூறித் தம் நன்றியறிதலைப் புலப்படுத்தியுள்ளார். பிழைத் திருத்தமும் தாம் செய்த திருத்தங்களும் பட்டியலிட்டு அவரால் காட்டப்படுகின்றன. கலித்தொகை மூல பாடத்தை நச்சினார்க்கினியர் கொண்டவாறு பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என முறைப்படி வைத்துள்ளார். ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் இலக்கணக் குறிப்புகள், இலக்கியப் பொருள் குறிப்புகள், பாட பேதம், பிரதிபேதம், மேற்கோள்கள் ஆகியவற்றை அடிக்குறிப்புகளாக எழுதியுள்ளார். மேலும், சில இடங்களில் தன் கருத்தைத் தெளிவுபடுத்துவதற்கும் சி.வை.தா. அடிக்குறிப்பைப் பயன்படுத்தி உள்ளார். சூளாமணிப் பதிப்பில் சிறப்புப் பெயரகராதி ஒன்றனையும் சி.வை.தா. அமைத்துள்ளார். நிறுத்தக் குறியீடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சி.வை.தா. கலித்தொகைப் பதிப்பில் பின்பற்றிய பாடல் அமைப்பையே அவருக்குப்பின் வந்த எல்லாக் கலித்தொகைப் பதிப்பாசிரியர்களும் பின்பற்றியுள்ளனர். நாம் மேலே எடுத்துக் காட்டிய செய்திகளிலிருந்து சி.வை.தா. மிகச் சிறந்த பதிப்பாசிரியர்களில் ஒருவர் என்பதனைத் தெளிவாக உணர முடிகின்றது. அவருக்கு இருந்த இடர்ப்பாடு களை எண்ணும்போது இஃது ஓர் அருஞ்செயல் என்றே கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சிறப்பான பதிப்பாசிரியராக சி.வை.தா. விளங்கிய போதிலும், தமிழ் நாடும் தமிழ் மக்களும் அப்பெருமகனார்க்கு அளிக்க வேண்டிய முறையான கௌரத்தை-மதிப்பை அளிக்கவில்லை என்று இலங்கைத் தமிழ் அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். பதிப்புத் துறையில் உ.வே.சா., சி.வை.தா வுக்குப் பின்னர்தான் நுழைந்தார் என்றாலும், தமிழ் நாட்டு அறிஞர்களில் பெரும்பாலோர் சி.வை.தா.வின் பெருமையை மறைக்க முயன்றுள்ளார்கள் எனக் கூறுகின்றனர்:

இக்காலத்துப் பதிப்பாசிரியர்களிலே தலைசிறந்து விளங்கியவர்களாக ஆறுமுக நாவலரும் சி.வை.தா.வும் பவானந்தம் பிள்ளையும், சாமிநாதையரும் கருதப்பட்டு வந்துள்ளனர். ஆனால் அவர்கள் எல்லோரிலும் சாமிநாதய்யரே தற்காலப் பதிப்புத் துறையில் மேற்பட்டவராகச் சிறப்பிக்கப்படுகின் றார். குறிப்பாகத் தென்னகத் தமிழறிஞர்கள், அவரை மட்டுமே சிறந்த பதிப்பாசிரியராக எடுத்துப் போற்றுகின்ற ஒரு மரபும் நிலவி வருகின்றது (ம.சண்முகதாஸ். 1983:43)

என வருந்துகின்றார் அறிஞர் ம.சண்முகதாஸ்.

பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை தம் கட்டுரையொன்றில், சி.வை.தாமோதரம் பிள்ளை யாழ்ப்பாணத்திற் பிறந்த குற்றத் துக்காக அவர் சரித்திரமாகிய தமிழ்ச் சரித்திரத்தை மறைக்க முயல்வது நன்றிக் கேடு (இலக்கிய வழி, 1981:141) என வருந்தி எழுதியுள்ளார். கனக செந்தில்நாதனும் "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்னும் நூலில் சி.வை.தா.வைத் தமிழ் நாடு மறந்து கேலி செய்தது; உண்மையை மறைத்தது என்று கூறுகின்றார் (ப.ரேணுகாம்பாள், 1991:97). இத்தகைய கூற்றுகளின் வன்மை மென்மைகளை ஆராய்வது நம் கடமை ஆகின்றது.

2.1 சி.வை.தா. வுக்கும் தமிழ் நாட்டில் வாழ்ந்த புலவர்களுக்கும்-குறிப்பாக சி.வை.தா.வுக்கும் உ.வே.சா.வுக்கும் இடையில் நிலவிய உறவுகளை ஆராய்ந்தால், உண்மை ஓரளவுக்கு விளங்கும். சி.வை.தா. பற்றி உ.வே.சா. எழுதிய "என் சரித்திரம்" நூலில் வரும் சில பகுதிகள் சி.வை.தா.வின் பெருமையைக் குலைப்பனவாக உள்ளன என்பதில் ஐயமில்லை. ஆனால் "என் சரித்திரம்" என்ற நூல் உ.வே.சா. அவர்களின் வாழ்க்கை வரலாறு என்றாலும், அதனை அவரே எழுதியதாகக் குறிப்பு இல்லை. அது 06.01.1940 முதல் ஆனந்த விகடனில் தொடர் கட்டுரையாக வெளிவந்துள்ளது. அவர் தம் 85 ஆம் ஆண்டில் இவ்வுரைத் தொடரை எழுதினார். ஆண்டின் முதிர்ச்சியால் அவர் சொல்லச் சொல்ல வேறு ஒருவர் எழுதி வந்தார் என்று ...கின்றது. எனவே "என் சரித்திரத்தில்" உள்ளவை முழுவதும் உ.வே.சா. வின் கருத்துகள் தாமா என்ற ஐயம் நமக்கு ஏற்படுகின்றது. இது தொடர்பாக, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இப்பிற்காலத்தில் பல வசன நூல்களும் ஐயரவர்களால் வெளியிடப்பெற்றுள்ளன. இவைகள் இவர் நெருங்காலமாகத் திரட்டி வைத்துள்ள குறிப்புகளினின்றும் எழுதப்பட்டவை. இவர் எழுதியது என நாம் நன்கறிந்துள்ள உரைநடைக்கும் இவ்வசன நூல்களிலுள்ள உரைநடைக்கும் பெரிதும் வேறுபாடு உள்ளது. ஆங்கில மணமும், இளமை எழுச்சியும், கலை யுணர்ச்சியும் இவற்றில் பெரிதும் காணப்படு கின்றன. ஆனால், இவற்றிற் காணும் பொருள்கள் அனைத்தும் ஐயர்க்கே உரியன என்பதில் ஐயமில்லை (1968:305).

வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. "என் சரித்திரத்தில்" சி.வை.தா. பற்றி இடம் பெற்றுள்ள செய்திகள் அனைத்தும் எந்த அளவுக்கு உண்மையானவை என்று இன்றைய நிலையில் உறுதி செய்து கொள்ள முடியவில்லை. 1883 ஆம் ஆண்டில் இறையனார் அகப்பொருள் உரையைத் தேடி சி.வை.தா. திருவாவடுதுறை ஆதீன கர்த்தருக்குக் கடிதம் எழுதினார். ஆதீன கர்த்தர் உ.வே.சா. மூலம் ஏட்டுப்பிரதிக ளைத் தேடச்செய்து, சி.வை.தா.வுக்கு அனுப் பினார். ஏட்டுப்பிரதிகள் அனுப்பப்பட்ட செய்தியை உ.வே.சா., சி.வை.தா.வுக்குக் கடிதம் மூலம் எழுதினார். இக்கடிதம் "என் சரித்திரத்தில்" முழுமையாகப் பிரசுரிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது (1990:552-3). சி.வை.தா. தனக்கு எழுதிய முதல் கடிதமாக உ.வே.சா. இதனைக் குறிப்பிட்டுள்ளார். சி.வை.தா. கும்ப கோணத்துக்கு வந்து வசிக்கப் போகிறார் (1885) என்று அறிந்து உ.வே.சா. மகிழ்ந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது (மே லது:553) ஆனால், அதே சரித்திரத்தின் பின் பகுதியில் (ப.570) தாம் சி.வை.தா.வை திருவா வடுதுறை ஆதீனகர்த்தர் மேலகரம் சுப்பிர மணிய தேசிகருக்கு அறிமுகம் செய்து வைத்ததாகக் கூறியிருப்பது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. ஆதீனகர்த்தர் 1883 ஆம் ஆண்டிலேயே உ.வே.சா. மூலம் சி.வை.தா. வுக்கு இறையனார் அகப்பொருள் உரைச் சுவடிகளையும் தணிகைப் புராணச் சுவடிகளையும் அனுப்பி வைத்துள்ளார். மேலும், 1881 ஆம் ஆண்டு சி.வை.தா. வால் பதிப்பித்து வெளியிடப்பட்ட வீரசோழியப் பதிப்புக்கும் தேசிகரே ஏட்டுச் சுவடிகளை வழங்கி உள்ளார். வீரசோழியப் பதிப்புரையில்,

பழம்பிரதிகளுள் ஸ்ரீ லஸ்ரீ திருவாவடுதுறைப் பெரிய சற்குருநாத சுவாமிகள் தயை கூர்ந்து கட்டளையிட்டருளியது. நெடுங்காலத்தது கைவிட்டுக் கடன் கொடுத்த கைப் பிரதிகள் திரும்பி உடையார்பால் மீள்வதரிதாகிய இக்காலத்தில், முன் நம்மை அறியாதவர்க ளாயினும் நமது பிரார்த்தனையை மாறாது கிருபை புரிந்ததுமன்றி ஆதீனத்துப் பழம்பிரதிகளுட்பல நாளாகத் தமது பரிசனத்தைக் கொண்டு தேடுவித்து எடுத்தனுப்பிய பரிபூரண கிருபைக்காக மிக்க கடமைப்பட்டிருக்கிறோம் (வீரசோழியம், 1881:28).

என்ற புகழ்ந்துள்ளார். மேலும் சூளா மணிப் பதிப்புரையில் "நாலைந்து வருஷத் தின் முன் யான் ஸ்ரீ கைலாசப் பரம்பரைத் திருவாவடுதுறையா தீனத்துச் சற்குரு நாத சுவாமிகள் ஸ்ரீ லஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளைத் தரிசிக்கப் போயிருந்தபோது" சூளாமணிப் பதிப்பை சி.வை.தா. வெளியிட வேண்டுமெனறு கட்டளையிட்டதோடு சென்னை மகாலிங்கையர் பிரதியொன்று தமது ஆதீனத்தில் இருந்ததை எடுத்துத் தன்வசம் கொடுத்தருளினார் என்றும் (சூளாமணி, 1889:97) எழுதியுள்ளார். இக்கூற்றின்படி சி.வை.தா. தேசிகரை 1884 அல்லது 1885 ஆம் ஆண்டில் சந்தித்திருக் கலாம். வீரசோழியப் பதிப்புக்கும் தேசிகரே சுவடிகள் அளித்த செய்தி அந்நூலின் பதிப்புரையில் குறிக்கப்பட்டுள்ளது. 1881 முதல் தேசிகருடன் கடிதம் மூலமாகத் தொடர்புகொண்டிருந்த சி.வை.தா. வைத் தாம் அறிமுகம் செய்து வைத்திருப்பதாக உ.வே.சா. கூறியிருப்பது அவருடைய மறதியின் காரணமாக இருக்கலாம்! சி.வை.தா. கும்பகோணத்தில் தங்கியிருந்த காலத்தில் (1885) அவர் தேசிகரைச் சந்தித்தபோது உ.வே.சா.வும் உடன் இருந்திருக்கலாம். பெரும் செல்வாக்கோடு பெரும்பதவிகளையும் வகித்த சி.வை.தா.வை ஸ்ரீ ல ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அறியாமல் இருந்தார் என்பது நம்பும்படியாக இல்லை.

சிந்தாமணிப் பதிப்பு தொடர்பாக உ.வே.சா. வுக்கும் சி.வை.தா. வுக்கும் இடை யில் நடைபெற்றதாக "என் சரித்திரத்தில்" இடம்பெற்றுள்ள உரையாடல் (570-576) பகுதி சி.வை.தா.வின் புகழுக்கு இழுக்கு உண் டாக்கும் வண்ணம் உள்ளது. உ.வே.சா. சிந்தாமணியைப் பதிப்பிப்பதில் மிக்க தொல்லைகளுக்கு உட்பட்டு வருந்துவதைக் கண்டதால், பதிப்புப் பணியில் அனுபவம் மிக்க தன்னிடம் வேண்டுமானால் சிந்தாமணியைக் கொடுத்தால் தான் பதிப்பிப் பதாக சி.வை.தா. கூறியிருக்கலாம். 1887 இல் நடந்த ஒரு நிகழ்ச்சியை 1940 களில் தம் முதுமையில் ஒருவர் (85) சரியாக நினைவு கூர்ந்திருப்பார் என்று நம்ப இயலவில்லை. தம் சிந்தாமணிப் பதிப்புக்கு சி.வை.தா. இரண்டு பிரதிகள் கொடுத்திருந்ததை உ.வே.சா. நினைவு கூர்கின்றார் (சீவக சிந்தாமணி 1969:அ) மேலும் சிந்தாமணிப் பதிப்புக்குப் பொருள் இல்லாமல் உ.வே.சா. சிரமப்படுவதை அறிந்த சி.வை.தா. "தமக்குத் தெரிந்த சண்முகம் செட்டியார் என்பவரிடம் காகிதம் வாங்கிக் கொள்ளலாம் என்றும் சில மாதங்கள் பொறுத்துப் பணம் கொடுக்கலாம் என்றும் எனக்கு எழுதியதோடு சென்னை யிலிருந்த அக்கடைக்காரக்கும் எழுதி எனக்கு வேண்டிய காகிதத்தைக் கொடுக்கும்படி செய்தார்" (என் சரித்திரம், 1990:607-8.) என்று உ.வே.சா. எழுதுகின்றார். உ.வே.சா. வின் சிந்தாமணிப் பதிப்பு வெளியாவதில் அக்கறை காட்டிய சி.வை.தா. தாம் சிந்தாமணியைப் பதிப்பிப்பதை விரும்ப வில்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.வே.சா. குற்றம் சுமத்தியிருப்பது நம்பத் தக்கதாக இல்லை. 1887ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் காகிதத்திற்கான பணத்தை அனுப்புமாறு 28.02.1887இல் சி.வை.தா. ஒரு கடிதம் மூலம் உ.வே.சா.வை. நினைவூட்டியுள்ளார். இது உ.வே.சா. வுக்கு ஒரு வேளை வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கலாம்!

2.2 சி.வை.தா. சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்து வெளியிடுமாறு உ.வே.சா.வைக் கடிதம் மூலம் தூண்டி வந்தார். ஆனால், அவர் சிந்தாமணியை அடுத்து, சூளாமணியையே வெளியிட விரும்பி, அதில் கருத்தைச் செலுத்தலானார். உ.வே.சா.வின் எண்ணம் பின்வருமாறு வெளிப்படுகின்றது:

இந்த நிலையில் தாமோதரபிள்ளை சூளாமணியைப் பதிப்பிப்பதாகத் தெரிந்தது. அதனால் சூளாமணியை அச்சிடும் முயற்சியை நிறுத்திக் கொண்டேன். சிலப்பதிகார... நூற்பதிப்பை உடனே மேற்கொள்வதையும் நிறுத்தினேன் (மேலது:627).

இக்கூற்றும் உண்மைக்கு மாறாகத் தோன்றுகின்றது. உ.வே.சா. சிந்தாமணியைப் பதிப்பிப்பதை அறிந்து அப்பதிப்பு முயற்சியில் ஈடுபடாது தம்மிடமிருந்த இரண்டு பிரதிகளை அவருக்குக் கொடுத்து. காகிதம் வாங்கப் பணத்துக்கும் ஏற்பாடு செய்த சி.வை.தா., சிந்தாமணிக்கு முற்பட்டதென்று தாம் கருதிய சூளாமணியைப் பதிப்பிக்கத் தொடங்கினார் என்பதே உண்மை. சி.வை.தா. சூளாமணியை அச்சிடுவதை அறிந்த உ.வே.சா. தான் அதனை வெளியிடாதவாறு சி.வை.தா. தடுத்து விட்டாரே என்று வருந்தியிருப்பதாகத் தெரிகின்றது. இதனை சி.வை.தா.உ.வே. சாவுக்கு 23.02.1887 லிலும் 27.01.1888இலும் எழுதிய கடிதங்களிலிருந்து அறிய முடிகின்றது.

சூளாமணி முழுவதையும் ரங்கூனிலிருந்து அச்சிடுவதற்குப் பணம் கொடுத்தவர்களுக்காகப் பதிப்பிப்பதாக அக்கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார் சி.வை.தா. மேலும், தன் பதிப்பிலும் உ.வே.சா. பதிப்பே சிறப்பாக இருக்கும் என்றும் பாராட்டியுள்ளார். சமணப் புலவர்களிடம் சூளாமணிச் சுவடிகள் இருந்தால் வாங்கி அனுப்புமாறும் உ.வே.சா.வை. அவர் கேட்டுக் கொண்டுள்ளார் (ப. ரேணுகாம்பாள், 1991: கடித எண்கள் 6.7) இக்கடிதங்களிலிருந்து சி.வை.தா. தான் சூளாமணியை முதன் முதலில் பதிப்பிக்கத் தொடங்கினார் என்று தெரிகின்றது. தாம் பதிப்பிக்க வேண்டிய சூழ்நிலையை சி.வை.தா. எடுத்துக் கூறியும், உ.வே.சா. மனம் மாறவில்லை. எனினும் உ.வே.சா. மீது எவ்விதமான வருத்தமும் கொள்ளாமல் நட்புப் பாராட்டி சூளாமணிச் சுவடிகளைத் தேடித் தருமாறும் சி.வை.தா. கேட்டிருக்கிறார். உ.வே.சா. வோ சுவடிகளைப் பெற்றுத் தராததோடு, சி.வை.தா. மீது பழியையும் சுமத்த முற்பட்டுள்ளார் எனத் தெரிகின்றது.

22.11.1892 ஆம் ஆண்டு சி.வை.தா. உ.வே.சா. வுக்கு எழுதிய கடிதத்தில் தாம் புறநானூற்றைப் பதிப்பிக்கப் போவதாகவும் தன்னிடம் உள்ள கையெழுத்துப்படியை அனுப்புமாறும் எழுதியிருந்தார். ஆனால் உ.வே.சா. இக்கடிதத்தைப் புறக்கணித்து விட்டதாகவே தெரிகின்றது. தாம் பிரதி எதனையும் சி.வை.தா. வுக்கு அனுப்பாததோடு, தானே அதனைப் பதிப்பிக்க வேண்டும் என்று முடிவு கட்டினார் உ.வே.சா. திருவாவடுதுறை ஆதீனத்தார் சி.வை.தா.வுக்கு முன்னர் அனுப்பிருந்த புறநானூற்றுச் சுவடியைத் தாம் நேரடியாகக் கேட்காமல் ஆதீனத்துக்குக் கடிதம் எழுதி அவர்கள் மூலம் சி.வை.தா. விடம் இருந்த ஆதீனப் பிரதியை உ.வே.சா. வாங்கியிருக்கின்றார் என்று தெரிகிறது. இவ்விவரம் 12.05.1893 இல் சி.வை.தா. உ.வே.சா.வுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

புறநானூறு ஆதீனத்தார் பிரதியை அவ்வாதீனத்தார் மூலமாக வருவியாது தாங்கள் என்னிடம் நேரே கேட்டு வாங்கினால் என் மனதிற்கு அதிக திருப்தியாகவிருக்கும். தாங்கள் கேட்டால் நான் கொடுத்தற்குப் பின்னிடுவேனென்றஞ்சினீர்களா? அப்படி அஞ்ச ஒரேதுவுங் காண்கிலேன் (ப.ரேணுகாம்பாள், 1991:கடித எண் 10)

ஆனால் சி.வை. தா. உ.வே.சா. இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி நடந்து கொண்டிருக்கிறார்? தொடக்கத்திலிருந்து இறுதி வரை அவர் உ.வே.சா. மீது வருத்தமோ கோபமோ கொண்டதாகத் தெரியவில்லை. சி.வை.தா. பதிப்புப் பணியில் " எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி" என, உ.வே.சா.வைப் பாராட்டியுள்ளார். உ.வே.சா. வின் நூல்களை யாழ்ப்பாணத்தில் விற்றுக் கொடுத்திருக்கிறார். அவருடைய பதிப்புப் பணிகளுக்குத் தம் கையில் இருந்த பிரதிகளைக் கொடுத்து உதவியுள்ளார். பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டபோது, உ.வே.சா.வுக்கு அவர் பண உதவியும் செய்து உள்ளார். அவ்வளவு தூரம் அவரை சி.வை.தா. போற்றிப் புகழ்ந்திருப்பினும், உ.வே.சா. ஏனோ அவரைப் பெருமைப்படுத்த முனையவில்லை. மாறாக, தமிழ் நூல் பதிப்பில் தமக்குப் போட்டியாக இருப்பவர் சி.வை.தா. என எண்ணி, அஞ்சினார் போலும்! "என் சரித்திரத்தில்" சி.வை.தா. மீது களங்கம் ஏற்படும் வண்ணம் நிகழ்ச்சிகள் புனையப்பட்டுள்ளன. சி.வை.தா. வின் மறைவு குறித்து "என் சரித்திரம்" மௌனம் சாதிப்பது வியப்பளிக்கவில்லை!

3. பெரும் புகழுக்கும் சிறப்புக்கும் உரியவராக உ.வே.சா. விளங்கினாலும், அவரிடத்திலும் குறைபாடுகள் இருந்தன. "வேறொருவர் வெளியிட்ட நூலைத் தான் வெளியிடுவதில்லை என்பதை ஒரு கொள்கை போல கடைப்பிடித்து வருவதாகக் கூறும் உ.வே.சா., ' உண்மையில் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை என்று தெரிகின்றது. குறுந்தொகை, சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற நூல்கள் உ.வே.சா.வுக்கு முன்பே பதிக்கப்பட்டிருந்தும் அவ்விவரங்களை அவர் மறைத்து விட்டார். ஒரு நல்ல பதிப்பாசிரியர் கடமை முன்வந்த பதிப்புகள் பற்றித் தெரிவிக்க வேண்டியதே ஆகும். ஆனால், உ.வே.சா. இந்த அடிப்படைக் கடமையை நிறைவேற்றவில்லை என்றே தெரிகின்றது.

பண்டை இலக்கிய இலக்கணங்களைப் பதிப்பிப்பதற்காக ஏடு தேடி வருவோர்களுக்கு ஏடுகளை ஈத்து உவக்கும் இன்பமும் உ.வே.சா. வுக்குத் கிட்டவில்லை என்கிறார் வையாபுரிப் பிள்ளை. தவிர்க்க முடியாத நிலையில் தான் உ.வே.சா. சுவடிகளைத் தருவாராம்! அவ்வாறு தரும் பிரதிகளும் பயனற்றவைகளாகவே இருக்குமாம். இத்தகைய மனப்பான்மை அவரிடம் இருந்தது தமிழ் மக்களது துர்ப்பாக்கியமே என்கிறார் வையாபுரிப் பிள்ளை (மேலது:298-99)

3.2.ஆனால் சி.வை.தா. வின் குணங்கள் உ.வே.சா.வின் இயல்புகளுக்கு மாறுபட்டவை. சி.வை.தா. பற்றிய ஒரு நல்ல சித்திரத்தை வையாபுரிப் பிள்ளை தம் தமிழ்ச் சுடர்மணிகளில் அழகுறத் தீட்டியுள்ளார்:

...... பிள்ளையர்கள் இக்கண்டனவுரை, வசவுரை முதலிய இடையூறுகளை யெல்லாம் பொருட்படுத்தியவர்களே யல்லர். தமது அறிவொழுக்கங்களுக்கேற்ப, சிறந்த நற்குணமுடையவர்கள்: அடக்கம் நிரம்பியவர்கள்: எல்லாம் அறிந்த பெரும்புலவர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளவில்லை. தமக்குத் தெரியாத பொருள்களைப் பிறரிடங் கேட்டுணர்வதில் சிறிதும் கூச்சமற்றவர்கள். அவ்வாறுகேட்பது தமக்குச் சிறுமையாமென்று கருதியவர்களு மல்லர். தமிழன்னைக்குப் புரியும் திருத்தொண்டிற் பிற வித்துவான்களும் உழைத்துவர வேண்டுமென்ற கொள்கையையே உடையவர்கள். ஒரு சிலர் தம்மைத் தவிரத் தமிழ் நூல்களைப் பதிப்பிடும் பணியில் இறங்கிய பிறருக்கெல்லாம் நரக தண்டனை விதித்துச் சபித்து வந்துள்ளார்கள். பிள்ளையவர்கள் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள் அல்லர். உண்மையான அன்போடு உண்மையான தமிழ்த்தொண்டு புரிதலே பிள்ளையவர்களது வாழ்க்கையின் நோக்கமாயிருந்தது (மேலது236).

3.3 சி.வை.தா. அவர்களையும் உ.வே.சா. அவர்களையும் ஒப்பிட்டு நோக்கினோம். சி.வை.தா.வுக்குப் பின்னர் உ.வே.சா. பதிப்புப் பணியில் ஈடுபட்டாராயினும் காலப்போக்கில் அவரே சிறந்த பதிப்பாசிரியர் என்ற புகழ் பெற்றதற்குக் காரணங்கள் சில இருந்தன என்பதனை நாம் மறத்தல் ஆகாது. அவற்றுள் முதன்மையானது உ.வே.சா. அவ்வப்போது தன் பதிப்புகளை மறுபதிப்புச் செய்துகொண்டிருந்தார். அவர் தம் வாணாளில் ஒவ்வொரு பதிப்பும் முந்திய பதிப்பைவிட பலவகைகளிலும் திருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. சி.வை.தா. தம் நூல் எதனையும் மறுபதிப்புச் செய்த்தாகத் தெரியவில்லை. மற்றொரு முக்கிய காரணம் ஐயரவர்கள் பதிப்பித்து வெளியிட்ட நூல்களின் முக்கியத்துவம் ஆகும். சிலப்பதிகாரம், புறநானூறு, பதிற்றுப் பத்து, பத்துப்பாட்டு போன்றவை தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றை விளக்குவதற்குப் பெருந்துணை புரிந்தன. வரலாற்று ஆராய்ச்சிக்கு இந்நூல்கள் எடுத்துக்கொள்ளப்பட்டதால், அந்நூல்களின் பதிப்பாசிரியரான உ.வே.சா. வின் புகழ் பல துறைகளிலும் பரவியது. சி.வை.தா. பதிப்பித்த நூல்கள் இத்தகைய வரலாற்றுச் சிறப்புகளை விளக்கவில்லை. உ.வே.சா. மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெருகிய காலத்திலும் - இந்தியர்கள் படிப்படியாகச் சுய ஆட்சி பெற்றுக் கொண்டிருந்த காலக் கட்டத்திலும் - வாழ்ந்த காரணத்தால் அவரைப் பற்றிய செய்திகள் எல்லாருக்கும் எட்டின: சி.வை.தா. வுக்கு இந்த வாய்ப்புக் கிட்டவில்லை. உ.வே.சா ஒவ்வொரு பதிப்பிலும் எல்லாரும் எளிதில் புரிந்துகொள்ளும் நடையில் நீண்ட ஆராய்ச்சி முன்னுரைகளை எழுதி வெளியிட்டார். அவரோடு ஒப்பிடும் போது, சி.வை.தா.வின் உரைகள் சுருக்கமானவை. உ.வே.சா. பதிப்புப் பணிகள் அல்லாமல் தனி நூல்களும் எழுதினார் அவை அவருக்குப் பெருந்தொகையான வாசகர்களை உண்டாக்கின. சி.வை.தா. தனிநூல்கள் எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை.

4. சி.வை.தா. பற்றி இதுவரை கிடைத்துள்ள தகவல்கள் போதுமானவை அல்ல. உ.வே.சா.வுக்கு அவர் எழுதிய கடிதங்கள் போல பிறருக்கும் அவர் கடிதங்கள் எழுதியிருக்கலாம். உ.வே.சா. உள்ளிட்ட பலர் அவருக்கு அவ்வப்போது பதில் கடிதங்கள் எழுதியிருக்கலாம். அவருடைய பதிப்புப் பணி உள்ளிட்ட அனைத்துப் பணிகள் தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டு ஆராயப்பட வேண்டும். அத்தகைய ஆராய்ச்சியின் விளைவாக சி.வை.தா.வின் பன்முகச் சிறப்புகளை உலகம் உணர்ந்து கொள்ளும்.

காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போல்
நாம்ஒது செந்தமிழ் நன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பு எடுத்துச் சாற்ற எவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்
செந்நாப்புலவீர்!

வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

மேற்கோள் நூல்கள்

1. கணபதிப் பிள்ளை சி. பண்டிதமணி, **இலக்கிய வழி**, 1981, சுன்னாகம்.

2. சண்முகதாஸ் மனோன்மணி, **சி.வை.தாமோதரம் பிள்ளை ஓர் ஆய்வு** . நோக்கு, 1983, யாழ்ப்பாணம்

3. சாமிநாதையர், **உ.வே.சா என் சரித்திரம்**, 1990, டாக்டர் உ.வே.சா சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

4. **சீவகசிந்தாமணி மூலமும் உரையும்**, 1969சென்னை.

5. தாமோதரம் பிள்ளை, சி.வை., **நல்லந்துவனார் கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரை**, 1887 சென்னை.

6. **வீரசோழியம் மூலமும் பெருந்தேவனார் உரையும்**, 1881, சென்னை.

7. வையாபுரிப் பிள்ளை, எஸ்., **தமிழ்ச் சுடர்மணிகள்**, 1968, பாரிநிலையம், சென்னை.

8. ரேணுகாம்பாள், **ப.சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்புப் பணி: ஓர் ஆய்வு**, 1991.

(புதுவைப் பல்கலைக் கழகம், காரைக் கால். அச்சில் வெளியிடப்படாத எம்.பில். ஆய்வேடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்-கைலாசபிள்ளையும் விபுலானந்த அடிகளாரும்

- இரா. வை. கனகரத்தினம் -

சிற் கைலாசபிள்ளையவர்கள் ஈழத்துத் தமிழ் சமய வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவொருவர். ஆயினும் அவரது வரலாறு தக்கவாறு ஆராய்வு செய்யப்படவில்லை. விபுலானந்த அடிகளார் ஈழத்தில் சமகாலத்தில் வாழ்ந்த நல்ல தமிழ் அறிஞர்களுடனும் பிரபுக்களுடனும் தொடர்புகொண்டிருந்தனர். அவர்களுள் தமது அறிவியல் வளர்ச்சிக்கு உந்து சத்தியாக விளங்கிய பெரியோர்களை அவர் நினைவு கூரத்தவறவில்லை. அத்தகைய பெரியோர்களுள் ஒருவரே சிற் கைலாசபிள்ளையவர்கள்.

சிற் கைலாசபிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்தில் நல்லூரிலே 1857ஆம் வருடம் பிறந்தார். இவரது தந்தையார் கொழும்புத்துறை மணியகாரன் இராசரத்தின முதலியார் மகன் சிற்றம்பலம் என்பவராவர். நாவலரவர்களின் ஆசிரியரான சரவணமுத்துப் புலவரின் மகள் மாணிக்க வல்லியே இவரது தாயாவார். இவர்தம் தமிழ்க்கல்வியினைப் பேரனாகிய சரவணமுத்துப் புலவரிடத்திலும் சம்பந்தப்புலவரிடத்திலும் கற்றார். ஆங்கிலக் கல்வியினை சுண்டுக்குளி சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் பயின்றனர். சிங்கள மொழிக் கல்வியினை சங்கரபண்டிதரிடமும் கற்றார். இவர் தமிழ் ஆங்கிலம், சங்கதம் ஆகிய மூன்று மொழிகளிலும் மிக்கப் புலமையுடையவராக விளங்கியமைக்கு மேற்காட்டிய வரன்முறையான கல்வி முறையே அடிப்படைக் காரணங்களாக அமைந்தன.

பிள்ளையவர்கள் தமது புலமையினால் பல்வகை உத்தியோகங்களை வகித்தனர். ஆரம்பத்தில் பொது வேலைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகச் சேர்ந்தனர். பின்னர் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர், யாழ்ப்பாணக் கச்சேரி பிரதம எழுதுவினைஞர், மட்டக்களப்பு கச்சேரியில் முதலியார் ஆகிய பதவிகளை வகித்ததோடு இறுதியாக தேசாதிபதியின் பிரதம மொழிபெயர்ப்பாளர் பதவியினை வகித்தனர்.

பிள்ளைவர்கள் எழுதுவினைஞர் பதவி வகித்த காலத்தில் தமக்கு ஏற்பட்ட நோய் காரணமாக தமிழ் நாட்டிற்கு தலயாத்திரை செய்யப்புறபபட்டனர். தமிழ்நாட்டிலே பிள்ளையவர்கள் வாழ்ந்த காலத்தில் பல்வகை அறிஞர்களின் தொடர்பும் மதிப்பும் கிட்டிற்று அவ்வகையில் சி.வை.தாமோதரம்பிள்ளை, காசி வாசி, செந்திநாதையர், சபாபதிநாவலர், நா. கதிரைவேற்பிள்ளை, சி. தாமோதரம்பிள்ளை முதலான ஈழநாட்டறிஞர்களின் தொடர்பும் தொழுவூர் வேலாயுதபிள்ளை மஹாமகோ பாத்தியார் உ.வே. சுவாமிநாதபண்டிதர் முதலானோர்களின் நன்மதிப்பினையும் பெற்றிருந்தார். அத்துடன் திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டார சந்நிதியாக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரின் நல்லாசிகளையும் பெற்றிருந்தார்.

தமிழ்நாட்டிலே பிள்ளையவர்கள் இருக்கும் பொழுது வடதிருமுல்லைவாயிற் பெருமான் மீது அளவற்ற பற்று உடையவராய், நாடோறும் அவரைத் தொழுது தொழும்பு செய்யும் அடியவனாகவும் விளங்கி வந்தார். அங்கு இறைவனுக்கு வேதத்திலும் பிரிதியுடை திருமுறைகளைப் பண்ணோடு பாடி இறைவனைப் போற்றுதல் செய்வதையே தமது விரதமாகக் கொண்டிருந்தார். காலப்போக்கில் பண்ணாய்வினையும் மேற்கொண்டிருந்தார். வடமொழியறிவினை ஏற்கனவே பெருக்கிக் கொண்டனர்.

பண்ணின்ற மிழிசை பாடலின் பழவேய் முழுவதிர என்ற அடிகளும் யாழின் பாட்டை யுகந்த அடிகளே என்ற அடிகளும் பண்ணினதும் யாழினதும் முச்சமய முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும். இம்முக்கியத்துவத்தினை நன்குணர்ந்தவர் பிள்ளையவர்கள். ஸ்ரீ ஈழநாட்டிலே குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பண்ணிசையும் யாழும் நீண்டகாலந்தொட்டே எல்லோரிடத்திலும் பெருவழக்குற்றிருக்கா விட்டாலும், இவ்விசை மரபுகளை நன்கறிந்த ஒரு குழுவும் இருந்து வந்ததென்றே கூறுதல் வேண்டும். தேவாரமும் பண்ணிசையும் பாரம்பரியமாகக் கற்றோர் மத்தியிலும் பொதுமக்களிடையேயும் வழக்குற்றிருந்தது. இதற்கு அடிப்படைக் காரணங்களாக, திருமுறைகளை ஓதும்போது இசையோடு பாடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் விதியினை மக்கள் நம்பியிருந்தமையும் பெருவழக்கிற் காணப்பட்ட புராண படன முறையையும் குறிப்பிடலாம். சேனாதிராச முதலியார் பரம்பரையும் சரவணமுத்துப் புலவர் பரம்பரையும் புராணபடனஞ்செய்யும் முறையில் புகழ்பெற்றிருந்தனர். இப்புராணபடன முறைக்கு பண்ணிசை அறிவும் இசைநுணுக்கங்களும் கட்டாயமாகத் தெரிந்திருத்தல் வேண்டும். இப்பொழுது தான் ஒருவர் பாடும் இராகத்துக்கு ஏற்ப மற்றவர் பயன்சொல்லமுடியும் அதில் வெற்றி பெறவும் முடியும். மேற்காட்டிய பரம்பரையில் வந்த பிள்ளையவர்கள் விவேகமும் எதையும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதில் ஆர்வம் உடையவர். அவ்வகையில் இப்பண் முறைகளைப் பிள்ளையவர்கள் சிறப்பாகத் தெரிந்து வைத்திருந்தார் என்பதில் வியப்பொன்றுமில்லை. தமக்குள்ள இசை அறிவினைத் தமிழ்நாட்டில் இருக்கும் பொழுது திருவடதிருமுல்லைவாயில் ஓதுவார்கள் திருவாவடுதுறை வித்துவான்கள் மூலம் சென்னை வித்துவான்கள் முதலானோர்கள் மூலம் பிள்ளைகள் வளர்த்துக் கொண்டார். பண்ணிசையில் சிறப்பாக ஆர்வம் காட்டிய பிள்ளையவர்கள் இசைக் கருவிகளோடு இணைந்து சிறப்பாக யாழோடு இணைந்து பாடுவதில் இயல்பாகவே ஆர்வம் கொண்டிருந்த பிள்ளையவர்கள் தமிழ் நாட்டு இசை விற்பனர்களுடன் கொண்டிருந்த தொடர்பால் யாழிசை பற்றிய அறிவினை வளர்த்துகொள்ள ஆர்வம் உடையவராகக் காணப்பட்டார். ஈழநாட்டிலே யாழ் பற்றிய அறிவினைப் அக்காலப் பகுதியில் பெற்றிருந்த ஒரே வித்துவான் பிள்ளையவர்களேயாவார்.

பிள்ளையவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமையுடையவர் போல் வடமொழியிலும் புலமையுடையவராக விளங்கினார். இவர் வடமொழிக் கல்வியினைத் தமது பேரனிடத்தும் சங்கரபண்டிதரிடத்திலும் கற்றுத் தேறினார். அவர் வடமொழி இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றிலும் அதன் இசை இலக்கணத்திலும் சிறப்பாக தேர்ச்சியினைப் பெற்றிருந்தார். அவரது வடமொழிக் கல்வியறிவினைக் கணேசையர்.
"சமஸ்கிருதத்திலும் காவியங்கள் தெரிந்தவர். சகுந்தல நாடக சுலோகங்கள் சில இவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் வாக்கு மிகச் சிறந்தது. சமஸ்கிருத சுலோகங்களை இவர் உதாத்த, அநுதாத்த ஸ்வரிதப் பிரசயம் வழுவாது படிப்பது கேட்டுப் பார்ப்பன குருமாரும் பௌத்த குருமாரும் வியப்படைவர்" எனக்குறிப்பிடுவது இங்கு அவதானிக்கத் தக்கதாகும்.

தமிழ்ப் புலவர் பாரம்பரியத்தில் 'வந்தமையும் புலமையினைத் தம்முள் கொண்டிருந்தவருமான பிள்ளையவர்கள் இயல்பாகவே பாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இசைஞானமும் ஒருங்கே அவரிடத்திலே அமைந்திருந்தமையல் ஓசைச் சிறப்புமிக்க கவிதைகளைப் பாடினார். இவர் பாடிய பாடல்களுள் வடதிருமுல்லைவாயில் மும்மணிக்கோவை (அகவல்) குறிப்பிடத் தக்கதொன்றாகும். இதற்குச் சபாபதிநாவலரும் தொழுவூர் வேலாயுத முதலியாரும் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளனர். வேலாயுத முதலியார் இம்மும்மணிமாலைக்குச் சிறப்புப்பாயிரும் அளித்தமை சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய தொன்றாகும். பிள்ளையவர்கள் கற்றோர் பரம்பரையில் நாவலர்களின் பாரம்பரியத்தில் வந்தவர். வேலாயுதமுதலியார் நாவலரவர்களோடும் அவர் பாரம்பரியத்தில் வந்தவர்களோடும் மிகுந்த பகமை பாராட்டி வந்தவர். அந்நிலையிலும் பிள்ளையவர்களுக்கு முதலியாரவர்கள் சிறப்புப்பாயிரம் அளிக்க முன்வந்தார் என்றால் அது பிள்ளையவர்களின் கல்விச் சிறப்பு கல்விப் பெருக்கு, ஒழுக்கம், பத்தி, பணிவு முதலான பண்புகளை மனங்கொண்டே அளித்தார் எனலாம். இது பிள்ளையவர்களின் உயர்பண்புக்கு ஒரு சான்றென்றே கொள்ளல்வேண்டும். இந்நூல் பற்றிக் கணேசையர் குறிப்பிடும் பொழுது "இவரது அகவல்கள் கல்லாடச் செய்யுள்கள் போல இறுக்கம் பொருளாழமும் குமரகுரு சுவாமிகளது அகவல்போல் ஓசையும் வனப்பும் உடையன" எனச் சிறப்பித்துக் குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

பிள்ளைவர்கள் சங்க இலக்கியங்களில் ஆழமான அறிவையும் அப்புலவோர் மீது அளவற்ற பற்றும் உடையவராகக் காணப்பட்டார். அதனால் தமக்கு வெள்ளியந் திருமலைக்கிழார் என்னும் புனைப்பெயரினை வைத்துக்கொண்டார். தமது செய்யுட்களை வெளியிடும் பொழுது இப்பெயரிலே வெளியிட்டு வந்தார். சங்க இலக்கியங்களோடு சிலப்பதிகாரம் சீவகசிந்தாமணி முதலான காப்பியங்களிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இதனாலேயே அகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவதில் பெரும் புலமை படைத்தவராகக் காணப்பட்டார். பின்வரும் அவரது பாடல் சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டத்தின் மங்கல வாழ்த்துப்பாடல்கள் போல் (திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்) அமைந்திருப்பதை இங்கு காணலாம்.

போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!
மாற்றருஞ் சிறப்பின் வண்டமிழ்ப் புலமைப்
பாவல் லீரும் நாவல் லீரும்
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!
மட்டக் களப்பிலும் வண்புகழ் நிறீஇய
அருட்பொருட் பொன்பெயர் அமர்நாட் டங்கணும்
இட்ட வாழ்க்கை கட்டிய பான்மைப்
பாவல் லீரும் நாவல் லீரும்
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!

பிள்ளையவர்களின் சங்கநூற் புலமையும் சிலப்பதிகாரம் சீவகசிந்தாமணி முதலான காப்பியங்களிற் கொண்ட ஈடுபாடும் இலக்கணத் தெளிவும் சி.வை. தாமோதரம்பிள்ளை மஹாமகோபாத்தியாயரான உ.வே.சுவாமிநாதையர் முதலானோர்களுடன் நெருக்கமான உறவுகளையும் வளர்த்துக்கொள்ளவும் அவர்களின் பதிப்புப் பணிகளுக்கு தம்மாலான ஒத்துழைப்புக்களையும் வழங்கவும் முடிந்தது எனலாம்.

தமிழ், ஆங்கிலம், சங்கதம் ஆகிய மொழிகளில்நன்கு தேர்ச்சிபெற்றிருந்த பிள்ளையவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைத்ததில் வியப்பில்லை. ஆனால் இலங்கையின் மகாதேசாதிபதிக்கு மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும் பதவி கிடைத்தமை அவரின் மொழிப்புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமது மொழிப்புலமைகளை ஊதியத்துக்காக மாத்திரம் பயன்படுத்தாது நாட்டின் நலனுக்கும் தமிழ்மக்களின் முன்னேற்றத்தின் பொருட்டும் நல்கினார். அரசாங்கக் கட்டளைச் சட்டங்களையும் நிர்வாக அறிக்கைகளையும் சிறப்பான முறையிலே தமிழ் மொழியில் மொழி பெயர்த்தார். இதன்பொருட்டு பல கலைச் சொற்களை அவர் ஆக்கித் தமிழ் மொழிக்கு வழங்கினார். ஈழநாட்டிலே கலைச் சொல்லாக்கத்தின் முன்னோடிகளிலொருவராகவும் பிள்ளையவர்கள் விளங்கினார் எனலாம்.

ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் தமது பன்மொழிப் புலமையினாலும் இலக்கிய இலக்கண ஆற்றலினாலும் சிறப்புற்று விளங்கிய பிள்ளையவர்களை மதுரைத் தமிழ்ச்சங்கம் தமது சங்க உறுப்பினர்களுளொருவராகவும், பரீட்சகராகவும் நியமித்தது தான் பெற்ற தமிழின்பத்தை எல்லோரும் பெற வேண்டும் என்னும் பெருநோக்குமுடையவராய், தமிழ்மொழியைப் பயின்று அதில் யாவரும் பாண்டித்தியம் உடையவர்களாக விளங்க வேண்டும் என்னும் பெருவிருப்பத்தால் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சை எடுக்கும் படி பலரையும் தூண்டினார். "போற்றுகம் வம்மே" என்று புலவோரை ஆற்றுப்படுத்தல் செய்யுள் அவரின் பரந்த நோக்கத்தையும் உயர்ந்த உள்ளத்தையும் காட்டி நிற்கும்.

பிள்ளையவர்கள் நாவலர் பாரம்பரியத்தில் வந்தமையால் சைவத்தமிழ் கல்வி வளர்ச்சியின் பொருட்டு அயராது உழைத்து வந்தார். அவர் மட்டக்களப்பு கச்சேரியில் முதலியாராகக் கடமையாற்றி வந்த காலத்தில் மட்டக்களப்பு நகரப் பிரதேசங்களைச் சுற்றி கிறிஸ்துவப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு ஆங்கில மொழிமூலம் அங்கு கல்வி போதிக்கப்பட்டது. தமிழ் மொழிப் பாடசாலைகளோ சைவப்பிரகாச பாடசாலைகளோ சைவவாக்கிய பாடசாலைகளோ அங்கிருக்கவில்லை. இந்நிலையில் பிள்ளையவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னுமோர் பாடசாலையை 1902ஆம் ஆண்டு புளியந்தீவிலே நிறுவினார். இதன் தலைமைத் தமிழாசிரியராக பிள்ளைவர்களின் சிரமித்திர மாணவருமாகிய தென்கோவை ச. கந்தையாப்பிள்ளையவர்கள் நியமனம் பெற்றார். அதன் முகாமையாளராகப் பிள்ளையவர்கள் கடமையாற்றினார். 1902ம் வருடம் ஆடி மீ 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு விவேகானந்த சபையின் ஆரம்ப உறுப்பினராக இருந்து அச்சபையின் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகவும், சைவசித்தாந்தப் பிரசாரகராகவும் இருந்து சங்கநூல்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் சொற்சுவையும் பொருட்சுவையும் ததும்ப கேட்போர் இன்புறும் வண்ணம் கற்பித்து வந்ததோடு சித்தாந்த சாத்திரங்களை தகுந்த நெறி பிறழாது போதித்தும் வந்தார். தலைப்பட்டணத்தில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதில் முன்னின்றவர்களுள் பிள்ளையவர்களும் ஒருவர் எனின் அது மிகையன்று.

பிள்ளையவர்களின் பல்வேறு சிறப்புக்களையும் கணேசையர் பின்வருமாறு குறிப்பிடுவத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டியவற்றுடன் ஒப்பிட்டு நோக்கத் தக்கதாகும்.

"இவர் பத்துப்பாட்டு, புறநானூறு, கல்லாடம் முதலிய நூல்களில் மிக்கப் பயிற்சி உடையவர். பழைய அகவல்களை மிகவும் பாராட்டுவார். இவர் அகவல்படிக்கும் முறையும், அதற்குரிய இசையும் கேட்டார் பிணிக்கும் தகையவாய் உள்ளன. இவர்போல் உரிய இசைப்படி அகவல் படிப்போரும் பாடுவோரும் இவர்காலத்தும் இக்காலத்தும் இல்லை என்று கூறுவது மிகையன்று. மற்றைய பாக்கள், பாவினங்கள் பாடுவதிலும் வல்லவர். சமஸ்கிருதத்திலும் காவியநாடகங்கள் தெரிந்தவர்.

இவர் சங்கீதஞானம் உடையவர். தேவாரம் முதலியவற்றை யாழிசையோடும் பத்தியோடும் பாராயணம் செய்பவர். சிவசின்னம் தரிப்பதிலும், சைவாசாரத்திலும், சிவபத்திலும் சிறந்தவர். எவரோடு மலர்ந்த முகமுடையராய் இன்சொல்லே பேசுபவர். சமய விஷயமும் கல்வி விஷயமுமாகவே பலரோடும் சம்பாசனை செய்பவர். வீண்வார்த்தை பேசுவோரைக் கண்டால் மௌனம் சாதிப்பவர். உயர்தர உத்தியோகஸ்தர், பிரபுக்கள் முதலிய யாவரும் இவரை நன்கு மதித்து வந்தனர்.

உயர்தர நீதிமன்ற துவிபாஷக உத்தியோகத்தர்களும் சமஸ்கிருத உணர்ச்சியும் தமிழ்ப் புலமையும் வாய்ந்த இவரே சிறந்து விளங்கினார். இலங்கை அரசினர் சேவையில் இருந்தோருள் தமிழ்ப் புலமையில் சிறந்தவரும் இவரே என்பதும் மிகையன்று.

இவர் மிக்க சாந்தமும் பொறுமையும் உடையவர். ஆடம்பரமான ஒழுக்கமும் இல்லாதவர். தமிழ்ச் சங்கப் புலவர் பரீட்சகர்"

பிள்ளையவர்கள் பற்றிய மேற்கூறிய விடயங்களில் பின்வரும் விடயங்கள் இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும்.

1. சைவசமய ஒழுகலாறுகளை நியமமாகப் பேணுபவர். நாவலர் பாரம்பரியத்தில் வந்தவர்.
2. சங்க நூல்களிலும் காப்பியங்களிலும் மிக்க ஈடுபாடும் புலமையும் மிக்கவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் பரீட்சகர்.
3. செய்யுட்கள் இயற்றுவதில் வல்லவர். அகவல் பா(ட்)டுவதில் ஆற்றல் பெற்றவர். வெளியந்தலை திருமலைக்கிழார் எனும் பெயருடன் ஓசைச் சிறப்பும் பொருளாழமும் கொண்ட பாடல்களைப் பாடியவர்.
4. சிலப்பதிகாரத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். அந்நூல் கூறும் யாப்புமை அமைதியிலும் ஈடுபாடு கொண்டவர். தமக்குள்ள யாழ் பற்றிய ஈடுபாட்டினை அதன் மூலம் ஆராய முற்பட்டவர்.
5. தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் உடையவர். சிறந்த மொழிபெயர்ப்பாளர், கலைச் செல்லாக்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். பன்மொழிப் புலமையால் நாட்டிலும் தமிழ் நாட்டிலுள்ள பிரபுக்களையும் கல்விமான்களையும் கவர்ந்தவர்.
6. பிறரை நல்ல முறையில் ஆற்றுப்படுத்துவதில் ஆர்வம் கொண்டவர். பொருள் வருவாயின் பொருட்டும் புகழ் கருதியும் ஒரு பாற்கோடாதவர்.

இத்தகைய விடயங்களை அடிகளார் பிள்ளையவர்களுடன் கொண்ட தொடர்பின் மூலம் அவரது வாழ்வியலில் எவ்வளவுக்கு வெற்றி பெற்றார் என்பதை ஆய்வதன் பயனாக அடிகளாரின் பணிகளில் பிள்ளையவர்கள் கொண்டிருந்த செல்வாக்கினை அறிந்து கொள்ள முடியும்.

1. விபுலானந்த அடிகளார் 1902 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 3ந் திகதி மட்டக்களப்பில் உள்ள காரைதீவில் சி. சாமித்தம்பி பிள்ளைக்கும் கண்ணம்மையாருக்கும் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் மயில்வாகனம் என்பதாகும். வைதிகச் சைவக் குடும்பத்தில் பிறந்த அவர் சமய ஒழுகலாறுகளை அவ்வாறே பேணி நடந்து வந்தார். இவர் தமது ஆரம்ப தமிழ்க்கல்வியை தாய் மாமனார் வசந்தராகவப் பிள்ளை, சிவகுருநாதப் பிள்ளை, குஞ்சித்தம்பி முதலான ஆசிரியர் களிடத்தும் பயின்றார். பின்னர் பூருவபுவன கானமாநகர பொ. வைத்தியலிங்க தேசிகளிடத்திலும் பயின்றனர். அடிகளாரின் பெற்றோர்கள் யாழ்ப்பாணத்து மரபில் வந்தமையினால் வைத்தியலிங்க தேசிகருக்கும் அடிகளாரின் குடும்பத்திற்குமிடையே நெருக்கமான உறவுகள் இருந்து வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமித்தம்பியார் தேசிகரின் நண்பர், சகபாடி. தேசிகரின் சைவசமய ஒழுகலாறு கல்விப்புலமை முதலான ஆளுமைகள் சாமித்தம்பியாரை ஆட்கொண்டிருந்தன. தேசிகர்பால் இருந்த நாவலரர்கள் பற்றிய சிந்தனைகள் சாமித்தம்பியார் மீதும் ஆட்பட்டிருந்தது. இதனாலே தமது மகனையும் பிள்ளைப்பருவத்திலே நாவலர் பற்றியும் அவரது நூல்கள் பற்றியும் படிக்குமாறு தூண்டி படிப்பித்து வந்தார்.

அடிகாரின் வாழ்வின் இரண்டாம் சகாப்தம் கிறிஸ்தவ சூழ்நிலையில் ஆங்கில மொழியினை போதனா மொழியாகக் கொண்டு பயின்று வந்தமை இங்கு நினைகைவுகூரத் தக்கது. சாமித்தம்பியார் தமது புத்திரருக்கு ஆங்கிலக்கல்வியைப் போதிக்க விரும்பி கிறிஸ்தவப் பாடசாலைகளில் அவரைச் சேர்த்துக் கற்பித்து வந்தார். அடிகளார் ஆரம்பத்தில் கல்முனை மெதடிஸ் பாடசாலையிலும் (1901) பின்னர் மட்டக்களப்பு மெதடிஸ் பாடசாலையிலும் (1904) பின் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும் (1906 1908) கேம்பிறிஸ் சீனியர் பரீட்சையிலும் (1908) சித்தி பெற்றார். பின்னர் கொழும்பு அரசினர் ஆசிரிய கலாசாலையிலும் பயிற்சி பெற்றார். (1915 16) அடிகளார் தமது பரீட்சைப் பெறுபேறுகளினாலும் திறமையினாலும் கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை (1911) மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி, (1913 14) கொழும்பு பொறியியற் கல்லூரி முதலான நிறுவனங்களில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். அடிகளார் அவரது வாழ்வின் இரண்டாம் சகாப்தத்தில் அவரது சிந்தனை வளர்ச்சியில் ஆங்கில மொழியும் அறிவியல் வளர்ச்சியும் விஞ்ஞானக் கல்வியும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இதன் வளர்ச்சி பிற்காலத்தில் அவரை விஞ்ஞானப் பட்டதாரியாக்கிற்று என்பதையும் நினைவு கூருதல் அவசியம். இத்தகைய சூழ்நிலையிலே இவருக்கு உயர்தமிழ்க் கல்வியினைத் தாமாகவே வளர்த்துச் செல்வதற்கான வாய்ப்புக்கள் குறைந்தே காணப் பட்டதென்பதை மறுப்பதற்கில்லை. இந்நிலையில் அடிகளாருக்கு உயர்தமிழ்க் கல்வியில் பேரார்வம் ஏற்படுவதற்கான நிலைமைகளை ஆராய்தல் அவசியமானதாகும்.

2. 1906 ஆம் ஆண்டுகளில் பிள்ளையவர்கள் மட்டக்களப்பு கச்சேரி முதலியாராக கடமையாற்றி வந்தார். தமிழ் சைவப் பராம்பரியத்தில் வந்த பிள்ளைகளுக்கு மட்டக்களப்பு நகரப் பகுதி யெங்கிலும் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் சேவையும் சமயப்பிரச்சார நடவடிக்கைகளுக்கு எதிராக சைவ மக்களிடத்தில் சமயப்பிரசாரஞ் செய்வதிலும் தமிழ்க்கல்விப் போதனை செய்வதிலும் ஈடுபட்டு வந்தார். அத்துடன் 1902 ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பில் உள்ள புளியந்தீவில் சைவப் பிரகாச வித்தியாசாலை எனும் பெயருடன் அமைந்த முதல் சைவத் தமிழ் பாடசாலை ஆகும். இப்பாடசாலையின் தலைமையாசிரியராக பண்டிதர் தென் கோவை கந்தையா அவர்கள் நியமிக்கப்பட்டார். பிள்ளையவர்கள் அப் பாட சாலையின் முகாமையாளராகாவும் ஆசிரியர்களுள் ளொருவராகவும் கடமையாற்றினார். பிள்ளைய வர்களின் இப்பங்களிப்பு அப்பிரதேச மக்களாலும் அங்கு வாழ்ந்த யாழ்ப்பாண மக்களாலும் அங்கு வரவேற்கப்பட்டது. பிறிதோர் வகையில் இப் பாடசாலை அங்கு வாழ்ந்த அப்பிரதேச கல்வி மான்களும் யாழ்ப்பாணக் கல்விமான்களும் கூடுகின்ற கல்விக் கழகமாக விளங்கிற்று.

பிள்ளையவர்கள் கச்சேரி முதலியாராக கடமையாற்றிய காலத்தில் அடிகளாரின் தந்தையார், பிள்ளையவர்களின் கீழ் கிராம சேவகராக கடமையாற்றினார். நட்பின் நிமித்தமும் பிள்ளையவர்களைச் சந்தித்து உரையாடுதல் வழக்கம். பிள்ளையவர்கள் தொடர்பால் சாமித்தம்பி, பொன் வைத்தியலிங்க தேசிகர் முதலானோர்களுக்குமிடையில் நட்பு வளாந்தன. இக்கால கட்டத்திலே சித்தி பெறுதற்கு பிள்ளையவர்களும் பண்டிதர் கந்தையாப் பிள்ளையுமே முக்கிய காரணகர்த்தர்களாக விளங்கினர் என்பதை யாவரும் மறுப்பதற்கில்லை.

3. பிள்ளையவர்கள் சங்கநூல்களிலும் சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலும் தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் "வெள்ளியந்திருமலைக்கிழார்" என்னும் புனைப் பெயரை தமக்குச் சூட்டிக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவர் வடதிருமுல்லை வாயில் மும்மணிக்கோவை என்னும் நூலையும் பல தனிநிலைச் செய்யுட்களையும் பாடியுள்ளார். இவர் செய்யுள் இயற்றுவதில் மிக்க ஆற்றல் பெற்றிருந்த பொழுதும் செய்யுட்கள் பாடியமை மிகக் குறைவு. ஆயினும் அவை ஓசைச் சிறப்பும் பொருளமைதியும் கொண்டவை. இன்னோசையுடன் அகவல் பாடுவதில் அவரோர் சமர்த்தர். திருவாவடுதுறை மகா சந்நிதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களது மும்மணிக்கோவையில் அவர் பாடிய அகவற் பாவின் சிறப்பு நோக்கியே "வித்துவான்" என்ற பட்டத்தை வழங்கியிருந்தமை ஈண்டு மனங் கொள்ளத் தக்கது. அடிகளாரும் சிறுவயது முதல் பாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார். ஆயினும் பிள்ளைவர்களுடனும் கொண்ட தொடர்பின் பிற்பாடே சிறந்த கவிதை பாடத் தொடங்கினார். 1915 ஆம் ஆண்டில் பிள்ளையவர்கள் பாடிய கோதண்ட நியாயபுரிக் குமாரக்கோவை மணிமாலையில் அகவற்பாவில் அவருக்கிருந்த ஈடுபாட்டினை அறிய முடிகின்றது. பிள்ளை யவர்களிடம் சிலப்பதிகாரத்தை வரன் முறையாகப் படித்தமையும் அதனைப் பிள்ளையவர்கள் அடிகளாருக்கு கற்பித்த முறைமையும் இவ்விடத்தில் நினைவு கூருதல் வேண்டும். மேலும் அடிளார் பாடிய நீரரமகளிர் இன்னிசைப்பாடல், கங்கையில் எழுதிட்டஓலை, முதலான பாடல் தொகுப்புகளிலும் பிறமொழிக் கவிதைகளை மொழிபெயர்த்துப் பாடும் பொழுதும் அவர் அகவல்பாவினையே கையாண்டு பாடியமை அவருக்கு அகவற் பாவில் இருந்த ஈடுபாட்டினை உணர்ந்து கொள்ளும் அதே வேளையில் பிள்ளையவர்களின் செல்வாக்கினை யும் உணர்ந்து கொள்ளுதல் அவசியமானதாகும்.

4. சிலப்பதிகாரம் தமிழ்காப்பியம், சமய காப்பியம், சமய காழ்ப்புகள் காரணமாக அச் சமயவாதிகள் தவிர்ந்த ஏனைய சமயவாதிகளால் போற்றப்படாது இருந்து வந்தது. இத்தன்மை பெரிதும் தமிழ் நாட்டிலே பேணப்பட்டது. ஈழநாட்டில் இக்காழ்ப்புணர்ச்சி இருக்கவில்லை. இலக்கிய ரசனைக்கு உகந்த நூல்களாக சிலப்பதிகாரம், சீவ்கசிந்தாமணி, மணிமேகலை முதலான நூல்கள் விளங்கின. பிள்ளையவர்கள் தமிழ்க் காப்பியங்களை இரனையின் அடிப்படையில் பயின்ற தமிழ்ப் பாராம்பரிய மரபில் வந்தவர். பிள்ளையவர்கள் நுண்மாண் நுழைபுலமுடையவராதலால் ஏனைய தமிழ் அறிஞர்கள் சிலப்பதிகாரத்தினை நோக்கிய நிலைநின்று விடுபட்டு, அதனை தனது அறிவியல் வளர்ச்சிக்குக் கருவியாகக் கொண்டார்.

ஈழநாட்டில் தமிழிசை மரபு எவ்வகையில் வளர்ச்சியுற்று வந்தது என்பது ஆராயப் படவில்லையாயினும் புராணபடனம் தொடங்குவதற்கு முன்பாக பஞ்சபுராணம் ஓதுமுறை ஈழநாட்டிற் காலூன்றிய காலம் முதல் பண்ணிசையின் வளர்ச்சியோடு தமிழிசை மரபும் ஈழநாட்டில் வளர்ச்சியுற ஆரம்பித்தது எனலாம். பிள்ளையவர்களின் சம பாரம்பரியம் பிற்காலத்தும் பஞ்சபுராணத்தை இசையோடு பாடி இறைவனை வணங்கிவரும் வழக்கத்தையுடைய பாரம்பரியத்தை உடையது. புராணப்படனம் ஈழநாட்டில் வளர்வதற்குப் பிள்ளையவர்களின் குலமரபிற்கு கணிசமான பங்கு உண்டு. அவ்வகையில் பிள்ளையவர்களும் இசைஞான மரபும் இசைஞானமும் உடையவராக விளங்கியதில் வியப்பில்லை. இதனை தமிழ்நாட்டில் இருக்கும் பொழுது நன்கு வளர்த்துக் கொண்டார். ஆனால் பிள்ளையவர்கள் ஈழநாட்டில் தமிழிசை மரபு தெரிந்தோர்களை விட பிறிதோர்வகையில் முக்கியத்துவம் உடையவராக விளங்குவதை அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணத்துக்கும் யாழுக்கும் தொடர்புண்டு என்பது வரலாற்று ஐதீகம் யாழ்பாடிய வடபகுதி யாழ்ப்பாணம் ஆயிற்று என்பதும் அவர்களின் சந்ததி இங்கு குடியேற்றப்பட்டதென்பதும் இவ் வைதீகத்தின் வரலாறு. உண்மையான வரலாறு அதல்ல. யாழ்ப்பாணத்தின் இசைவிற்பன்னர்கள் குலமரபில் வந்தவர்களுமல்ல. பல குலமரபுக் குடும்பங்களைச் சேர்ந்தோர் தமிழ்நாட்டில் கற்றுத் தேறியோர் ஆவர். எது எவ்வாறு இருப்பினும் யாழ் பற்றிய நுண்ணறிவுடையோர் ஈழநாட்டில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர் என்றே கூறுதல் வேண்டும். அவ்வகையிலே தான் பிள்ளையவர்கள் ஏனையோரைக் காட்டிலும் யாழிசையில் வல்லவராக விளங்கினார் எனலாம். பிள்ளையவர்களின் இந்நுண்ணறிவினை அவரது சமயத்தவரான கணேசையர் மேலே வியந்து குறிப்பிட்டதை இங்கு நினைவு கூர்வது அவசியமானதாகும்.

பழைய அகவல்களை மிகவும் பாராட்டு பவர் இவர். அகவல் படிக்கும் முறையும் அதற்குரிய இசையும் கேட்பார் பிணிக்கும் தகையவனாய் உள்ளன. இவர்போல் உரிய இசைப்படி அகவல் படிப்போரும் பாடுவோரும் இவர்காலத்தும் இக்காலத்தும் இல்லை என்று கூறுவது மிகையன்று. மற்றைய பாக்கள் பாவினங்கள் பாடுவதிலும் வல்லவர்.

இவர் வாக்கு மிகச் சிறந்தது. சமஸ்கிருத சுலோகங்களை இவர் உதாத்த அநுதாத்த ஸ்வரிதப்பிரசயம் வழுவாது படிப்பது கேட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பன குருமாரும் பௌத்த குருமாரும் வியப் படைவர்.

இவர் சங்கீதஞானம் உடையவர், தேவாரம் முதலியவற்றை யாழிசையோடு பத்திமையோடும் பாராயணஞ் செய்பவர்.

மேற்படி கூற்றின் மூலம் பிள்ளையவர்கள் பாடல்களை உரிய இசைமரபின்படி பாடுவதில் ஆற்றல் பெற்றவர் என்பதும் சங்கதமொழிச் சுலோகங்களை அதற்குரிய இசைமரபில் பாடும் வரன்முறையை நன்கு பயின்றிருந்தார் என்பதும் தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றது. இவற்றுக்கு மேலாகப் பிள்ளையவர்கள் "இசைஞானம் உடையவராய் தேவாரம் முதலியவற்றை யாழிசையில் பத்தியோடு பாராயணம் செய்பவர்" என்னும் கூற்றே இங்கு மிக முக்கியத்துவம் உடையதாகும். ஈழநாட்டில் இசை வரலாற்றில் யாழ் முக்கியத்துவம் பெற்ற பொழுதும், யாழை ஒரு இசைக் கருவியாகக் கொண்டு, அதனை இசைத்துப் போற்றி வந்தோர்பற்றிய செய்திகள் மிகக் குறைவு. ஒருவகையில் இல்லையென்றே குறிப்பிடலாம். வரலாற்றில் பிள்ளையவர்களின் மேற்படி செய்தியே முதன்முதலாக இடம் பெறுகின்றது.

அடிகளார் பண்டிதர் கந்தையாப்பிள்ளை யிடம் இராமாயணம், இரகுவம்சம் முதலான நூல்களைப் பாடங் கேட்பவர். பிள்ளையவர்களிடம் சங்க நூல்களையும் சிலப்பதிகாரத்தையும் பாடங் கேட்பவர். பண்டிதர் பரீட்சைக்கு சிலப் பதிகாரத்தில் அரங்கேற்று கதையில் குறிப்பிட்ட பகுதிகள் நீக்கப்பட்டு ஏனைய பகுதிகள் பாடமாக இருந்தது. பிள்ளையவர்கள் கலாரசனை உடையவர். செய்யுட்களை இசையோடு பாடிப் பொருள் சொல்வது அவரது கற்பித்தல் முறையில் சிறப்பானதொரு முறை. 1902 ஆம் ஆண்டின் பின் விவேகானந்த சபையின் பிரதான உறுப்பினராகவும் இருந்த காலகட்டத்தில் இத்தகைய முறையிலேயே பாட நூல்களையும் சைவ சித்தாந்த வகுப்புக்களையும் நடத்தினர். அடிகார் பிள்ளையவர்களிடம் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் பாடங் கேட்டனர்.

1915 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிலப்பதிகாரம் பத்தி நூல் என்னும் அடிப்படையில் (கண்ணகி வழக்குரை காதை) அதனைக் கேட்டும் பாராயணஞ் செய்து வந்தவர். அடிகளார் அவருக்கு அதன் இலக்கியச் சுவையையும் அதிற் பொதிந்திருக்கும் இசை நுணுக்கங்களையும் அதில் ஆராய்ப்பட வேண்டிய விடயங்களையும் சுட்டிக்காட்டி அது பற்றிச் சிந்திக்க வைத்த பெருமை பிள்ளையவர்களுக் குண்டு. சிலப்பதிகாரம் சமய காழ்ப்புகள் காரணமாக ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. சிலப்பதிகாரத்தின் பொருள் அமைதியைப் பேணி, கண்ணகிகதை, சிலம்புகூறுல், கண்ணகி வழக்குரை என்னும் வழி நூல்கள் தோன்றியுள்ளன. அவை யாழ்ப்பாண கரையோரப் பகுதி, வன்னி, மட்டக்களப்பு மக்களிடத்தில் பக்தி நூலாகவே பேணப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் அதன் மூலநூலான சிலப்பதிகாரத்தையும் அவ்வாறே இம்மக்கள் கருதினர்.

அடிகளார் 1902 ஆம் ஆண்டு முதல் 1915 ஆம் ஆண்டுவரையும் ஆங்கிலத்தில் சிந்தித்து தமக்குள்ள விஞ்ஞான ஆற்றலைப் பெருக்க முயன்றவர். குடும்ப சூழ்நிலையால் தமிழ் படிக்கத் தூண்டப்பட்டவர். அதன் தொடர்ச்சியின் இயல்பாக அவருக்குத் தமிழ்க் கல்வியில் ஆர்வம் இருந்து வந்தென்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் அடிகளாரின் அறிவியற் சிந்தனைகளை தமிழியல் வளர்ச்சியின் பொருட்டு திருப்பியவர் பிள்ளையவர்களேயாம். அடிகளார், பிள்ளை யவர்களிடம் சங்க இலக்கியங்களையும் சிறப்பாகச் சிலப்பதிகாரத்தையும் படிக்காது பிறரிடம் கற்றிருந்தால் அவர் தனித்தே தமிழ் பண்டிதராகவே வளர்ச்சி பெற்றிருக்கலாம்.

அதன்வழி தமிழ் இலக்கிய வளர்ச்சியை நோக்கி அவர் பணிகளை மேற்கொண்டிருக்கலாம். குறிப்பாக, அடிகளார் இசைத்துறை பற்றியும் அதில் யாழ்களின் வகை, தன்மை பற்றி ஏன் தனித்துச் சிந்திக்க வேண்டும். பிள்ளயவர்களிடம் கற்கும் வரையில் அடிகளாருக்கு யாழ் பற்றிய சிந்தனை இருந்ததாக வரலாறு இல்லை. ஆரம்ப காலத்தில் இல்லாததொன்று எப்படி இடையில் வந்துதித்தது என வினவினால், அதற்குப் பிள்ளையவர்கள் யாழிசையில் கொண்டிருந்த ஈடுபாடு அடிகளாரின் மேல் செல்வாக்குச் செலுத்தி வழிகாட்ட அதனை அடிகளார் தக்கவாறு பயன்படுத்தியமையே இதற்குக் காரணமெனலாம். பிறிதோர் வகையிற் கூறின் திருமுறைகளைப் பண்ணோடு பாடுவதிலும் அதனை யாழில் இசைத்துப் பாடுவதிலும் ஆற்றல் பெற்றிருந்த பிள்ளையவர்கள் யாழ் பற்றி விதந்துரைக்கும் அடிகளாரின் தமிழ் ஆர்வத்தையும் அவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான அறிவையும் நன்குணர்ந்த பிள்ளையவர்கள் சங்ககாலம் முதல் சங்கமருவிய காலம் வரையும் (சிலப்பதிகாரம்) தமிழ் மக்களிடம் வழக்குற்று, வழக்கிழந்த யாழ்களைப் பற்றி ஆராய்ந்து கண்டு பிடித்தல் வேண்டும் என்னும் பேரார்வம் கொண்டிருந்தமையால், தமது ஆர்வத்தை அடிகளாரின் பால் செலுத்தி, அதன் பால் ஆற்றுப்படுத்த முற்பட்ட பொழுதே அடிகளாருக்கு யாழிசை பற்றியும் அதன் வகைகள் பற்றியும் ஆராய ஆர்வம் பிறந்தது எனலாம்.

அடிகளார் தமது யாழ் நூலின் பாயிரத்தில் நூல்தோன்றிய வரன்முறை என்னும் பகுதியில் இந்நூல் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்களாக மூன்றினை இங்கு நோக்கலாம். அவற்றில் முதல் இரண்டு காரணங்களும் பின்வருமாறு அமையும்.

1. பெரும்பேராசிரியர், தென்னாட்டு கலைச் செல்வர் எழுத்தறிவு புலவர் என்னும் சிறப்புப் பெயருக்கு பெரும் புலவருமாகிய சாமிநாதையர் அவர்கள் சிலப்பதிகாரத்தினை முதன்முதலாக அச்சிட்டது 1892 ஆம் ஆண்டிலாகும். அந்த ஆண்டிலே யானும் பிறந்தேனாதலினால், பள்ளி படிக்கும் காலத்திலே மூத்தோர் கையிலே பிரதியிருக்கக் காண்பதும், என் கையினாலே அதனைத் தீண்டுவதும் எனக்குப் பேருவகையினைத் தரும் செயல்களாக இருந்தன.

2. ஈழநாட்டின் குணபாலிலே, என் முன்னோர்களுக்கு உறைவிடமாகிய காரேறு தீவிலே, கடல் சூழ் இலங்கைக் கயபாகு மன்னன் வழிவந்த மன்னர்களாலே நிறுவப்பட்ட பழமையான கண்ணகியார் கோயில் ஒன்று உள்ளது. அதன் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் மீதுள்ள ஆர்வம் பெருகியது.

அடிகளாரின் மேற்படி இரு கூற்றுக்களும் சிலப்பதிகாரத்தினை படிப்பதற்கு பின்னணியாக இருந்த காரணங்களாகவே அமைகின்றன. அவை அடிகளாருக்கு இதில் இருந்த ஆர்வத்தையும் பத்தியையும் வெளிப்படுத்துவனவாகவே அமைகின்றன. மூன்றாவது காரணம் பின்வருமாறு அமையும்.

"கொழும்பு மாநகரிற் கல்விகற்கும் காலத்திலே, இலங்கையரசினாலே பெருமதிப்பு பெற்ற கலைச்செல்வராகிய கைலாப்பிள்ளையவர்களைச் சந்தித்துச் சிலப்பதிகாரத்தைப் பாடங் கேட்கும் பேற்றினைப் பெற்றேன். பரம்பரைக் கலைவாணர் குலத்திலே யுதித்த கம்பீரமான குரலிலே மங்கல வாழ்த்துப் பாடலினை பாடங்கேட்டது இன்னும் என் அகச் செவியிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மேற்படி கூற்றின் மூலம் அடிகளார் பிள்ளையவர்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்துக் களை பின்வருமாறு பகுக்கலாம்.

1. 'பிள்ளைவர்கள் ஒரு கலைச் செல்வர்.
2. பரம்பரைக் கலைவாணர்.
3. பழைய இசைமரபுகளை நன்கு தெரிந்த இசைஞானி
4. இனிய குரலிலே இசையோடு பாடும் வல்லமையுடையவர்.
5. சிலப்பதிகாரத்தை கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவரே.
6. சிலப்பதிகாரத்தை வரன்முறையாகக் கற்றதின் பயனை (இந்நூலின் பயனாக) நினைவு கூர்கிறேன்.

பிள்ளையவர்களின் கூற்றுக்களையும் அதன் வெளிப்பாடாக அமைந்த பிள்ளையவர்களைப் பற்றி கணேசையர் கூறியவற்றுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது யாழ்நூலின் தோற்றத்துக்கு பிள்ளையவர்களின் பங்களிப்பினையோ ரிசி மூலத்தினையோ அறிந்து கொள்ள முடியும். ஒரு வகையில் கலைவாணராகிய பிள்ளையவர் களின் யாழ்நூல் பற்றிய ஆய்வுக்கு களமமைத்துக் கொடுத்து வழி காட்டியவர் என்பதை மறைமுக மாக (பிள்ளையவர்களை தோன்றாய் எழுமையாகக் கொண்டு) சுட்டிச் சொல்வதையே அடிகளாரின் மேற்படி கூற்றுப் புலப்படுத்துகிறது எனக்கூறின் அது மிகையாகாது. ஆனால் அதனை நேரடியாகக் கூறாமைக்கு யாது காரணம் பற்றி அறியாமலில்லை.

இவ்விடத்தில் இதனோடு தொடர்பாக எழும் பின்வரும் வினாக்களை அவதானித்தல் அவசியமானதாகும். அடிகளார் யாழ் என்னும் இசைக்கருவியினைப் அறிமுகப்படுத்துவதற்கு முன்பாகப் பிள்ளையவர்கள் யாழிலே இசைத்தே பண்ணிசையைப் பாடினார் என்பதும், கணேசையர் பிள்ளையவர்கள் பண்ணிசையை யாழோடிசைத்துப் பாடினார் என்று குறிப்பிடுவதில் யாழ் என்பது உண்மையில் யாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இசைக்கருவியைத் தானா அல்லது அதனோடு இசைந்த இசைக்கருவியொன்றினையா என்பதும் பிறிதோர் வகையான இசைக் கருவியானால் எவ்வகையில் பிள்ளையவர்கள் அடிகளாருக்கு யாழ் பற்றி ஆய்வில் முன்னோடியாக விளங்க முடியும் என்பதும் முக்கிய வினாக்களாக அமைகின்றன. அவை ஆராயத்தக்கன.

யாழும் வீணையும் நம்பிசைக் கருவிகள். இவை இனிய இசை வடிவங்களைத் தோற்றுவிப்பன. இவ்விரு இசைக்கருவிகளும் பத்து நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழ்நாட்டில் இசைக் கருவிகளாக விளங்கின.. ஆயினும் இதில் யாழ் சிறந்த இசைக்கருவியாகப் பேணப்பட்டதுடன் இதுவே தமிழ் மக்களால் முதன்முதலாக வாசிக்கப் பட்ட இசைக்கருவியுமாகும்.

தமிழ் மக்களிடத்திலே வழக்கிலிருந்து வந்த யாழினை இசைத்துப்பாடும் திறனினைப் பிற் காலத்தவர் இழந்த நிலையில், 17ம் நூற்றாண்டில் யாழிலிருந்து பிறந்ததென்று கருதக்கூடிய வீணையின் உபயோகத்தினைத் தமிழ் மக்கள் பெற்றிருந்தனர். இவ்வகையில் தான் தமிழ் மக்கள் வீணையையும் யாழினையும் ஒன்றாகக் கருதினர் போலும். யாழில் இருந்து தோன்றிய தென்ற வகையிலும் தந்திக் கருவியென்ற வகையிலும் வீணை யாழோடு பெரிதும் ஒற்றுமை உடையதாயினும் இசைக்கும் முறையில் இவை வேறுபடுவன. யாழில் ஒவ்வொரு தந்தியையும் சுருதி கூட்டித் தேவையான பண்களை வாசிக்க முடியும். ஆனால் வீணையில் பல தந்திகள் இடம் பெறாது. இரண்டு அல்லது நான்கு தந்திகளிலே அவற்றை மீட்ட முடியும்.

யாழின் அமைப்பினையும் வீணையின் அமைப்பினையும் உருவாக்குவதற்கு இலக்கியங் களும் சிற்ப, ஓவியங்களும் அடிப்படையாக அமைந்தன. பத்துப்பாட்டு நூல்களான சிறு பாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப் படை ஆகிய நூல்களிலே பாணர் வாசித்த யாழ்க் கருவியின் உருவச் சாயல்களும் யாழ் உறுப்புக் களின் வண்ணமும் வடிவமும் சிறப்பான வகையிலே எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அமராவதி, கோலி, தாராசுரம் முதலான இடங்களில் அமைந்த சிற்பங்களில் யாழின் அமைப்புக்கள் வருகின்றன. அதே போன்று மைசூரிலுள்ள பேலூர், கௌபீடு, பட்டீசுவர் முதலான கோயிற் சிற்பங்களில் வீணையின் தோற்றங்களை அடிப்படையாகக் கொண்டு 17ம் நூற்றாண்டில் தஞ்சையை அரசு புரிந்த இராம நாதமன்னனின் காலத்தில் வீணையென்று தற் காலத்தில் வழங்கும் இசைக்கருவி உருவாக்கப் பட்டது.

பிள்ளையவர்கள் வாசித்த இசைக் கருவியினை ஐயரவர்கள் யாழ் என்று குறிப்பிட்ட போதும், உண்மையில் அது யாழ் எனும் இசைக்கருவிதானா என்பது சிந்திக்கத்தக்கதாகும். ஆனால், அது யாழல்ல. ஐயர் பண்டைய இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த ஈடுபாடுடைய நல்லறிஞர். ஆனால் இசைவல்லவர் அல்லர். அவர் தமக்குள்ள இலக்கிய ஈடுபாட்டினால் மரபு தழுவி, பிள்ளையவர்கள் வாசித்து பிறரை மகிழ்வூட்டிய இசைக்கருவியினை யாழ் என்று குறிப்பிட்டார் போலும். உண்மையில் பிள்ளைய வர்கள் வாசித்த இசைக்கருவி வழக்காற்றில் இருந்த வீணையாகவே இருத்தல் வேண்டும். ஆனால் இசைஞானியாகிய பிள்ளையவர்களுக்கும் ஐயருக்கும் வீணைக்கும் யாழுக்கும் வித்தியாசம் தெரியாதென்பது அர்த்தமல்ல. "நாத வீணை நயந்தெரிபாடல்" என்ற சிலப்பதிகார அடிகளுக்கும் "இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்" என்ற திருவாசக அடிகளுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை நன்கறிந்த அறிஞர்கள் அவர்கள்.

மேலும் பிள்ளையவர்கள் ஆராய்ச்சி வன்மை மிக்கவர், தமிழ் இசையின் மீது காதல் கொண்டவர். அதன் பழைய வடிவங்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதில் விருப்பம் கொண்டவர். அவ்வகையில் சங்க இலக்கியங்களில் வரும் வில்யாழ், சீறியாழ், பேரியாழ் என்பவற்றையும் சிலப்பதிகாரம், மணிமேகலை சீவகசிந்தாமணி, பெருங்கதை முதலியவற்றில் வரும் செங்கோட்டு யாழ் வகைகளின் இயல்புகளையும் அறிய விரும்பியவர். அவ்வகையிலே அநுபவவாயிலாக வும் இலக்கிய வாயிலாகவும் யாழுக்கும் வீணைக்கும் வேறுபாடுகளை நன்குணர்ந்தவர். எனவே தான் தமிழ் மக்களிடத்தில் வழக்குற்றுப் பின்வழக்கிழந்த யாழ் என்னும் கருவியை அறிய பெருவிருப்பம் உடையவராக காணப்பட்டார். இவ்விருப்பம் அடிகளிடத்தே செல்வாக்குப் பெற்ற பொழுது, தமிழியற்றுறைகளில் ஆர்வம் கொண்டிருந்த அடிகளார் உள்ளத்தில் இவ்விருப்பம் கால்கோள் கொண்ட பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் அதனை இறுகப் பற்றியதன் விளைவே யாழ் நூல் என்னும் பெரு நூலாகும். இவ்விடயம் பற்றிய மிகுந்த நெருக்கமான சிந்தனை உறவுகள் இருவரிடத்திலேயும் ஏற்பட்டமையாலேயே தான் அடிகளார் யாழ் நூலில் பிள்ளையவர்களை உட்பிட்ட வரை உள்ளளவும் நினை என்ற மகாவாக்கியத்துக் கமைய நினைவு கூர்ந்தமையும் அவ்வாறே பதிப் பாசிரியரும் நினைவு கூர்ந்தமையும் இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும்.

அடிகளார் தமது யாழ் நூலினை பாயிரவியல் யாழுறுப்பியல், இசைநரம்பியல், பாசுததிரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல் என்னும் ஏழு இயல்களைக் கொண்டதாய்ப் படைத்துள்ளார். இவற்றில் யாழுறுப்பியல், பண்ணியல், தேவாரவியல், முதலான விடயங்களில் பிள்ளையவர்களுக்கு ஆழமான புலமை இருந்த தென்பதை இங்கு மனங்கொள்ளல் வேண்டும்.

பிள்ளையவர்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் பாண்டித்தியம் உடையவராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் அரசாங்க உத்தியோகம் பார்த்து வந்த தமிழ் சமூகத்தினரிடையே மேற்கூறிய மூன்று மொழிகளிலும் மிகுந்த பாண்டித்தியம் உடையவராக விளங்கியவர் என்பது வரலாறு. இத்திறத்தினாலேயே இவர் அரசாங்கத்தில் துவிபாஷகராகவும் இராசாவால் முதலியாராகவும் விளங்க முடிந்தது. இதனால் தமிழ் மக்களிடத்தில் அதிக நன்மதிப்பினைப் பிள்ளையவர்கள் பெற்றிருந்தனால். குறிப்பாகக் கொழும்புத் தமிழ் மக்களிடத்திலே அவரின் கல்விச் சிறப்பும் சமய ஒழுகலாறும் சிறப்பாக வரவேற்கப்பட்டன. கொழும்புப்பட்டணத்திலே அன்று வாழ்வைப் பொறுத்த மட்டில் தமிழ் அவர்களின் தேவபாடையாகவே இருந்து வந்தது. அவ் வகையிலே தான் அவர்கள் சைவத்தையும் தமிழையும் பேணினர். ஆயினும் தமிழ்மொழி, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைக் காட்டிலும் காலத்தால் முற்பட்ட இலக்கிய வளமுடைய மொழி என்பதாலும், அம்மொழி யிலேயே கூடுதலான தெய்வீகப் பாடல்கள் காணப்படுவதால் அது பத்திக்குரிய மொழி என்பதாலும் அத்தகைய சிறப்புகளையும் பண்பாட் டையும், கொண்ட பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்ற பெருமையும் இப்பட்டணத் தமிழ் மக்களுக்கு இருந்து வந்தன என்பதை மறுப்பது கடினம். இதனாலே கொழும்பில் வாழ்ந்த பிரபுக்களும், சட்டவல்லுனர்களும் அரசாங்க உத்தியோகத்தர் களும் சங்க நூல்களையும் படித்து அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு அவற்றின் பெருமைகளை வெளிப்படுத்த முனைந்து நின்றனர். ஆங்கிலத்தை கல்வி வர்த்தக மொழியாகக் கொண்டிருந்த பட்டணத்துத் தமிழ் மக்களுக்கு எடுத்த மாத்திரத்தே சங்க இலக்கியங் களையும் திருமுறைகளையும் சித்தாந்த நூல்களை யும் படித்துவிடமுடியாது. இதனாலே பட்டணத்தில் மொழிவல்லுனராகவும் கலைச் செல்வராகவும் விளங்கிய பிள்ளையவர்களின் உதவி அவர்களுக்கு வேண்டப்பட்டது. அவ் வகையில் சேர். பொன் குமாரசுவாமி, சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், ஐசக் தம்பையா முதலானோர்கள் பிள்ளையவர்களிடம் சங்க நூல்கள், சமய நூல்கள் சித்தாந்த நூல்கள் முதலானவற்றுள் பாடம் கேட்டனர். அருணாசலம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஞான வாசிட்டம், தாயுமானவர் பாடல்கள், சிவஞான போதம், கல்லாடம் முதலான நூலுக்கும் கலாவதி ஐசக் தம்பையா மொழிபெயர்த்த Psalms of a Saira Saint முதலான நூல்களுக்கும் பிள்ளையவர்களின் உதவி பெரிதும் வேண்டப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே தான் பிள்ளையவர்கள் தனது நன்மாணாக்கரான அடிகளாரையும் அவரின் பல்வகைப் புலமை பற்றியும் மேற்படி பெரியோர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தனர். பிற்காலத்தில் அடிகளாரின் புலமையறிந்து இலங்கைப் பல்கலைக்கழகத்துக் குத் தமிழ் பேராசிரியராக வரும்படி அடிகளா ரை வேண்டிக் கொண்டவர்கள் சேர். பொன் அருணாசலமும் இராமநாதனுமேயாவார். இவ்வகை நட்பினாலேயே தான் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளைக்கு ஆசிரியர் தொழில் வழங்கும்படி அடிகளார் சேர். பொன் இராமநாதனிடம் பரிந்துரை செய்தனர்.

பிள்ளையவர்கள் தமது பண்டித மொழித் திறனை உத்தியோகத்தின் பொருட்டு மாத்திரம் பயன்படுத்தவில்லை. அரசாங்கத்தின் பல்வகை நிர்வாக ஆவணங்களையும் கட்டளைச் சட்டங்க ளையும் நல்ல தமிழிலே மொழி பெயர்த்தனர். மொழிபெயர்த்ததோடு அமையாது வேண்டிய விடத்து புதிய சொற்களை ஆக்கவும் தயங்க வில்லை. ஒருவகையில் பிள்ளையவர்கள் அரசாங்க சேவையில் வெறுமனே மொழிபெயர்ப்பாளராக அமையாது கலைச் சொல்லாக்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையுணர்ந்து செயற்பட்டவர் எனலாம்.

"உயர்தர நீதிமன்ற துவிபாஷக உத்தி யோகத்ததரர்களுள்ளும், சமஸ்கிருத உணர்ச்சியும் தமிழ்ப் புலமையும் வாய்ந்த இவரே சிறந்து விளங்கினர். அரசினர் கட்டளைச் சட்டங்களை ஏற்ற தமிழ் நடையில் இவர் மொழிபெயர்த்த நூல்களும் பலவாகும். இந்நூல்களே இவருக்குப் பின்வந்த மொழிபெயர்ப்பாளர் பலருக்கு வழிகாட்டியாக இருந்தனர், இருக்கின்றனர்" என்ற கூற்று மேற்கூறியவற்றுடன் ஒப்பிட்டு நோக்கத் தக்கதாகும். அடிகளாரும் பிள்ளைய வர்களும் போல் மும்மொழிப் புலமை மிக்கவர். பிள்ளையவர்களின் தொடர்பால் சேர். பொன். அருணாசலம், கலாநிதி தம்பையாப்பிள்ளை மொழிபெயர்த்த நூல்களை நன்கு கற்றவர் பிள்ளையவர்கள் மொழிப்பெயர்ப்புப்புலமையை உடனிருந்து நன்குணர்ந்த அடிகளார் 1915 ஆம் ஆண்டு தனது கன்னி மொழிபெயர்ப்பாக ஒரு மொழிபெயர்ப்பு நூலொன்றினை வெளியிட்டமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

பிள்ளையவர்கள் பாத்திரம் அறிந்து தக்கோரை தம்பால் அணைத்து கொள்வதும் அவர்களின் புலமையறிந்து பலவழிகளில் ஆற்றுப் படுத்துவதும் அவரது உயர்ந்த குணங்களிளொன்றாக இருந்து வந்தது. அவ்வகையிலே தான் அடிகளாரும் ஆற்றுப் படுத்தப்பட்டார். பிள்ளையவர்கள் அடிகளாரை அணைத்து தக்கவாறு ஆற்றுப்படுத்தியிருக்கா விட்டால் அடிகளார் தமிழ் உலகத்திற்கு யாழ் நூல் என்னும் ஒப்பற்ற இசைநூலைத் தந்திருக்க முடியுமா என்பது கேள்விக் குறியேயாகும். அதேபோன்று கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த சு. நவநீதகிருஷ்ணபாரதியாரை அடிகளார் அணைத்துத் தக்கவாறு ஆற்றப்படுத்தியிருக்கா விட்டால் உலகியல் விளக்கம் என்னும் சங்கத் தமிழில் அமைந்த நூலினைப் பெற்றிருக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகவே அமைந்து விடும். குரு சீடர்பரம்பரையில் இவர்களின் உள்ளங்கள் ஒருவரின் பின் ஒருவராக ஆசீர்வதிக்கும் பொழுது அஃது தொடர்சங்கிலி போல் நிகழ்ந்து விடுவது வரலாற்று நியதி போலும்.

பிள்ளையவர்கள் நாவலர் பரம்பரையில் வந்தவர். நாவலர் "பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்" அவ்விலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே பிள்ளையவர்கள் தம் வாழ்வியலை நடத்தியவர். இதனாலே தான் பிள்ளையவர்கள் தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் பிறரால் போற்றப்பட்டார். அடிகளாரும் இவ்விலட்சிய உணர்வோடே வாழ்ந்தனர். பின்வரும் அடிகளாரின் கூற்று இங்கு ஒப்பிட்டு மனங்கொள்ளத்தக்கது.

தமிழ்ப் புலவராகிய நாம் கம்பனுடைய வழித்தோன்றல்களென்பதையறிய வேண்டும். அவனைப்போல் நாமும் மன்னன் முன்னிலையிலே ஏமாப்போடும் நின்று "மன்னவனும் நீயோ வளநாடு முன்னதோ உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்" என்று துணிவாகச் சொல்ல வேண்டும்.

முடிவாக அடிகளார் சைவமரபிற் பிறந்து நாவலர் பாரம்பரியத்தில் உட்பட்டதினால் ஆங்கில மொழி உணர்விலும் தமிழ் உணர்ச்சி மேலோங்கப் பெற்றவராய் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆர்வமும் ஆளுமையும் உடையவராக விளங்கினார். தமிழ்க் கல்வி பாரம்பரியத்தோடு கூடிய கலைவாணர் பரம்பரையில் வந்த சிற் கைலாசப் பிள்ளையின் ஞானப்பார்வை அடிகளாரை ஆட்கொண்டமையினாலே அடிகளாரால் யாழ்நூல் என்னும் ஒப்பற்ற கலைப்படைப்பினை படைக்க முடிந்தது. "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் நாவுக்கரசரின் திருவாக்கினை நாவலரவர்களும் அவர் தம் பரம்பரையும் பொன்போற் போற்றி செயற்பட்டது போலவே அடிகளாரும் செயற்பட்டு சைவம், தமிழ், கலை முதலானவற்றின் வரலாற்றினை வளம்படுத்தினர் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புக்கள்

1. கணேசையர், சி. 1939 ஈழநாட்டு தமிழ்ப் புலவர் சரித்திரம் திருமகள் அச்சகம், சுன்னாகம் பக் 127 128.

2. மேலது நூல், பக், 129 132

3. தமிழ் நாட்டிலுள்ள தொழுவூரில் வாழ்ந்த செங்கல்வராய முதலியாருக்கும் ஏலாவார் குழலிம்மைக்கும் மகனாக 1832 ஞு ஆவணி மீ 3ந் திகதி பிறந்தார். இவர் இராமலிங்க அடிகளாரின் முதல் மகனாவார். அடிகளார் பாடிய பாடல்களைத் தொகுத்து அவற்றை திருமுறை களாக வகுத்து திருவருட்பா என்னும் பெயர் கொடுத்து வெளிப்படுத்தினார். நாவலரவர்கள் அடிகளாரின் அநுபூதியில் நம்பிக்கையற்றவராய் அதனைப் போலி எனக் கொண்டு எதிர்த்து போலியருட்பா மறுப்பு (1819) என்னும் நூலிலே எழுதி வெளியிட்டார். இந் நூலுக்குப் பிரதி கண்டனமாகப் இவர் குதர்க்க காரண்ய நாகமகாபரசு என்னும் நூலினையும் பத்துக்கு மேற்பட்ட உரைநடை நூல்களையும் நாற்பதுக்கு மேற்பட்ட பிரபந்தங்களையும் பாடியுள்ளார். 1889ம் வருடம் மாசி 22ந் திகதி இவர் தேகவியோகம் அடைந்தார்.

4. கணேசையர் சி, மேலது நூல் பக், 129

5. மேலது நூல் 131

6. மேலது நூல் 129

7. செத்தமிழ் 1913

8. கணேசையர், சி. மேலது நூல் பக். 129

9. மேலது நூல் பக். 136

10. மேலது நூல், பக். 136

11. மேலது நூல், பக். 130 133

12. இவர் யாழ்ப்பாணத்திலுள்ள கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் மாணக்கர். தமிழ், ஆங்கிலம், சங்கதம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். கல்வித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியவர். உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி, திருவாசக உண்மை ஆகிய நூல்களை எழுதியவர். புதுச்சேரியில் இருந்து வித்தகம் என்னும் பத்திரிகையை நடத்தியவர். இதனால் இவர் வித்தகம் கந்தையா எனச் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்.

13. கணேசையர், சி. மேலது நூல் பக். 129

14. விபுலானந்த சுவாமி, 1947 யாழ் நூல், கரந்தை தமிழ்ச் சங்க வெளியீடு, தஞ்சை, பக் 29

15. மேலது நூல், பக் 29

16. கலைக்களஞ்சியம், 1961 தொகுதி 8, தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, பக். 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அ. கலைக்களஞ்சியம் 1963, தொகுதி. தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை 446

ஆ. பூலோக சிங்கம் பொ. 1991, யாழும் வீணையும், தேசிய தமிழ் சாகித்திய விழாச் சிறப்பு மலர், பக் 25

18. கலைக்களஞ்சியம், 1961, தொகுதி, 8. பக். 583

19. கலைக்களஞ்சியம் 1963 தொகுதி 8 பக். 446

20. மேலது நூல். பக். 446

21. சேர். பொன் அருணாசலம் அவர்கள் மேற்படி நூல்களையும் மாண்டூக்கிய உபநிஷத், திருக்கோவையார் தம்மபதம், திருமுருகாற்றுப்படை முதலான நூல்களையும் சேர்த்து Studies and Translations - Philosophical and religious என்னும் பெயரிட்டு. 1937 ஆம் ஆண்டு வெளிப்படுத்தினார்.

22. இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். 1869ம் வருடம் ஆவணி 19ந் திகதி பிறந்தவர். யாழ்ப்பாணம் அர்ச். யோன் கல்லூரிகளில் பயின்றவர். Ceylon Review (சிலோன் றிவியூ. Period என்னும் பத்திரிகைகளை நடத்தியவர். இவர் சிறந்த சட்டத்தரணி, சட்ட வல்லுனர், (Barristor) கிறிஸ்தவகுரு, தமிழ் மக்களின் சமயம், இலக்கியம், கலை தத்துவம் என்பனவற்றை மேலை நாட்டார் அறிதல் வேண்டும் என்னும் பெருவிருப்பம் கொண்டவர். அவ்வகையில் அவர் A Tamil Mystic, Posqleams of Grad, In the days of Samba Siva, Golden Verse collection of Ceylon முதலான நூல்களை எழுதினார். 1941 இல் இவர் தேகவியோகம் அடைந்தார்.

23. வித்தியானந்தன், 1969, தமிழ் முதற் பேராசிரியர், அடிகளார் படிவமலர், சிலை நிறுவனக்குழு வெளியீடு, காரைதீவு. பக். 53

24. பெரியதம்பிப்பிள்ளை, ஆ. ஒப் 1982, உள்ளதும் நல்லதும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்ற வெளியீடு, மட்டக்களப்பு பக். 64

25. கணேசையர் சி. மேலது நூல். பக். 132

26. அம்பிகைபாகன் ச, 1976 "விபுலானந்தர் கடிதம்" விபுலானந்த உள்ளம், விபுலானந்த அச்சகம், யாழ்ப்பாணம். பக்கம் 63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தில் விற்பனைக்குள்ள நூல்கள்

1) நல்லதோர் வீணை - தி. முத்துக்கிருஷ்ணன்	ரூ.	50.00
2) இலக்கியமும் பண்பாடும் - டாக்டர். இ. சுந்தரமூர்த்தி	ரூ.	40.00
3) பொருள்கோள் - ச. அரங்கராசன்	ரூ.	68.75
4) மக்கள் பெயராய்வு - டாக்டர். சு. சக்திவேல்	ரூ.	30.00
5) கலித்துறைப் பாட்டியல்	ரூ.	50.00
6) வ. உ. சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும் - அ. சங்கரவல்லி நாயகம்	ரூ.	120.00
7) பொன்வால் நரி - பாரதியார்	ரூ.	12.50
8) நவீன இலக்கியச் சிந்தனைகள் - முனைவர் ம. மதியழகன்	ரூ.	87.50
9) புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம் - டாக்டர். இரா. சம்பத்	ரூ.	150.00
10) அறிவியல் உருவாக்கத் தமிழ்	ரூ.	32.00
11) தமிழியல் ஆய்வு வரலாறு - முனைவர். ம. மதியழகன்	ரூ.	100.00
12) தற்கால இந்தியச் சிறுகதைகள் பாகம் 1	ரூ.	125.00
13) அறிவியல் அகராதி	ரூ.	312.50
14) பெரியபுராணம் ஓர் ஆய்வு - பேராசிரியர். அ. ச. ஞானசம்பந்தன்	ரூ.	420.00
15) கோணேசர் கல்வெட்டு	ரூ.	60.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org